சுவிஸ் மூர்த்தி மாஸ்ரர்

# நுனிப்புல் மேய்தல்



302.5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6


**Lebara Library, Kanambigaikulam, Kilinohchi.**

**முக்கிய அறிவித்தல்**

நீங்கள் எடுத்துச் செல்லும் புத்தகத்தில் கீறுதல், வெட்டுதல், கிழித்தல், அழித்தல், அழுக்குப்படியவிடல் மற்றும் ஊறுபாடுகளைச் செய்ய வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறோம். புத்தகங்களை நீங்கள் எடுக்கும் பொழுது இப்படியான குறைபாடுகளைக் கண்டால் நூலகப் பொறுப்பாளருக்கு உடன் தெரிவிக்கவும். அல்லாவிடில் நீங்கள் எடுத்துச் சென்ற புத்தகம் நல்ல நிலையில் இருந்ததெனக் கருதப்படுவதுடன் ஊறுபாடுகளுக்கு நூலகப் பொறுப்பாளரினால் விதிக்கப்படும் தண்டத்தை நீங்கள் ஏற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுனிப்புல் மேய்தல்

(அடைக்கல அவலங்களும் முந்தைய அனுபவங்களும்)

LEBARA LIBRARY
Education Resource Center
(ERC)
87, Kanahambigaikulam,
Kilinochchi.

**சுவிஸ் மூர்த்தி மாஸ்ரர்**

005389

காந்தளகம்

4, முதல் மாடி, ரகிசா கட்டடம்,
68, அண்ணா சாலை, சென்னை - 600 002.
தொ.பே. : 044 - 2841 4505
மின்னஞ்சல் : tamilnool@tamilnool.com
மின்னம்பலம் : www.tamilnool.com, www.thevaaram.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
5389

முதற்பதிப்பு : திருவள்ளுவர் ஆண்டு 2044 (2013)

உரிமை : ஆசிரியருக்கு

அபுதஎ ISBN : 978 - 81 - 89708 - 48 - 1

விலை : இந்திய ரூ. 100

அச்சிடல் தயாரிப்பு:

காந்தளகம்

4, முதல் மாடி, ரகிசா கட்டடம்,

68, அண்ணா சாலை,

சென்னை - 600 002.

தொ.பே. : 0091 - 44 - 2841 4505

மின்னஞ்சல் : tamilnool@tamilnool.com

மின்னம்பலம் : www.tamilnool.com, www.thevaaram.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


நுனிப்புல் மேய்தல் - ஒரு கண்ணோட்டம்
- கங்கைமகன் 5

புலம்பெயர் சமூகச் சூழலின் சொல்லோவியம்
- மறவன்புலவு க. சச்சிதானந்தன் 13

நண்பனாய் நூலாசிரியராய்..
- எம். வை. எம். சித்தீக் 17

வரிகளின் வலிமை
- பூ. சிறீதரசிங் 20

வரலாற்றுப் பதிவுகள்
- வி. தேவராஜ் 23

வாத்தியாரின் வரிகளில்..
- ஆ. விவேகானந்தா 27

வாழ்த்தக் கிடைத்த விதியின் வசத்திற்கு நன்றி
- ரி. என். ரூபி 30

சமூகப் பார்வையின் அவலப் பதிவுகள்
- கோவை. நந்தன் 32

என்னுரை 35

1. பெண்ணடிமை மேற்கில் நம் பெண்கள் 37

2. ஐரோப்பியத் தமிழ்த் திருமணம் 42

3. தொடரும் தாமதம் 47

4. என் மனைவி என் தந்தையின் மனைவியாக அழைக்கப்பட்டாள் 50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பயம் 54

6. சீட்டும் சீரழிவும் 56

7. தூரத்து விடி வெள்ளி ஒரு தந்தையின் பார்வை 61

8. மரம் 64

9. பிஞ்சுகள் மீதான பாலியல் வன்முறைகளும் வடுக்களும் 66

10. கயவனால் காயப்படுத்தப்பட்ட எட்டு வயதுச் சிறுவன் 73

11. இவர்களையும் இனம் காணுவோம் 77

12. மொழிபெயர்ப்பாளரின் வேதனை 80

13. வேதனை அவளுக்கும் தான் 88

14. முதுமையின் நட்பு 97

15. உயரப் பறந்த எங்கள் வீடு 104

16. பிணக் குவியலிலிருந்து உயிர் பிழைத்தவன் நான் 113

17. மருத்துவத்தின் மறுபக்கம் 128

18. புகழைத்தேடி 134

19. அன்னியனே வெளியேறு 141

20. அகதி 147

21. சிறுவர் பாடசாலையில் தமிழ்ப் பிஞ்சுகளின் வேதனை 160

22. உதவி 170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுனிப்புல் மேய்தல் – ஒரு கண்ணோட்டம்

கங்கைமகன்

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்.** குறள் 517

என் கண்ணுக்குள் இப்பொழுதும் ஒரு விம்பம் இத்தொகுப்பை வாசித்த பின்னரும் தெரிந்துகொண்டே இருக்கின்றது. 1977ஆம் ஆண்டு ஆவணி மாதம் 23ஆம் திகதி புதிய மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விரிவுரைகளை முடித்துத் தேனீர்ச் சாலையை நோக்கி நடந்துகொண்டிருந்தார்கள். புதிய மாணவர்களைப் பகிடிவதை செய்வதற்கென்று சில சிரேஸ்ட மாணவர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நகர்ந்து கொண்டிருந்தார் கள். நானும் புதிய மாணவன் என்றபடியால் பகிடிவதைக்கு நடுவே தப்பித்துக் கொள்ளும் முயற்சியில் வெளியேறிக் கொண்டிருந்தேன்.

தூரத்தில் ஒரு உருவம் கழகத்தின் பிரதான வாயில் ஊடாக உள்நுழைந்து கொண்டிருந்தது. பட்டர் கலரில் ஒரு களிசான்; வெள்ளையில் நீலமும் சிவப்புமாக மெல்லிய கோடுகள் போட்ட ஒரு சட்டை. சில்வர் செயின் போட்ட ஒரு விலையுயர்ந்த கடிகாரம் அவரது கையில் அன்றைய நாகரிகத்திற்கு ஏற்றதுபோல் லூசாகக் கிடந்தது. அவர் இரண்டாம் வருட மாணவராக இருந்தாலும் என்னைப் பகிடிவதை செய்யமாட்டார் என்பதை அவரது முகத்தின் பாவனை காட்டிக்கொண்டிருந்தது. மெலிந்த தோற்றமும் வெள்ளை நிறமும் கொண்ட அவர் என்னைக் கடந்து சென்ற விதம் ஏதோ ஒரு பாடத்தின் விரிவுரையாளரோ என்றும் எண்ணத் தோன்றியது. நான் விரிவுரை மண்டபங்களில் கற்றதைவிட வெளியில் கற்றவைகளும் தேடியவைகளுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம். அந்தவகையில் என் தேடலின் முதலாவது தெரிவாக இவரை நண்பராக அடையும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவர்தான் இந்த 'நுனிப்புல் மேய்தல்' என்ற நூலின் கதை ஆசிரியர் நாகேஸ் உருத்திரமூர்த்தி ஆவார். அவரது நிறத்தைப்போல் அவரது மனமும் வெள்ளை என்பதைப் பழகப் பழகப் புரிந்துகொண்ட அந்த நாட்களை இப்பொழுதும் நினைத்துப் பார்க்கின்றேன்.

அவரது முகத்தைப் பார்த்து நான் அனுமானித்ததுபோல பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டு இருக்கும் காலத்தி லேயே தனியார் கல்வி நிலையங்களில் விரிவுரைகளை நடாத்தி வந்தார் என்பதனை அறிந்துகொண்டேன். 'ஒரே நாளில் ஆங்கிலம் பேசலாம்' என்பது இவரது தொழிலின் இரகசியம் என்பதனால் ஆங்கிலம் கற்பிப்பதிலும் பெயர் பெற்ற ஒரு ஆசானாக விளங்கினார் என்பதனை இவரை அறிந்தவர்கள் அறிவார்கள். தான் மட்டும் வாழ நினைக்காது தன்னோடு இருப்பவர்களின் திறமையும் தகுதியும் அறிந்து அவர்களின் முன்னேற்றங்களுக்குத் தன்னாலான உதவிகள் செய்யும் மனப்பான்மை கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நான் படிக்கும் காலத்தில் எனக்கும் தனியார் கல்வி நிறுவனங்களில் ஆசிரிய வேலை வாய்ப்பு களை ஏற்படுத்தித் தந்தவர். இவ்வாறான மனதிற்கு இசைந்த மதிப்பிற்கு உரிய செயல்களைப் புரிந்ததால் பல்கலைக் கழகத்தில் எல்லோரையும் 'மச்சான்' என்று அழைக்கும் வழமையில் வாழ்ந்த நான் இவரை மட்டும் 'மூர்த்தி அண்ணா' என்று அழைக்கும் மரியாதைக்குரியவராக ஆக்கிக் கொண்டேன். 'பசுமை நிறைந்த நினைவுகளில் பாடித்திரிந்த பறவைகள் நாம் பறந்து செல்கின்றோம்' என்ற பாடலில் 'எந்த ஊரில் எந்த நாட்டில் எங்கு காண்போமோ...' என்ற வரியை மனதில் தாங்கிப் படிப்பு முடிந்த அன்றைய நாட்களில் பட்டங்களுடன் பறந்து சென்றுவிட்டோம்.

1983ஆம் ஆண்டு தைமாதம் 14ஆம் திகதி சுவிற்சர்லாந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் தலைநகரத்தில் 'காசாவைலர்' என்ற அகதிகள் முகாமில் ஒரு பொங்கல் விழா. ஒரு இனத்தின் கலாச்சார வேர் முதன் முதலாகச் சுவிசில் நாட்டப்பட்ட அந்த நாட்கள். விழா நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை 'என்ன இங்க நிற்கிறீர்' என்று ஒருவர் வந்து என் கையைப்பிடித்து மகிழ்ச்சி ஆரவாரத்தில் கட்டிப்பிடித்து ஆரத்தழுவினார். எதிர்பாராத சந்திப்பு; அதுவும் மூர்த்தி அண்ணாவுடன்! என் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவரைச் சந்தித்ததில் இருந்து சுவிசில் முதல் முதலாகச் சோறு சாப்பிடத் தந்து தனது இல்லத்தில் தங்கவைத்துக் கொண்டார். 'எந்த ஊரில், எந்த நாட்டில்' என்ற வரிகளுக்கு அர்த்தம் புரிந்துவிட்டதையும் உணர்ந்து கொண்டேன்.

உன்னைப் பற்றி நீயே இந்த உலகத்திற்குக் கூறும்போது தான் உலகம் உன்னைப்பற்றித் தெரிந்து கொள்ளும் என்பது ஆங்கிலேயர்களின் நல்ல சிந்தனைகளில் ஒன்று. ஆனால் ஒரு தமிழன் தன்னைப்பற்றியும் தனது திறமை பற்றியும் பிறருக்குக் கூறும்போது 'தற்புகழ்ச்சிக்காரர்' என்று இவர் வாழும் தமிழ்ச் சமூகம் புதிய பட்டத்தை வழங்கி வரவேற் கின்றது. இதனால் ஒவ்வொருவரது திறமைகளும் பூரணத் துவமாக வெளிக்கொணரப் படாமைக்கு நாம் வாழும் தமிழ்ச் சமுதாயமும் காரணமாக அமைந்து விடுகின்றது. தமிழர் களின் கண்டுபிடிப்புகள் பிறருக்குக் கற்றுக்கொடுக்கப் படாமலே கண்மூடிவிடுகின்றன என்பதுவும் உண்மையாகி விடுகின்றது.

எல்லோரும் கதாநாயகர்கள் என்பதைவிட எல்லோரும் கதாசிரியர்கள் என்ற 'றெக்மான்' என்பவரின் கூற்று முழுக்க முழுக்க இந்தக் கதாசிரியருக்கும் பொருத்தமானது என்பதுவே எனது முடிவாகும். 'நான்' என்ற ஒருவனது மையப்புள்ளிக்குள் அடைக்கப்பட்ட சிந்தனைகள் சமூக அவலங்களைக் கண்டு சினங்கொண்டு வெளிவரும்போது அனைத்துச் சிந்தனைகளின் மொத்த வடிவமாக ஒரு விம்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தினரால் தோற்றுவிக்கப்படுகின்றது. இவ் ஆக்கங் களை வாசித்த பின்னர் அந்த விம்பமானது தெரியாதவர் களுக்கு 'அவன்' என்றும் தெரிந்தவர்களுக்கு 'மூர்த்தி மாஸ்ரர்' என்றும் கதைகளை வாசிப்பவர்களின் மனங்களில் படமாகப் பிரதியீடு செய்யப்படுகின்றது. (இவரைத் தெரியாத தமிழர்கள் சுவிற்சர்லாந்தில் இல்லை என்றே கூறலாம்)

இவரது ஆக்கத் தொகுப்பின் தலைப்பு சிறிது வித்தியாச மானது. ஒரு விடயத்தை ஆழ அறிந்து அதன் உண்மைத் தன்மையை அறிய முற்பட விரும்பாத ஒரு செய்கையினை அதாவது ஒன்றை மேலெழுந்த வாரியாக அறிந்துவிட்டு முழுவதும் தெரிந்ததுபோல் பிதற்றிக் கொள்ளும் நிலை யினை விளங்கப்படுத்துவதற்கு 'நுனிப்புல் மேய்தல்' என்ற தலைப்பைத் தவிர வேறு எந்தத் தலைப்பை இட்டாலும் ஆக்கங்களில் எடுத்துக்கொண்ட பொருளுக்குச் சாதகமாக அமையாது. சுவிற்சர்லாந்திற்கு வந்து வாழும் பெரும் பாலான தமிழர்கள் எல்லாத் துறைகளிலும் நுனிப் புல்லையே மேய்ந்துவிட்டு எல்லாம் தெரிந்தவர் போல் அவரையறியாமலே நடிப்பதை இந்த ஆக்கங்களுக்குள் காட்சிப் படுத்தியுள்ள தன்மை கதாசிரியரின் ஒரு வித்துவமாகும். அதேபோல் தமிழர்கள் மட்டுமல்ல சுவிஸ் மக்களும் தமிழர்கள் இங்கு வந்த காலக்கட்டத்தில் எங்களைப் பற்றியும் எங்கள் பிரச்சனைகள் பற்றியும் நுனிப் புல்லையே மேய்ந்து நின்றார்கள் என்பதுவும் இத்தலைப்பி னூடு உள்வாங்கப்படுகின்றது. ஔவையின் சித்தாந்தமாகிய 'கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு' என்ற கருத்தையும் இவரது நுனிப்புல் மேய்தல் என்ற தலைப்புத் தாங்கி நிற்பது ஒரு சிறப்பம்சமாகும்.

இலக்கியம் என்பது சமூகத்தைச் சித்தரித்துக் காட்டும் கண்ணாடி போன்றது. ஒரு காலத்தில் எழுந்த இலக்கிய மானது அது எழுந்த காலப் பகுதிக்குள் அடக்கப்பட்ட அத்தனை கருப்பொருளுக்கும் உரிய உண்மைத் தன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினைக் கொண்டிருத்தல் அவசியமாகிறது. இந்த வகையில் 'நுனிப்புல் மேய்தல்' என்ற தொகுப்பானது அது எழுந்த காலப்பகுதிக்குள் கொண்டுள்ள தலைப்புகளின் பிரதியீடு களை புலம்பெயர் தமிழர் வாழ்வில் வெள்ளிடை மலை யாகப் பிரதிபலிப்பதை இதை வாசிப்பவர்கள் நன்கு அறிந்து கொள்வார்கள். ஒரு இலக்கியம் என்பது பழமை பேணும் மரபினைத் தன்னகத்தே கொண்டிருத்தல் என்பதனை மையப்படுத்தி மரபுச் சொற்களுக்குப் பதிலாகப் புதிய தேசவழமைச் சொற்களையும் பேச்சுத் தமிழ்ச் சொற்களையும் ஐரோப்பியத் தமிழருக்குள் தங்களையும் அறியாமல் வந்து புகுந்த (இறங்கிறன், அடிக்கிறன், என்ன, மணி, கயிறு, சுத்துறான்) சொற்களையும் கொண்டு கதைகளை யாத்திருப்பது அவரது முனைப்பிற்கு ஒரு முன்னுதாரண மாகும்.

ஒரு எழுத்தாளன் உலகத்தில் தோற்றுவிக்கப்பட வேண்டுமாக இருந்தால் அவனது சிந்தனைகளுக்கு வலுச்சேர்க்கும் ஒத்த சிந்தனையாளர்களும் சமூகத்தில் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். அதையே 'ஒருவன் தனது கருத்தைச் சொல்லுவதற்கு நீ தடையாக இருந்தால் உனது உயிரைக் கொடுத்தாவது அதை நிறைவேற்று' என்று சொல்கின்றார்கள். எழுத வேண்டும் என்ற ஆசையும் தகவல்களைச் சேகரிக்க வேண்டும் என்ற விருப்பமும் பலருக்கு இருந்தாலும் எழுதவேண்டும் என்ற தன்னுணர்வு ஒரு சிலருக்கு மட்டுமே தோன்றுகின்றது.

'நுனிப்புல் மேய்தல்' என்ற தலைப்பின்கீழ் 'அடைக்கல நாட்டில் எங்கள் அவலங்கள்' என்பதனைத் தனித்தனித் தலைப்புகளாகப் பிரித்து பக்கச் சார்பற்று உண்மை நிலைமைகளை வாசிப்பவர்களுக்குப் புரிய வைத்திருப்பது எதிர்காலத் தமிழ்ச் சந்ததியினர் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு வரலாற்றுப் பாடமாகவே நான் கருதுகின்றேன். காலத்தை ஒருவன் எழுதும்போது அது வரலாறாகவும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் ஒருவனை எழுதும்போது அது சுயசரிதமாகவும் அமைந்து விடுகின்றது. அந்தவகையில் இவரது நூல் காலத்தால் அழியாத ஒரு சுவிஸ் தமிழனின் பதிவாக; தமிழர் வரலாறு கூறும் ஒரு ஏடாக அனைவராலும் பாராட்டப்படும் என்பதில் ஐயமில்லை. 'நீ எந்த நாட்டில் இருக்கின்றாயோ அந்த நாட்டிற்கு விசுவாசமாக இரு' என்ற அறிஞர் அண்ணா அவர்களது சிந்தனையை நான் பலமுறை இந்த எழுத்தாளனில் பார்த்திருக்கின்றேன்.

இவரைச் சுவிசில் சந்தித்தபோது எங்கு வேலை செய்கின்றீர்கள் எனக் கேட்டதற்கு 'உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலையின் இயந்திர அறையில் எனது வேலை. இயந்திரங்களைப் பழுதுபார்த்தலும் சுத்தப்படுத்துவதும் என் தொழில்' என்று குசினியில் பாத்திரங்கள் கழுவுவதை இவரைத்தவிர வேறு ஒருவரும் இவ்வளவு நாசூக்காகக் கூற முடியாது. அன்றிலிருந்தே இவர் ஒரு எழுத்தாளர் ஆகிவிட்டார் என்பதுவே என் கணிப்பாக இருந்தது. இன்று இந்த நூலைப் பார்த்தபோது 30 வருட எழுத்தாளனின் அனுபவப் பதிவுகளைப் பார்த்துப் பேருவகை கொண்டேன்.

'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்' என்பதுபோல தான் கற்ற அல்லது தனக்குக் கிடைத்த ஒரு தொழிலுடன் மட்டும் நில்லாது அந்நிய நாட்டில் தனது ஆளுமைகளைப் பயன் படுத்திக் குறிப்பாக மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றி தமிழ்த் தொலைக்காட்சிப் பங்காளராகவும் மென்பொருள் வெளியீட்டாளராகவும் தன்னை இனம் காட்டித் தமிழுக்கும் தமிழர்களுக்கும் பெருமை சேர்த்தார் என்ற சிறப்பு இந்த நூலாசிரியரையே சாரும்.

இந்நூலில் 20க்கும் மேற்பட்ட சிறு ஆக்கங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் 80 வீதத்திற்கு மேற்பட்டவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே பல ஐரோப்பியப் பத்திரிகை, சஞ்சிகை மற்றும் வெளியீடுகளில் வெளிவந்திருக்கின்றன. இருந்தும் அவை தற்போதும் வாசிப்பில் இருக்கின்றதா என்றால் இல்லை என்றே பதில் எமக்குக் கிடைக்கின்றது. அந்தவகையில் ஆசிரியரால் வெளியாக்கப்பட்ட ஆக்கங்கள் இந்த நூலிலும் பதிவாகியிருப்பது சமுதாய நலன் பேணும் ஒரு முயற்சி யாகும். வாசிப்பவர் மனங்களில் ஒரு யாசிப்பை உருவாக்க வேண்டும் என்பதற்காக அனைத்து ஆக்கங்களின் சுவடுகளை யும் இங்கு நான் அடையாளப்படுத்த விரும்பவில்லை.

'ஐரோப்பியத் தமிழ்த் திருமணம்' என்ற தலைப்பில் வீடியோக்காரர் நடாத்தும் ஒரு நாடகமே தமிழ்த் திருமணம் என்று கலாச்சாரத்திற்குக் கொடுத்த அடி, வாசித்த எனக்கு இன்னும் வலிக்கிறது. ஒரு கவிஞன் தமிழ்த் திருமணத்தைப் பற்றிக் கூறும்போது, 'எல்லாம் வந்தாலும் ஒன்று வரா விட்டால் ஒன்றுமே நடக்காது' - அதுதான் வீடியோ! வீடியோவையும் வீடியோக்காரரையும் போலித் தாய் தகப்பனையும் வாடகைக்குப் பிடிப்பது உலகத்தில் புலம் பெயர் தமிழர் கலியாணங்களில்தான். 'பிஞ்சுகள் மீதான பாலியல் வன்முறைகளும் வடுக்களும்', 'கயவனால் காயப் படுத்தப்பட்ட எட்டு வயதுச் சிறுவன்', 'பிணக் குவியலி லிருந்து உயிர் பிழைத்தவன் நான்', 'வேதனை அவளுக்கும் தான்' போன்ற கதைகள் வாசிப்பவர் நெஞ்சங்களை நெகிழ வைக்கின்றன. நாடகங்களில் நகைச்சுவை ஏற்றுவதுபோல பல கதைகளின் இடையிடையே 'எங்கடையள் பிடிச்சுடுங்கள்', வயோதிகர் இல்லத்தில் தகப்பனுக்குப் பூக் கொடுப்பதை 'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி' என்று வர்ணித்திருப்பது, கதைகளுக்கு மெருகூட்டுகின்றன. 'முதுமையின் நட்பு' என்ற தலைப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கும் விதம் அருமை.

'ஒரு மனிதனின் ஆக்கம் ஒருவனை மனிதனாக்கும்' என்று 'சுவிஸ்தமிழர்' ஆசிரியர் குறிப்பிட்டதை நினைத்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கின்றேன். மூர்த்தி அண்ணாவின் ஆக்கங்கள் ஒருவனை மட்டுமல்ல ஒரு சமுதாயத்தையே மனிதர்களாக மாற்ற வேண்டும் என்பதே என் பேரவாவாகும்.

நேற்றைய தினம் ஓர் ஆற்றைப் பார்த்தோம். இன்றைய தினமும் அதே ஆற்றைப் பார்க்கின்றோம். நேற்றுப் பார்த்ததும் இதே ஆறுதான் என்று எண்ணி விடுகிறோம். ஆனால் நேற்றைய தண்ணீர் இன்று பார்த்த அதே ஆற்றில் இருப்பதில்லை. அந்த இடத்தில் புதிய நீர் வந்து விட்டது. இதை ஒருவரும் உணர்வதில்லை. அதேபோல்தான் நேற்றுப் பார்த்த மூர்த்தி மாஸ்ரரை இன்றும் பார்க்கிறோம். ஆனால் நேற்றைய இன்றைய மூர்த்தி மாஸ்ரருக்கு இடையில் என்ன நடந்தது என்பதைப் புதிதாக ஆற்றுக்குள் வந்த நீர் போல் ஒருவரும் உணர்வதில்லை. அதனை உணர்த்துவதே உங்கள் கைகளில் இருக்கும் இந்த ‘நுனிப்புல் மேய்தல்’ என்ற தொகுப்பாகும். இவர் இன்னும் பல தொகுப்புகளை எழுதுவது இதன் வெற்றியிலேயே தங்கியுள்ளது என்ற நம்பிக்கையை வாசகர்களாகிய உங்களிடமே அர்ப்பணித்து விடைபெறுகிறேன்.

**தோன்றிற் புகழோடு தோன்றுக அதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று** குறள் 236

மற்றவர்கள் தேடிவைத்த புகழோடு வாழ்வதை விடத் தன் செயலால் புகழடைவதே சிறப்பாகும்.

அன்புடன்
**கங்கைமகன்**
(நயினை சிறி - சுவிற்சர்லாந்து)

*20.04.2013*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் சமூகச் சூழலின் சொல்லோவியம்

மறவன்புலவு க. சச்சிதானந்தன்

கூரையை மட்டுமா காணவில்லை. வீட்டையே காணவில்லை.

வீடு இருந்த இடமே தெரியவில்லை. அந்தக் காட்சியால் கண்கள் உறைந்தன, உள்ளமும் உறைந்தது.

உடல் இருக்கிறது. ஆனால் உயிர் உடலில் இருக்கிறதா என்று தெரியாத அளவுக்கு விறைப்பு. பிணங்களின் குவியலுள் இருந்தது உடல். எனினும் உயிர் பிழைத்தது.

உயிரைக் கையில் பிடித்துத் தப்பி, இந்தியாவுக்குக் கள்ளப் படகுப் பயணம். இரணைதீவில் இடைத் தங்கல். இராமேச்சரத்தில் கரையேறல்.

இந்தியாவில் இருந்து சுவிற்சர்லாந்துக்குக் கள்ள வானவனாய்ப் பயணம். அடைக்கலம் தந்த நாடு. எனினும் உணர்வுகள் விரிந்து உடமைகள் எரிந்த ஊரில் உள்ளம் அடைக்கலம் தேடியது.

இலங்கைப் பெண்கள் உரிமையற்றவர்களாம். சுவிற்சர்லாந்து வெள்ளையரின் கிண்டல். இரண்டு ஆண்டுகளுக்கு முன்புவரை பெண்களுக்கு வாக்குரிமை வழங்காத மாநிலத்தவரான வெள்ளையர், பெண்கள் தேர்தலில் போட்டியிட்டால் ஆணாதிக்க வழி அடக்கும் வெள்ளையர், தமிழரைப் பார்த்து, அதுவும் தாயாதிச் சமூகமான ஈழத் தமிழ்ச் சமூகத்தைப் பார்த்துக் கிண்டல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிற்சர்லாந்தில் யேர்மன், பிரஞ்சு, இத்தாலி என மொழிகள். குழந்தைகள் பள்ளிக்குச் சென்றால் உள்ளூர் மொழியைக் கட்டாயம் கற்கும் நிலை. சிங்களத்தைக் கற்க மறுத்த நிலையில் வேற்று நாட்டு மொழியைப் பிஞ்சுகளில் திணிக்க அடைக்கலம் தேடிய அல்லல்.

வீட்டில் அப்பப்பா, அம்மம்மா, பாட்டன், பாட்டி என்று வாழ்ந்தோர், முதியோர் இல்லங்களில் முடங்கவே அடைக்கலம் தேடினர். அங்கு முரண்டு பிடித்துக் கண்ணீர்விடும் அல்லல்.

சட்டங்களின் சந்துபொந்துகளுள் நுழைதல். சட்ட வலிமையை மூளையின் வலிமையுடன் சந்தித்தல். மொழி தெரிந்தும் மொழிபெயர்ப்பாளரை நாடல். இவை அடைக்கலம் தேடியோரின் படைக்கலங்கள்.

படப்பிடிப்பாளர் திருமணத்தை நடத்துகிறாரா? தமிழல்லாத மொழியில் கடவுளுடன் பேசுபவர் திருமணத்தை நடத்துகிறாரா? ஓராண்டு ஒரே அறைக்குள் வாழ்ந்த ஆணும் பெண்ணும் திருமண நாளுக்கு முன் தனித்தனி வீட்டில் வாழ்ந்து திருமணத்தின் பின் அதே அறைக்குள் அடைக்கலம் தேடும் புதிர்கள் பொதிந்த தமிழர் திருமணங்கள் அடைக்கலந் தேடியதால்.

பிறந்தவுடன் ஒருவருக்கு ஒரு பெயர். பிறக்கும் அவருக்கு அவரது அப்பா பெயர் முன்னால் வரும். ஆனாலும் முதற் பெயர் தருக, குடும்பப் பெயர் தருக எனக் கேட்கும் முரணால் தந்தையின் மனைவியாகும் தனயனின் மனைவி, தந்தையின் மகனாகும் தனயனின் மகன், அடைக்கலம் கேட்டதால் அநுபவிக்கும் அல்லல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைந்து பணம் பெருக்க வழிகளைத் தேடி, சீட்டுக்குப் பணம் செலுத்தி, பணமும் தேடாது, குடும்பங்கள் சிதைய, குடிகாரர் பெருக, அடைக்கலம் தேடியதால் அல்லல்.

மண்ணின் மக்களுக்காம் சுவிற்சர்லாந்து. மண்ணின் மக்களைத் தவிர பிற யாவுமே அங்கு இறக்குமதி. உள்ளூர் உற்பத்திப் பொருளுக்கு உலகம் சந்தையாகவேண்டும். உலகின் திரண்டு வழியும் பணம் வங்கிகளுக்கு வரவேண்டும். உலகோர் வரவேண்டாமாம், மண்ணின் சில மக்களின் மனப்போக்கு.

ஆழ வேரோடும் கருத்துரைகள். அகலவேர் விரிக்கும் பொருளுரைகள். ஆனாலும் தன்னடக்கத்துடன் நுனிப்புல் மேய்வதாகத் தலைப்பு.

நாகேஸ் உருத்திரமூர்த்தி அவர்களைப் பல்லாண்டுகளாக அறிவேன். அவருள் கலந்த உணர்வுகள் என்னுளும் கலந்தவை. அவர் நினைப்பதை நானும் நினைப்பவன். இந்தக் கருத்துரைகள் பலவற்றை நானே எழுத நினைப்பதுண்டு. அவர் தந்திருக்கிறார்.

அடைக்கலம் தேடியதால் அவர் கட்டிழந்தாரா? இல்லை. அவரது கட்டுக்கோப்பான வாழ்க்கையின் அடைக்கலத் தேவை குறைந்ததும் அடம்பனுக்கே மீண்டார். தன்னிறைவான தற்சார்பான பொருளாதாரத்தைக் கட்டமைக்கலாம் என்ற உறுதி, செயலில் காட்டிய வேகம், அதற்காக அவரது ஈகை.

சுவிற்சர்லாந்திலும் தமிழோடு வாழ்ந்தவர். தமிழர் அடையாள உணர்வுகளை வளர்ப்பதை வாழ்வாக்கியவர். பல்முனைப் பயனாளி. பன்முகப் பயனாளி.

LEBARA LIBRARY
Education Resource Center
(ERC)
87, Kanahambigaikulam,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டுநர் பயிற்சிக் கையேட்டை அழகு தமிழாக்கியவர், அழகுப் பதிப்பாக்கியவர், அத்தகைய வெளியீடு தமிழில் வந்ததறியேன். அவ்வாறு பல முயற்சிகள் தமிழுக்காக, தமிழருக்காக. அதனால் பொருளாதாரக் கையறுநிலைக்கும் ஆளானவர்.

கலைமாமணி சீர்காழி சிவசிதம்பரம் அவரது உற்ற நண்பர். சென்னையில் அவரது இல்லமே இவரது இல்லமும். அது தமிழுறவு. அத்தகைய தமிழுறவுகள் இவருக்கு உலகெங்கும்.

தன் எழுத்துகளைத் தொகுத்து நூலாக்கும் உருத்திரமூர்த்தியின் வாசகர் வட்டமும் பரந்தது. காலங்களூடாக அவர் கருத்துக்கு வாய்க்கால் அமைத்து வாசகர் வட்டத்தைப் பல்வேறு இதழ்கள் பெருக்கின. இந்த நூல் வழியாக அவர் அந்தப் பதிவை உறுதி செய்துள்ளார்.

காலத்தின் கண்ணாடியான இந்தத் தொகுப்பு, 1983க்குப் பின்னர் எழுந்த புலம்பெயர் சமூகச் சூழலின் சொல்லோவியம். தொடர்ந்தும் உருத்திரமூர்த்தி அவர்கள் எழுத வேண்டும். கவிநயமும் கருத்து நயமும் மிளிரும் அவரின் படைப்பாற்றலால் ஞாலம் பயனுற வேண்டும்.

**மறவன்புலவு க. சச்சிதானந்தன்**
ஐ.நா. உணவு வேளாண் நிறுவன மேனாள் ஆலோசகர்,
காந்தளகம் பதிப்பக உரிமையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பனாய் நூலாசிரியராய்...

### எம். வை. எம். சித்தீக்

என் பல்கலைக்கழகத்தின் சக நண்பராகிய மூர்த்தி அவர்களைப் பற்றிய எனது முன்மொழிதலுக்குச் சந்தர்ப்பம் அளித்தமையையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். தான் வாழும் ஐரோப்பிய நாட்டில் புலம் பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழரின் வாழ்க்கை முறைகள், கலாச்சாரச் சீரழிவுகள், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றிய அவரது கண்ணோட்டம் மிகவும் பாராட்டத் தக்கது. அவரைப் பற்றியும், அவரைச் சுற்றியுள்ள சமூகத்தைப் பற்றியும் அவரது ஆழமான சிந்தனையின் முதிர்ந்த அனுபவமே இந்த 'நுனிப்புல் மேய்தல்' என்ற பதிவாகும்.

'நுனிப்புல் மேய்தல்' என்ற தலைப்பைத் தனது நூலுக்குக் கொடுத்திருந்தாலும் என்னைப் பொறுத்தவரை அவர் எல்லா விடயங்களையும் அடியொட்ட மேய்ந்திருக்கின்றார் என்பதுவே உண்மையாகிறது.

1996ஆம் ஆண்டில் இலண்டனில் வெளியாகிய *ஈழகேசரி* என்ற பத்திரிகையில் ஐரோப்பியர் அல்லாத பெண்கள் பற்றிய அவரது புரிந்துணர்வின் விளக்கம் அவரது சமூக ஆளுமைக்கு ஓர் அளவுகோலாகும்.

காலம் பொன்னானது என்பதைத் தனது பற்றுக்கோடாக வைத்திருக்கும் அவர், புலம் பெயர்ந்த வாழ்வில் மக்கள் பட்ட இன்னல்களையும், இழப்புகளையும், நன்மை, தீமைகளையும் தான் வாழும் சமூகத்திற்கு விளங்கப் படுத்துவதற்கு எடுத்துக் கொண்ட உதாரணங்கள் வாசிப்பவர் மனங்களில் என்றும் பதியக் கூடியவை என்றால் மிகையாகாது.

21.09.1995இல் *ஈழநாடு* பத்திரிகையில் வெளிவந்த

005339

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது சீட்டும் சீரழிவும் என்ற பதிவில், நடைமுறையில் புலம்பெயர்ந்த தமிழ் மக்களுக்குச் சீட்டுப் பிடிப்பதனால் ஏற்பட்ட சீரழிவுகளையும், அது எவ்வாறு குடும்பங்களைச் சின்னாபின்னப் படுத்தியது என்பதையும் தனக்கே உரிய பாணியில் வேறு ஒருவரும் சொல்லமுடியாத அளவுக்குப் புலப்படுத்தியிருந்த மூர்த்தி அவர்களையும் ஒரு எழுத்தாளன்தான் என்ற நிலைக்கு உயர்த்தியது.

பாலியல் வன்கொடுமை என்பது ஐரோப்பிய நாடுகளில் பொதுவான ஒரு விடயமாகும். அதனைத் தனது மென்மையான வார்த்தைகளால் வன்மையாகக் கண்டித்திருப்பது ஆசிரியரின் அனுபவ வீச்சாகும். சிறுவர்கள் மீதான இவ் வல்லுறவு முன்பின் தெரியாதவர்களால் மேற்கொள்ளப் படுகின்றதா என்ற கேள்வி ஒருபுறமிருக்க, குடும்ப உறவினர்களான மாமன், சித்தப்பா மற்றும் நண்பர்களாலும் நடாத்தப்படுகின்றது என்ற உண்மையை ஜீரணிக்க முடியாமல் இருக்கின்றது என்பதுவே அவரது முறைப்பாடாகும்.

மூர்த்தி பதிவுசெய்த தலைப்புகளில் நான் மிகவும் வாசித்து மகிழ்ந்தது “என் மனைவி என் தந்தையின் மனைவியாக அழைக்கப்பட்டாள்” என்ற பகுதியாகும். இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை குடும்பப் பெயர் என்ற ஒன்று இல்லை. தந்தையின் பெயரை முன்னுக்கு வைத்திருப்பதால் அதுவே ஐரோப்பாவில் அவரது பெயராகிவிடுகிறது. எனவே தந்தையின் பெயரே மகனுக்கு ஆகிவிடுகிறது. அதனால் எனது மனைவி என் தந்தையின் மனைவியாகிறாள் என்பது எழுத்தளவில் உண்மையாகிறது என்பதும், எனது மகன் என் தந்தையின் மகனாகிறான் என்பதும் மிகவும் பொருத்தமாகிறது. இதை அனுபவித்து ஆய்ந்த நண்பன் மூர்த்தி பாராட்டுதற்குரியவர். மூர்த்தி அவர்கள் கொடுத்திருக்கும் இந்த பெறுமதிமிக்க ஆலோசனை ஐரோப்பா வாழ் தமிழர்களுக்கு இன்றியமையாத ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தி அவர்கள் மக்களின் கவனக்குறைவால் ஏற்படும் சிறிய தவறுகளையும் அதன் விளைவுகளையும், உதாரண மாகப் பயணச்சீட்டு எடுக்காமல் பிரயாணம் செய்தல் போன்ற விடயங்களை ஒரு பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில் நாசூக்காகப் பதிவாக்கியிருப்பது அவரது துறைசார்ந்த அனுபவத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். அதனூடாக மக்கள் படிக்கவேண்டிய பாடங்கள் எவை என்பதைத் தெளிவுபடுத்தி இருக்கின்றார்.

இலங்கை யுத்தத்தால் ஏற்பட்ட பாதிப்புகளையும் கேடுகளையும் தனது பதிவில் விபரித்திருப்பது சமூகத்தின் தேவை கருதிய காலத்தின் கட்டளையாகும்.

இப் பதிவினை ஒரு கதைப் புத்தகம் என்றோ, கற்பனைக் கவிதை நூல் என்றோ குறிப்பிட்டு ஒதுக்கிவிட முடியாது. அவர் வாழ்ந்த சமூகத்தில் அக்கறைகொண்டு ஆழ்ந்து வேரூன்றிய அனுபவ உண்மை நிகழ்வுகளின் தொகுப்பென்றே கூறவேண்டும்.

இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் எங்கிருந்தாலும் இதனை வாசித்துப் பயன்பெற வேண்டும் என்பதும் இதுபோல் இன்னும்பல அனுபவப் பதிவுகளை ஆசிரியர் வெளிக்கொணர வேண்டும் என்பதுவும் என் வேணவா வாகும்.

இந்த நூலினூடாக வாசகர் மத்தியில் மூர்த்தி அவர்கள் விரும்பிய வெற்றிகளை அடைய என்றென்றும் அவரது நண்பனாய் இருந்து வாழ்த்துகிறேன்.

**எம். வை. எம். சித்தீக்**
யாழ் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகத் துறைத் தலைவர்,
கிழக்கு மாகாணப் பல்கலைக்கழகக் கல்லூரி இயக்குநர்,
இலண்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிகளின் வலிமை

**பூ. ஸ்ரீதரசிங்**

வாழ்வில் உன்னத தருணங்களுள் ஒன்று நல்லதொரு சகபாடியின் எழுத்துப் படையலுக்குத் தோரண வாயில் அமைப்பது.

உண்மைதான் அவரே சொல்லுவது போல் ஆசிரியராக, ஊடகக்காரராக, மொழிபெயர்ப்பாளராக, சமுதாயச் செயற்பாட்டாளராக, இன்னும் சொல்லப்போனால் நெஞ்சுக்கு இனிய நண்பராக நான் அறிந்து வைத்திருந்த நாகேஸ் உருத்திரமூர்த்திக்குள்ளே இப்படி ஓர் எழுத்தாளன் உறங்கிக் கொண்டிருந்தது எனக்குத் தெரியாமல் போய்விட்டது.

நான் நெடுகவும் காணும் நண்பரின் காணாத முகத்தை இன்று கண்டனான். ஆம், காண நோற்றனன் கவின் எழுத்துக்களை.

எழுத்தென்றால்.. அப்படி ஒரு வனப்பு; நாளும் கடந்து போகும் தருணங்களில், அவசியமானவற்றைப் பிடித்து, கொஞ்சம் இரசம் தடவித் தூவி விடுவது போன்ற வனப்பு.

'என் மனைவி என் தந்தையின் மனைவியாக அழைக்கப் பட்டாள்' எனச் செல்லும் எழுத்தின் சுவாரசியத்தில் மயங்கிப் பின்தொடருகின்றன எம் வாசக மனங்கள்.

மூர்த்தியின் வார்த்தைகளின் பெரிய பலமே நாம் ஒவ்வொருவரும் அனுபவித்துக் கண்ட நிதர்சனத்தின் தரிசனம்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லக் கிடைத்த புலம்பெயர் திருமணத்தில் புகைப்படக்காரராகிய புதிய புரோகிதர்களின் சம்பிரதாயங் களைக் கண்டு வெந்து போயிருக்கும் எந்த மனமும், 'ஐரோப்பியத் தமிழ்த் திருமணம்' என்ற ஆக்கத்தின் ஊடுபொருளை உவக்காமல் இருக்காது.

'நடக்கும் விழாவைப் படம் எடுக்க ஒழுங்கு படுத்தப் பட்டவர்கள், விழாவை நடாத்தி மற்றவர்களை நடிக்க வைத்துப் படம் எடுத்துக்கொண்டிருந்தார்கள்' என்ற வரிகளின் உறைப்பு, புலம் பெயர் தேயங்களில் மட்டுமல்ல, தாயகத்துத் திருமணக் கோலாகலத்தையும் கொஞ்சம் விளாசி விட்டுப் போவதாகத்தான் எனக்குப் படுகிறது.

நண்பனின் எழுத்து வசீகரத்துக்குப் பின்னணியில், மூல ஆதாரமாக இருப்பது சமுதாய விமர்சனம்தான். சமுதாயத்தை நேர்படுத்த, செப்பனிட முயலாத எழுத்து, எத்துணை வசீகரமாக இருந்தாலும் பயனற்றது. இதுவே, என் தந்தை அமரர் பூபாலசிங்கம் அவர்களின் கருத்தாகவும் இருந்தது.

நண்பன் மூர்த்தியின் சமுதாய அக்கறை, தவறும் சமூகத்தைத் திருத்தும் ஆசிரியக் கண்டிப்பு, ஆக்கம் தோறும் புலனாவது கண்டு மகிழ்ச்சி. எடுத்துக் காட்டுக்கு வேண்டுமானால், 'முதுமையின் நட்பு' என்பதில் வரும் பின்வரும் வரிகளைச் சொல்லிவிட்டுப் போகலாம்.

''கடந்த நாலு வருடங்களாக இந்த வயோதிகர்கள் இல்லத்தில் வசிக்கும் இவருக்கு ஆண் பெண் என இரண்டு பிள்ளைகள் இருந்தாலும் இடைக்கிடை வந்து அவரைப் பார்த்துப் போவது அவரது மகன் மட்டுமே. தந்தையைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க வரும்போது மகன் வாங்கிவரும் மலர்க்கொத்தின் அழகைப் போல், அவரது முகமும் சில நாட்களுக்கு மலர்ந்த வண்ணமே இருக்கும். மகன் தன் தந்தைக்காற்றும் கைமாறு ஐரோப்பாவில் இது மட்டும்தானே."

என்னே யதார்த்தம். அதைத் துணிவுடன் சொல்லும் நேர்மை. கடைசி வரிகளில்தான் எவ்வளவு எள்ளல். அந்த எள்ளலுக்குப் பின்னால், தமிழினத்தைத் திருத்திவிட வேண்டுமெனும் நண்பனின் உள்ளம்.

இவ்வாறு நூல் முழுவதும் பலவற்றைச் சொல்லலாம். பல பாராட்டு மாலைகள் சூட்டலாம், அங்கங்கே கை தட்டலாம், உச்சுக் கொட்டலாம். படித்து முடித்த நிறைவில், இது நுனிப்புல் மேய்தல் இல்லை, ஆற அமர இருந்து சமுதாய விடயங்களை அசை போட்டு செய்யப்பட்ட இரைமீட்டல் என்பது தெரியவரலாம்.

புலம் பெயர்ந்து பல்லாண்டாகியும், தமிழ் அன்னையைச் சேவிக்க மறவாத, பலம் சேர்க்கும் என் நண்பனுக்குப் பாராட்டுகள்.

நட்புடன்

**பூ. ஸ்ரீதரசிங்**

அதிபர், பூபாலசிங்கம் புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப் பதிவுகள்

**வி.தேவராஜ்**

மூர்த்தி எனது பல்கலைக்கழக சகபாடி. பல்கலைக் கழகத்தில் எங்களுடைய பெட்ஜில் (Batch) மூத்தவர் இவர்தான். வயதில் அல்ல, அனுபவத்தில்.

இந்த அனுபவத்தால் எங்கள் அனைவரையும் அணைத்துச் செல்லும் அண்ணனாக மூர்த்தி விளங்கினார். ஆனால் நாங்கள் அனைவரும் மூர்த்திக்கு மச்சான். அந்தப் பழக்க தோஷம் இன்றும் தொடர்கின்றது.

நான் முதல் தடவை சுவிஸ் சென்றிருந்தபோது மூர்த்தி மச்சானைத் தேடிக்கொள்ள முடியவில்லை. ஆனால் எதிர்பாராதவிதமாக விமான நிலையத்திற்கு வந்து என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டார்.

விமான நிலையத்தில் தங்கி நின்ற ஒரு சில மணித்துளிகளில் கட்டித் தழுவி 'மச்சான்' என்ற வார்த்தையுடன் ஒரு சில வார்த்தைகளைத் தவிற எம் இருவராலும் பேச முடியவில்லை. ஆனால் பரிபாஷையாக எமக்குள் பரிமாறிக் கொண்ட பழைய நினைவுகள் பலப் பல. அந்த ஒரு சில மணித்துளிகள் இன்னும் நீடிக்காதா என்ற ஏக்கத்துடன் பிரிந்தது இன்றும் மனக்கண் முன்னே நிற்கின்றது.

இந்தச் சந்திப்புக்குப் பிறகு அலுவலக வேலையாகப் பல முறை சுவிஸ் நாட்டுக்குச் சென்று வந்த போதும் மூர்த்தி மச்சானை சந்திக்கக் கிடைக்கவில்லை. ஆனால் தொலை பேசியும் மின்னஞ்சலும் எம்மை இணைத்துக் கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருக்கின்றன.

அண்மையில் ஒரு மின்னஞ்சல் மூர்த்தியின் எண்ணக் கருவை சுமந்து வந்தது.

தலைப்பு "நுனிப்புல் மேய்தல்".

தலைப்புத்தான் "நுனிப்புல் மேய்தல்". ஆனால் மூர்த்தியின் கருவைச் சுமந்துள்ள ஒவ்வொரு ஆக்கமும் மிக ஆழமாக மேய்ந்ததின் அறுவடையாகவே உள்ளது.

உண்மையில் மூர்த்தியின் இந்தப் படைப்பை நான் கற்பனைக்குள் பிறந்த கதைகளாகப் பார்க்கவில்லை. வரலாற்றுப் பதிவுகளாகவேப் பார்க்கின்றேன்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன் (2010இல்) ஜெர்மனிக்குச் சென்றிருந்த போது புலம் பெயர்ந்த தமிழர்களின் அனுபவங்களை நண்பர்கள் கதை கதையாகக் கூறினர். அவர்களின் தேடல்கள் என்னை வியப்பில் ஆழ்த்தியது. இது தொடர்பாக திரு. அருந்தவராஜா ஜெர்மனியில் தமிழர் வரலாறு என்ற நூலினை எழுதியுள்ளார். ஆனால் புலம்பெயர் தமிழர்களின் அனுபவங்களும் வரலாறும் முழுமையாகப் பதிவு செய்யப்பட வேண்டும். இந்த எதிர்பார்ப்பின் ஒரு அம்சமாகவே மூர்த்தியின் "நுனிப்புல் மேய்தல்" தொகுப்பினைப் பார்க்கின்றேன்.

கீழத்தேய நாடுகளின் பெண் அடிமை பற்றியும் பெண் விடுதலை பற்றியும் பெரிதாகப் பேசுகின்ற மேலை நாடுகளில் பெண்களின் நிலை குறித்துப் பேசுகின்றது "பெண்ணடிமை மேற்கில்" என்ற ஆக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1931ஆம் ஆண்டிலேயே இலங்கை சர்வசன வாக்குரிமையை அனுபவிக்கத் தொடங்கி விட்டது. ஆனால் சுவிஸ் அப்பன்செல் (Appenzell) மாநிலத்தில் 700 வருடங்களாக பெண்களுக்கு வாக்குரிமை இல்லை என்ற செய்தி ஆச்சரியமானதே. இந்த மாநிலப் பெண்கள் 1994இல் இருந்தே வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுள்ளனர் என்பது மேற்கத்தைய நாடுகளில் பெண்கள் எந்தளவுக்கு ஆணாதிக்கத்திற்குள் கட்டுண்டு கிடக்கின்றனர் என்பதை உணர்த்துகின்றது.

*ஐரோப்பியத் தமிழ்த் திருமணம்*

திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுகின்றது என்பது பழமொழி. அதற்கென சுப முகூர்த்தம் பார்ப்பது வழக்கம். ஆனால் ஐரோப்பாவில் சுப முகூர்த்தத்திற்கப்பால் விடுமுறைகளே திருமணத்தைத் தீர்மானிக்கின்றன என்ற செய்தி ஆச்சரியமானதே.

அதுமாத்திரமல்ல, சினிமாப்பாணியில் திடீர் தாய் தந்தையர்; ஒரே வீட்டில் வாழ்ந்தவர்கள் திருமணத்திற்காக ஒரு நாள் பிரிந்து நின்று திருமணம் முடித்து மீண்டும் ஒன்று சேரும் புதிய கலாசாரமென ஐரோப்பியச் சூழ்நிலைக்குள் பிறப்பெடுத்துள்ள புதுப் பிரசவம் என்பன பாரம்பரிய கலாசார விழுமியங்களை கேள்விக்குறியாக்கி நிற்கின்றன.

*தொடரும் தாமதம்*

மேலைத்தேய நடைமுறைக்குள், நேர காலத்திற்குள் சிறைப் பிடிக்கப்பட்டுள்ள எம்மவர்கள் தமிழர் சார்ந்த நிகழ்வுகளில் மாத்திரம் கட்டுக்குள் வர மறுப்பதன் மர்மம்தான் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அந்நியனே வெளியேறு*

இன்றைய உலகமயமாக்கலை சுதேசியத்துடன் உரசிப் பார்க்க வைக்கின்றது இந்த ஆக்கம். தாயக கள நிலவரத்தை யதார்த்தமாக்கிப் பேசுகின்றது. எதுவுமே சுயமாக இல்லை என்ற உண்மையை உரைத்து நிற்கின்றது இந்தப் படைப்பு.

*உயரப் பறந்த எங்கள் வீடு*

தாயகத்தில் நடைபெற்ற இனச் சங்காரத்தில், பிணக் குவியல்களிலிருந்து மீண்டவனின் அனுபவப் பகிர்வாகவும் பதிவாகவும் அமைந்துள்ளது.

மொத்தத்தில் இவைகள் கற்பனை அல்ல. புலம்பெயர் தமிழர்கள் குறித்த பதிவுகள். புலம்பெயர் தேசங்கள் தந்த புது அனுபவங்கள். அவை போட்டு உடைத்த எமது கலை கலாசார பாரம்பரியங்கள், நம்பிக்கைகள், தகர்ந்து போன உறவுகள் என எல்லாமே போலியாகப் பிறப்பெடுத்து புலம்பெயர் தமிழர்களை சூழ்நிலைகளின் கைதியாக நிற்க வைத்துள்ளது என்பதை மூர்த்தியின் வரிகள் பதிவுகளாக்கி யுள்ளன.

நன்றிகளுடன் வாழ்த்துகளையும் கூறி விடை பெறுகின்றேன்.

**வி.தேவராஜ்**
Editor - At - Large
Express Newspapers
Colombo
*06.06.2013*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாத்தியாரின் வரிகளில் ....

**ஆ. விவேகானந்தா**

மூர்த்தியின் 'நுனிப்புல் மேய்தல்' தொகுப்பு புலம்பெயர் வாழ்வில் தமிழர்களின் வாழ்வை, அதன் தழும்புகளை அடையாளப்படுத்த முனைந்திருக்கின்றது.

புலத்தில் இருந்துகொண்டே தாய் மண்ணின் அவலங்களை, அதன் பாதிப்புக்கு உள்ளானவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள உதவுகிறது.

பாதிப்புக்கு உள்ளானவர்கள் பகிர்ந்து கொள்ளும் உணர்வுகளின் நெகிழ்வும் உண்மையும் காலத்தின் சாட்சியமாகப் பதிவாகிறது. இதில் 'உயரப் பறந்த எங்கள் வீடு', 'பிணக்குவியலில் இருந்து உயிர் பிழைத்தவன் நான்' ஆகிய ஆக்கங்கள் குறிப்பிடத்தக்கவை.

உடல் நிலை குன்றிய நிலை, தன்னம்பிக்கை தளர்ந்துவிட்ட நடைப்பிணம், தன் இனத்தின், உறவுகளின் உடல்களைத் தூக்கி ஏற்றிப் பிடிப்பதும், அடுத்துத் தனக்கும் இந்தநிலை தான் என்று எண்ணும்போது மயிர் இழையில் உயிர் தப்புவதும் வாசகர்களின் இதயத்தைத் தொடுகின்றது.

அடைமொழிகள் அதிகமின்றி இலகு நடையில், பேச்சுவழக்குத் தமிழில் கையாளப்பட்டிருப்பது நூலின் சிறப்பம்சம்.

'மொழிபெயர்ப்பாளரின் வேதனை' ஆக்கத்தில், புலத்தில் வாழும் எம் சொந்தங்களின் வாழ்க்கையை, வாழ்க்கைக் காகவே நடிப்பதை, காரண காரியம் இன்றிக் கதைப்பதை ஆங்காங்கே தொட்டுச் செல்கிறது.

தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை, தந்தையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரைக் காண்பாரும் இல்லை என்பதை 'வேதனை அவளுக்கும் தான்' என்பதில் புரிய வைத்திருக்கிறார். வெறும் நாடகமாக, வெளி உலகிற்குக் கருத்தொருமித்த கணவன் மனைவியாகவும் வீட்டில் கவலையும் கண்ணீருமாக கணவன் மனைவியாக எப்படி வாழ்வது என எண்ணி மனம் தளர்ந்திருந்தால் குடும்பம் என்ற கூடு கலைந்திருக்கும். எங்கள் வாரிசுகளாவது வாழ வேண்டுமே என்பதற்காக வாழும் புலம் பெயர் வாழ்க்கையை உலகிற்குப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

1970இன் ஆரம்ப காலத்தில் ஒருநாள் அதிகாலை நேரம் அரைக்கால்சட்டையுடனும் வெண்நிறத்துடன் மஞ்சளும் கலந்துவிட்டால் வரும் நிறத்தில் ஒரு சேட்டுடனும் என் வீட்டு வாசலில் ஒரு மெல்லிய பெடியனாக வந்து நின்றான். எனக்கு யார் என்று தெரியவில்லை. அவனின் பின்னால் எனது நண்பன் பாலா உந்துருளியில் இருந்து இறங்கி வந்து இதுதான் அடம்பன் மூர்த்தி என்று அறிமுகம் செய்தார். அப்போதுதான் நான் அவனுடன் கடிதத்தில் கதைத்துக் கொண்டது ஞாபகம் வந்தது. குடும்பச் சூழல், கஸ்டம் காரணமாக அவனால் பாடசாலைக் கல்வியைத் தொடர முடியவில்லை. எப்படியாவது படித்து க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தேற வேண்டும் என்பது அவனது அன்றைய ஆசை. அதற்கு எப்படியாவது தன்னைத் தயார்படுத்திவிட வேண்டும் என்று என்னிடம் வந்தான். அன்று தொடங்கிய அவனது விடா முயற்சி பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு வரை கொண்டு சென்றது மட்டுமல்லாது இன்று கணினி விஞ்ஞானியாக, மொழிபெயர்ப்பாளனாக, நூல் வெளியீட்டாளனாக, கதாசிரியனாக, பல துறைகளிலும் முன்னிலைப் படுத்தியுள்ளது. இதனை இங்கு நான் கோடிட்டுக் காட்டுவதற்குக் காரணம் கல்வி கற்க வேண்டும் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கோள் இருந்தால் அதற்குக் குடும்பமோ, சூழலோ, கஸ்டமோ ஒரு தடையாகாது என்பதற்கு மூர்த்தி ஓர் உதாரணம்.

மூர்த்தி என்னுடன் மட்டுமல்ல என் வீட்டில் எல்லோர் மனதிலும் தனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டவன். எல்லோருடனும் இலகுவில் பழகும் தன்மை கொண்டவன். இதனால் தான் இத்தொகுப்பில் பலரின் கதைகளை உள்சென்று உள்வாங்கி எழுதியுள்ளார்.

எனது அம்மாவை அவனும் அம்மா என்றுதான் அழைப்பான். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் எங்கள் வீட்டில் விரதம். நாங்கள் தலை வாழை இலை வெட்டிப் போட்டு மூர்த்தி வரும் வரை காத்திருந்து, அவன் வந்தபின் சேர்ந்து சாப்பிடுவோம்.

அவனுக்கும் எனக்கும் உள்ள நட்பு கல்வியில் மட்டுமன்றி, அவனது காதல், கலியாணம் முதல் வெளிநாட்டுப் பயணம், அவனது பிள்ளையின் கலியாணம் எனவும், அவன் எனக்காகப் பெண் பார்த்தது என இன்று வரைத் தொடர்கிறது.

'நுனிப்புல் மேய்தல்' தொகுப்பு புலம் பெயர் வாழ்வை புலத்திற்கும் எடுத்துக்காட்ட உதவும் கண்ணாடி.

நுனிப்புல் மேய்தலுக்குள் நுழைந்ததும் அதனை வாசிக்கிறோம் என்ற உணர்வை விட, கதாபாத்திரங்களுடன் கதைக்கிறோம், அக்கதையை, சம்பவத்தை ஒருவர் சொல்லிக் கேட்கிறோம் என்ற உணர்வை ஏற்படுத்துவது இத்தொகுதிக்கு அழகைச் சேர்த்திருக்கிறது.

அன்புடன்
**ஆசிரியர் ஆ. விவேகானந்தா**
(தமிழ் மணிப் புலவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தக் கிடைத்த விதியின் வசத்திற்கு நன்றி

**ரி. என். ரூபி**

"உள்ளத்துள் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் உளர்" என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க எல்லார் உள்ளத்திலும் தனியிடம் பெற்றவர் எனது ஆசான் திரு என். உருத்திரமூர்த்தி அவர்கள். நான் அவரை முதன் முதலில் எனது பதினான்காவது அகவையில் சந்தித்தேன்.

எனக்குக் கணிதம் கற்பித்த ஒரு ஆசானவர். நான் இன்று ஒரு புகழ் பூத்த கல்லூரியில் பணி புரிவதற்கு அவர் ஒரு மைல் கல் எனக் கூறுவதில் பெருமைப்படுகின்றேன்.

இவரது ஒவ்வொரு படைப்பும் யதார்த்தத்தைத் தத்துரூபமாக எடுத்துக் காட்டுகின்றது. பன்முக ஆற்றல், அன்பு, பண்பு, மனிதநேயம், பொறுமை, இரக்கம் போன்ற சகல விழுமியங்களையும் ஒருங்கே கொண்ட ஒரு சிற்பி ஆவார் இவர்.

நல்ல இதயம் படைத்தவர், மனிதர்களை மதிக்கத் தெரிந்தவர், சிறந்த கல்வியியலாளர், தீர்க்க தரிசி, தூர நோக்குடையவர் என்பதை நான் கூறத் தேவையில்லை. அவரது படைப்புகள் அனைத்தும் அவற்றைப் பறை சாற்றுகின்றன.

அது மட்டுமன்றிப் புதிய விடயங்களை உள்வாங்கி நவீன உலகின் ஓட்டத்திற்கேற்ப சேர்த்திடும் திறனாற்றல் மிக்கவர்.

ஒவ்வொரு படைப்பிலும் நிதர்சனம் மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. எமது மக்கள் வெளிநாடுகளில் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள், எம்மவர் எமது நாட்டில் அடைந்த அல்லல்கள் என்று அனைத்தையும் படம் பிடித்துக் காட்டுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மால் உணர்வு நிலையில் உணரக் கூடியவற்றை உலகிற்கு உணர்வின் பதிவாய் எடுத்துச் செல்லும் இந்த ஆவணமாக்கல் பயணம் சிறப்பிற்குரியது.

தனி மனித உணர்வு, சமுதாய சீர்திருத்தச் சிந்தனையின் வெளிப்பாடாய் அமைந்து ஆழமான கருத்தூன்றலை தோற்றுவிக்கின்றது.

தன் வாழ்க்கைப் பாடத்தை, கற்பனை கலந்த ரசனைமிக்க படிமமாக்கி, இலக்கியமாய் வடித்திருக்கின்றார் பெருமைக்குரிய நூலாசிரியர்.

எனது ஆசானை சமூகச் சீர்திருத்த மேம்பாட்டை உணர்த்தும் சிறந்த பல்துறை எழுத்தாளராகக் கண்டு வாழ்த்துவதை எண்ணி புளகாங்கிக்கிறேன்.

பழமைவாதமாய் அல்லாது புதிய தொழில்நுட்பத் துடன் இணைந்த வகையில் அவரின் நூலினைப் பொருத்தமான சித்திரங்களால் அலங்கரிப்புச் செய்துள்ளார்.

ஈழத்தின் மகாகவியாய்த் திகழ்ந்த உருத்திரமூர்த்தி அவர்களை நினைவூட்டுகின்றது, இந்தச் சிந்தனைச் செம்மலின் செயற்பாடுகள். ஆனாலும் பின்பற்றலாய் அல்லாது தனக்கென ஒரு பாணியில் சிறப்புச் சேர்க்கும் இலக்கிய வடிவங்களை ஒன்று சேர்க்கும் முயற்சியில் வெற்றி கண்டுள்ளார்.

ஆகவே அவரின் சிறப்பிற்குரிய ஆக்கங்களினை மெச்சுவதுடன் மேலும் சிறந்த ஆக்கங்களை ஆக்கி அளிக்கவும், ஆவணப்படுத்தவும், தளராத பேனா முனையுடன் அவரை இவ்வுலகு என்றும் காணவும் வாழ்த்துகிறேன். இவர் என்னால் வாழ்த்தப்படுவதை விட எனக்கு என் ஆசானை வாழ்த்தக் கிடைத்த விதியின் வசத்திற்கு நன்றி உடையவளாகின்றேன்.

என்றும் தங்கள் மாணவி

**ரி. என். ரூபி**

ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப் பார்வையின் அவலப்பதிவுகள்

**கோவை. நந்தன்**

தாமுண்டு தம் குடும்பமுண்டு என வாழும் மிகப் பெரும்பான்மையானவர்களைக் கொண்ட புலம் பெயர் வாழ்வியலில், கலை, இலக்கிய, சமூக சிந்தனையாளர்களும் அவற்றினூடான செயற்பாட்டாளர்களும் இருந்து கொண்டு தான் இருக்கிறார்கள். இப்படியானவர்களின் பணிகள் பல்வேறு தளங்களில் இங்கு வாழும் மக்களுக்குப் பயனுள்ள பல சேவைகளையும் மகிழ்ச்சியளிக்கும் நிகழ்வுகளையும் வழங்கி வருகின்றன.

இந்த வகையில், சுவிற்சர்லாந்தில் பல வருடங்களாக வாழ்ந்து வரும் நண்பர் மூர்த்தியின் சேவைகளால், அங்கு வாழும் தமிழ் மக்கள் பல கோணங்களில் பயன் பெறுவதை நான் நன்கு அறிவேன். ஒரு ஆசிரியராக, மொழிபெயர்ப் பாளராக, கலைஞனாக, பத்திரிகையாளராக, எழுத்தாளராக பல்துறையிலும் பணியாற்றி, தன் சிறப்பை வெளிப்படுத்தி வருபவர் அவர். அதிகாலை முதல் இரவு வரை அவர் ஓயாமல் செயல்படும் விதம் உழைப்பின் மகத்துவத்தை வெளிப்படுத்தும்.

அவரது வாழ்வியல் முறையும் சமூகம் மீதான அவரது பார்வையும், வழமையிலிருந்தும் எமது உளுத்துப்போன சம்பிரதாயங்களிலிருந்தும் மாறுபட்டதாகவே இருக்கும். அந்த வகையில், புலம் பெயர் வாழ்வியலில் நம்மவர்களின் சில அன்றாட செயல்பாடுகள் ஏற்படுத்துகின்ற விளைவுகள் தொடர்பான அவரது மன உணர்வுகளையும் உளைச்சல் களையும் பதிவாக்கியுள்ளார்.

வெளிநாடுகளில், குறிப்பாக சுவிற்சர்லாந்தில் வாழும் நம்மவர்களின் அங்கும் இல்லை, இங்கும் இல்லை எனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டும் கெட்டான் போக்கு, அவர்களுக்கும் அவர்களைச் சூழ்ந்துள்ளவர்களுக்கும் ஏற்படுத்தும் அசௌகரியங்களை அற்புதமாகப் பதிவு செய்துள்ளார் மூர்த்தி.

அனைத்தும் அவரது அநுபவத்தினூடான பதிவுகளே என்பதனை வாசிப்பில் உணர முடிகிறது.

நம்மவரிடம் இருக்கும் சமூக அவலங்களில் உச்ச மானவையான சாதியம், பெண் ஒடுக்குமுறை என்பன சாடப்படுவதுடன், ஐரோப்பியர்கள் மத்தியில் இன்றும் இருக்கும் பெண்ணிய பாகுபாட்டின் ஒப்பீட்டு நோக்கல் அற்புதம்.

திருமண கொண்டாட்டங்கள், நேரம் தவறாமை, பெயர்க்குழப்பம், சீட்டுப்பிடித்தல், பிள்ளை வளர்ப்பு, பிள்ளைகளின் மனோநிலை, மொழிபெயர்ப்பாளனின் அவலம், வயோதிபகாலம் என வெளிநாடுகளில் நம்மவரின் அவலச் செயல்களும், அங்குள்ள வாழ்வியல் அவர்களுக்கு அளிக்கும் அவலங்களும் அற்புதமாக அலசப்படுகின்றன.

நீண்ட வருடங்களாக வெளிநாட்டில் வாழ்ந்தாலும், புலத்தின் பசுமையான நினைவுகளை மட்டுமல்ல, அங்கிருந்த அன்றைய அவலங்களையும் அட்டூழியங் களையும் அலசும் மூர்த்தியின் ஆக்கங்கள், சிங்கள பேரினவாதமும், தமிழ்த் தேசியத்துள் நுழைந்துள்ள தமிழ் இனவாதமும் ஏற்படுத்திய போரின் கொடுமைகளையும் வடுக்களையும் உணர்வுப்பூர்வமாக வெளிப்படுத்தி நிற் கின்றன.

மனச்சஞ்சலம் மட்டுமல்ல, மனித மனத்தின் சிந்தனா பின்னடைவு ஏற்படுத்தும் விளைவுகளும் சுவராசியமாக்கப் பட்டுள்ளன.

பல ஆக்கங்கள், சிறுகதையின் ஓட்டத்துடன் செல்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால், வாசிப்பை சுவராசியமாக்குகின்றன.

கவிதைகளாக்கப்பட்டுள்ள சில அவலங்கள், அனைவருக்கும் அவசியமான மருத்துவத்தின் அடிப்படை என்பன நூலுக்கு மேலும் சிறப்பைச் சேர்க்கின்றன.

இன்றைய வாழ்வியலில் நம்மவர் அனைவருக்கும் குறிப்பாக, இன்றைய அமைதிச்சூழலிலும் வெளி நாடுகளுக்குச் செல்ல வேண்டும் எனத் துடித்துக் கொண்டிருக்கும் நம் இளைஞர்களுக்கு, இங்குள்ள பல பதிவுகள் ஓரளவாவது நல்ல சிந்தனா மாற்றத்தை ஏற்படுத்தும் என நம்புவோமாக.

அனைவருடனும், எந்தவித பேதமும் பாராது அன்பாகப் பழகும் நண்பர் மூர்த்தியின் சமூகப் பணிகள் மட்டுமல்ல, அவை தொடர்பான தொடர் பதிவுகளும் தொடர வேண்டும் என வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கோவை. நந்தன்
ஊடகவியலாளர்
FRANCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

அனுபவங்கள் பல வகை, ஒவ்வொன்றும் ஒரு வகை.

இது என் வகை.

நான் பார்த்தது, கேட்டது, அனுபவித்தது அனைத்தும் இங்கே என் மனப் பதிவுகளாய் மற்றவர் அறியும் வண்ணம் நான் பகிர்ந்தவைகளில் என்னால் தொலைக்கப் பட்டவைகள் போக மீதியாக இருந்தவற்றைச் சேர்த்து தொலைந்து போகாமல் இருப்பதற்காக நான் எடுத்த முயற்சியே இந்தப் புத்தகம். இதில் உண்மைச் சம்பவங் களும் உண்டு, என் கற்பனைகளும் உண்டு. சிறுகதை, கவிதை, கட்டுரை ஆய்வு என்ற எதற்குள்ளாவது நான் வடித்ததை நீங்கள் கண்டுகொள்ளலாம் என நம்புகின்றேன். இது புத்தக வடிவில் இன்று உங்கள் கைகளில் தவழ்வதை நான் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

புலம்பெயர் வாழ்வில் கணினி விஞ்ஞானி என்ற எனது தொழில் தவிர நான் ஆற்றிய பணிகளைப் பட்டியல் இட்டால்

மொழிபெயர்ப்பாளர்

ஆசிரியர்

பத்திரிகை வினியோகஸ்தர்

ஆலோசகர்

சமூக சேவையாளர்

விழா ஏற்பாட்டாளர்

வானொலி நடாத்துனர்

தொலைக்காட்சி நிறுவனப் பங்காளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டி மன்றப் பேச்சாளர்

புத்தக வெளியீட்டாளர்

மென்பொருள் வெளியீட்டாளர்

எனத் தொடரும் போது இடையிடையே எழுத்தாளர் அல்லது படைப்பாளர் என நான் என்னைக் கொஞ்சமாவது கூறிக்கொள்ளலாமா? எனக் கேட்ட போதுதான் நுனிப்புல் மேய்தலாக நான் எழுதிய விடயங்கள் என்னைத் தட்டிச் சென்றன. அவற்றைத் தேடிச் சேகரித்து எனது சந்ததிகளுக்கு விட்டுச் செல்வதற்காகவே இந்த முயற்சியில் நான் ஈடுபட்டேனே தவிர தமிழுக்கு நான் ஆற்றும் சேவை அல்ல இது. இதனால் எனக்கு ஏற்படப் போகும் சாதக பாதக விளைவுகளை நினைத்துப் பார்க்க நான் விரும்பவில்லை.

நன்றியுடன்

நான்

நாகேஸ் உருத்திரமூர்த்தி

(மூர்த்தி மாஸ்ரர்)

*சுவிஸ்*

*30.10.2012*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. பெண்ணடிமை மேற்கில் நம் பெண்கள்

ஆசிய நாட்டவர்கள், குறிப்பாக இலங்கை இந்தியப் பெண்கள், ஆண்களால் அடிமைப்படுத்தப் படுகிறார்கள் என்பது ஐரோப்பியர்களின் பொதுவான கருத்தாக இருக்கிறது.

சுவிஸ் மக்களுடனான கலந்துரையாடல் முதல் விவாத மேடைகள் வரை மட்டுமல்ல, வானொலி, தொலைக்காட்சி பேட்டிகளிலும் எழுப்பப்பட்ட, தொடர்ந்தும் எழுப்பப் படும் கேள்வி பெண்ணடிமையும் தொழில் (சாதி) அமைப்பு மாகும்.

அவர்களுக்கு இலகுவாகப் புரியுமாறு பதில் தர வேண்டியது எமது கடமையாகிறது.

ஆசியாவில் பெண்கள் அடக்கப் படுகிறார்கள் என்பது தவறான கருத்து.

மாறாக சுவிஸில் (ஐரோப்பாவில்) பெண்கள் அடக்கப் படுகிறார்கள் என்பதே முற்றிலும் உண்மையாகும்.

இதனைப் புரிந்து கொள்ளாமல் எம்மீது குற்றம் சுமத்த முன் வருகிறீர்களே எனக் கேட்டால் அவர்களது முகத்தில் ஆச்சரியக் குறிகள் கோடுகளாக வளைந்து நெளிந்து நிற்பதை நாம் நேரடியாகக் காணமுடியும்.

உலகிலேயே முதன் முதலாக ஒரு பெண் பிரதமராக வந்த இடம் நீங்கள் பிறந்து வளர்ந்து நாகரீகம் வளர்ச்சி யடைந்ததாக நினைத்துக் கொண்டிருக்கும் உங்கள் நாட்டிலா? அல்லது பெண்கள் உரிமையற்றவர்கள் என நீங்கள் நினைக்கும் எங்கள் நாட்டிலா? எனக் கேட்டால் அவர்கள் முகத்தில் ஆச்சரியம் மாறி அசடு வழியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது வரை உங்கள் நாட்டில் ஒரு பெண் அரசியலில் உச்ச நிலைக்கு வர அனுமதிக்கப்படவில்லை என்பதிலிருந்து இங்கு பெண்ணடிமை உண்டு என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்ல சுவிஸில் இருக்கும் 26 கன்ரோன்களில் (மாநிலங்களில்) ஒன்றான அப்பன்செல் என்னுமிடத்தில் கடந்த 700 வருடங்களாக சுவிஸ் பெண்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டு வந்தது. கடந்த 2 வருடங்களாகத்தான் (1994இல்) அவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது.

இதிலிருந்து சுவிஸ் பெண்கள் உரிமை அற்றவர்களாகக் கருதப்பட்டார்கள் என்பது தெளிவாகிறது.

பெண் உரிமை, சட்ட உரிமை என ஆரம்பிக்கும் இந்த நாட்டில் இன்றும் கூட சமமான ஒரு வேலைக்கு ஆண்களை விடப் பெண்களுக்குக் குறைவான சம்பளம் வழங்கப்படு கிறது என்பது உலகறிந்த இரகசியம்.

இது இங்கு பெண்கள் அடக்கப்படுகிறார்கள் என்பதற்கு இன்னுமோர் உதாரணமாகும்.

கடந்த வருடம் (1995இல்) சுவிஸ் பாராளுமன்றத்தின் உயர்பதவி ஒன்றிற்குப் போட்டியிட்ட பெண் போட்டி யாளரை மொட்டைக் கடிதங்கள் மூலம் போட்டியிலிருந்து விலக்கிய சுவிஸின் ஆணாதிக்கம் மூக்கைப் பொத்திக் கொண்டு அந்தப் பதவியை பெண்ணொருவருக்கே

கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதை உலகம் இன்னும் மறக்க வில்லை.

ஓய்வூதியம் அல்லது வயோதிகர் உதவிப் பணம் பெறுவதிலும் பெண்கள் இங்கு இன்னும் இரண்டாம் தரத்தினராகவே கணிக்கப்படுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குற்றம் கூறி ஒற்றை விரலால் சுட்டிக் காட்டுகையில் மற்றைய மூன்று விரல்களும் உந்தன் நெஞ்சைக் காட்டுதடா" என்ற வாசகம் இவர்களுக்கு நன்கு பொருந்தும்.

அடுத்த விடயம் சாதி அல்லது தொழில் அமைப்பு. இதனைப் பற்றி நம்மவர்கள் பல வகையாக எழுதித் தள்ளுகிறார்கள்.

சிலர் மிகைப் படுத்துகிறார்கள்.

சிலர் பூசி மெழுகுகிறார்கள்.

ஆனால் நடைமுறைக்கும் எழுத்துக்கும் எல்லா இடத்திலும் வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது.

நம்மவர் மத்தியில் தொழிலை அடிப்படையாகக் கொண்டு ஆதிகாலத்தில் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு அறிவற்ற சிலரால் இன்றும் கடைப்பிடிக்கப்படுவது நாம் சாதாரணமாகக் காணும் விடயமாகும்.

எல்லா இடங்களிலும் மறக்கப்படும் அல்லது மறந்ததாக நடிக்கப்படும் சாதி, திருமண விடயத்தில் இன்றும் காரணம் இன்றி மறக்கப்படாமல் உள்ளது என்பது என்னவோ கேவலமான உண்மைதான்.

ஐரோப்பியர் மத்தியிலும் தொழில் கூறும் பெயர்கள் இன்றும் நடைமுறையில் உள்ளன.

உதாரணமாக

செருப்புக்கட்டி Schumacher *(சூமாஹெர்)*
தையல்காரன் Schneider *(ஷ்னைடர்)*
இரும்படிப்போன் Schmidt *(ஸ்மித்)*
வீடுகட்டி Zimmerman *(த்சிம்மர்மான்)*
மரவேலையாள் Holzer *(ஹொல்சர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பல பெயர்கள் சாதாரணம்.

இது தொழில் அடிப்படையில் வந்த பெயர்கள். பரம்பரைப் பெயர்கள். ஆனால் அவற்றிற்கு ஏற்றத்தாழ்வு கிடையாது என்பதையும் ஒத்துக் கொள்ள வேண்டும்.

நம்மவரால் ஒரு காலத்தில் உயர்வாக மதிக்கப்பட்ட வேளாளர் எனும் விவசாயிகள் இங்கு தரக் குறைவாக மதிக்கப்படுவதையும் நாம் எடுத்துக் காட்டலாம்.

மேலும் தொழிலால் பாகுபடுத்தப் படாத ஐரோப்பியர்கள் தகுதியால் பாகுபடுத்துவதில் பின்நிற்பதில்லை.

பணம், அந்தஸ்து, புகழ் போன்றவற்றால் இவர்கள் இன்றும் ஏற்றத் தாழ்வைப் பாராட்டுகின்றார்கள்.

உயர் தொழில் செய்பவருக்கும் சாதாரண தொழில் செய்பவருக்கும் ஏற்றத்தாழ்வு பார்க்கப்படுவதை நாம் இங்கு சாதாரணமாக அவதானிக்கலாம்.

தந்தையின் தொழிலை வைத்து பிள்ளைகளின் தரத்தை தீர்மானிக்கும் நம்மவர்களின் கீழத்தரமான பழக்கம் இவர்களிடம் இல்லை.

ஒவ்வொரு தனி மனிதனும் அவனவன் தகுதிக்கு ஏற்ப மதிக்கப்படுகின்றான் என்பதால் அந்த வகையில் இவர்கள் உயர்ந்தவர்கள்தான்.

ஆனால் எந்த நிலையிலும் எம்மை மட்டுமே குற்றம் கூற முற்படும் அவர்களுக்கு அவர்களது நாட்டின் நடை முறையில் இருக்கும் பழக்கத்தினை நாம் எடுத்துக்காட்டத் தயங்கக் கூடாது.

(ஈழகேசரி, இலண்டன் – மார்ச்சு 1996)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. ஐரோப்பியத் தமிழ்த் திருமணம்

அது ஐரோப்பாவில் நடந்த ஒரு தமிழ்த் திருமணம்.

விடுமுறை தினத்தில் மட்டுமே வழக்கம் போல முகூர்த்தம் வைக்கப் பட்டிருந்தது.

திருமண மண்டபம் தடல்புடலாகச் சோடிக்கப் பட்டிருந்தது.

சம்பிரதாயம் முதல் சாப்பாடு வரை ஒரே இடத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டதால் அனைத்தும் தயாராகக் காத்திருந்தது.

மணமக்கள் வீட்டில் வீடியோக்காரர்கள் தமது வேலையை முடித்து இனி ஹோலுக்குப் போகலாம் என அனுமதி வழங்கியதும் மணமகனும் மணமகளும் ஒவ்வொருவராக மண்டபத்திற்கு வந்தனர்.

திடீர் ரசப்பொடி போன்று ஏற்கனவே ஒழுங்கு செய்யப் பட்டிருந்த திடீர்த் தாயும் தகப்பனும் வந்து சேரும் வரை காத்திருந்த பின்னர் திருமணச் சம்பிரதாயங்கள் ஆரம்ப மாகின.

ஒரு புறத்தில் ஐயர் எமக்குப் புரியாத பாசையில் மந்திரம் கூறிக் கொண்டிருந்தார்.

இடை இடையே மணமகனுக்கு ஐயரால் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. அவரும் அதற்கு அடிபணிந்து கொண்டு இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடியோ படப் பிடிப்பாளர்கள் தமது வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்ததால் அவர்களின் பின்னாலும் திருமணத்துக்கு வருகை தந்தவர்கள் அமர்ந்திருப்பதை வழமை போல் மதிக்கத் தவறிவிட்டார்கள்.

படப்பிடிப்பாளர்கள் தான் திருமண நடைமுறைகளைத் தீர்மானிப்பவர்களாக மாறிவிட்டார்கள். அவர்கள் சொற் படிதான் தாலி கட்டுவதும் கட்டிய தாலியை மீண்டும் ஒரு முறை கட்டுவது போலப் பாசாங்கு செய்து கமராவுக்குக் காட்டுவதும், இப்படி வாங்கோ அப்படிப் போங்கோ என்று கட்டளையிடுவதுமாக மாறிவிடுவார்கள். நடக்கும் விழாவைப் படம் எடுக்க ஒழுங்கு படுத்தப்பட்டவர்கள் விழாவை நடாத்தி மற்றவர்களை நடிக்க வைத்துப் படம் எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

பின்னால் இருப்பவர்களுக்கு மணமேடையின் மேல் பக்கமும் வீடியோக்காரர்களின் முதுகுப் பக்கமும் மட்டுமே காணக்கிடைத்ததால் அவர்கள் தமக்கு அருகில் உள்ளவர் களுடன் தமது விடயங்களைக் கதைக்கத் தொடங்கினார்கள்.

அந்தக் கதை இந்தக் கதை என்று பல சுவாரசியமான கதைகள்......

ஐயரின் மந்திரம் ஐயருக்கு மட்டும் விளங்கியதால் அருகில் இருந்தவர், “தமிழ் தெரியாத தமிழன் இருப்பதாக மட்டுமே கேள்விப் பட்டிருக்கிறோம். இங்கு தமிழ் தெரியாத கடவுள்களும் இருக்கிறார்கள் பார்த்தீர்களா?” என்று கூறினார்.

அவரை நான் உற்றுப் பார்த்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் உள்ள அனைத்துக் கடவுள்களுக்கும் அந்தந்த மக்கள் பேசும் மொழியிலேதான் பூசை நடக்கும்.

ஆனால் தமிழ்க் கடவுளர்க்கு மட்டும் தமிழருக்கு விளங்காத பாசையில் தான் பூசை நடாத்துவார்கள். நமது கடவுளர்க்கு தமிழில்லாததும் எமக்கு விளங்காததுமான பாசைதான் விளங்கும் என்று நினைக்க வேண்டியுள்ளது.

பக்தி சொட்ட நெஞ்சுருகிப் பாட இறைவன் புகழ் கூற அழகு தமிழ் இருக்கிறது. உளமார அவனை வேண்ட இனிய தமிழ் காணாதா?

எப்பொழுதோ ஒரு காலத்தில் அர்ச்சகர்கள் தாமறிந்த மொழியில் பூசை செய்தார்கள். அதை அப்படியே இன்றும் செய்கிறார்களே.

இன்று விஞ்ஞானம் வளர்ந்து விட்ட காலத்தில் வாழ்கிறோம். பழைமையை மாற்றி புதுமையைப் புகுத்துவோம்.

நமது மொழியில் பூசைகளை நடாத்தி நமது கடவுளர் களைப் பிரார்த்திப்போம்.

திருமணம் நடந்த தம்பதியரைப் பற்றிச் சொல்ல மறந்து விட்டேனே.

இந்தத் தம்பதியினர் எனக்குத் தெரிய சில காலமாக ஒரே வீட்டில் ஒன்றாகத்தான் வாழ்கின்றார்கள். திருமண தினத்தின் முதல் நாள் இரவு மட்டும் மாப்பிள்ளை தனது நண்பன் வீட்டில் போய்த் தங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் என்றால் சாத்திரமாம். சாத்திரம் என்ற சொல்லைத் தவிர வேறு ஒன்றுமே புரியவில்லை.

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக ஒன்றாக இருந்தவர்கள் அந்த ஒரு நாள் மட்டும் ஏன் பிரிந்து இருக்க வேண்டும்?

உண்மையான காரணம் தெரியாமல் சாத்திரத்தின் மேல் பழியைப் போடலாமா?

நமது பழைய திருமணச் சடங்குகளில் அர்த்தம் இல்லாமலில்லை. அந்தக் காலத்தில் பேசி முடித்த திரு மணங்கள்தான் அனேகம். ஒரு சில காதல் கல்யாணங்கள்.

ஆனால் இங்கு நடப்பது போல ஒன்றாக ஆணும் பெண்ணும் கூடி இருந்து விட்டு திருமணங்கள் நடப்ப தில்லை.

அன்றைய மனிதன் ஒவ்வொரு தேவைக்கும் ஒவ்வொரு செயலைக் காரணத்தோடு உருவாக்கினான்.

அதன் பொருளும் கருத்தும் தெரியாத நம்மில் பலர் தொடர்ந்தும் கண்மூடித்தனமான சிலவற்றை இன்றும் செய்து கொண்டுதான் வருகிறோம்.

(ஈழகேசரி, இலண்டன் – ஏப்பிரல் 1996)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ૩. தொடரும் தாமதம்

இலங்கையில் வாழ்ந்த வாழ்க்கைக்கும் இங்கு புலம் பெயர் நாட்டில் வாழும் வாழ்க்கைக்கும் பல வழிகளிலும் வேறுபாடுள்ளது என்பதை யாவரும் அறிவார்கள்.

சில விடயங்களை நாமாகவே தெரிந்து மாற்றிக் கொண்டோம். சிலவற்றைக் கட்டாயத்தின் பேரில் மாற்றிக் கொண்டோம்.

இருந்தும் எம்மிடம் இருக்கும் சில கீழ்த்தரமான பழக்கங்களை நாம் மாற்றிக் கொள்ள ஏனோ தவறி விடுகின்றோம்.

10.45 மணிக்கு புறப்பட இருக்கும் விமானத்தில் பறக்க இருக்கும் நாம் இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்பே விமான நிலையத்தை அடைந்து விடுகிறோம்.

தொடர்வண்டியில் அல்லது பேருந்து வண்டியில் பயணம் செய்ய வேண்டி வரும் போது அது புறப்படும் குறிப்பிட்ட நிமிடத்தில் அதனுள் இருக்கத் தவறுவதில்லை.

ஆனால் யாரையாவது சந்திக்கப் போகும் போதோ அல்லது ஏதாவது கூட்டங்களுக்குப் போகும் போதோ மட்டும்தான் எமக்கு ஏனோ குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் இருக்க வேண்டும் என்ற உணர்ச்சி ஏற்படாமல் போய்விடுகிறது.

எத்தனை மணிக்கு அந்த நிகழ்ச்சி ஆரம்பிக்கும் என்பது எமக்கு பல நாட்களுக்கு முன்னர் நன்கு தெரிந்திருந்தும் அந்த நிகழ்ச்சிக்கு நாம் நேரம் தவறியே போகிறோம்.

விமானத்திற்கும் தொடர்வண்டிக்கும் நேரம் தவறாத நாம் நிகழ்வுகளுக்கோ அல்லது விழாக்களுக்கோ போகும் போது மட்டும் நேரம் தவறுவதற்கு என்ன காரணம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தமிழ் நிகழ்வுகள் அல்லது விழாக்கள் காலம் தாழ்த்தி ஆரம்பித்ததை நாம் அறிவோம். ஆனால் அது எல்லா இடங்களிலும் நடைபெறும் என எதிர்பார்ப்பது முட்டாள்தனம் இல்லையா?

ஐரோப்பியர்களின் நிகழ்வுகளுக்கு வரும் நம்மவர்கள் தமது காலம் தாழ்த்தும் கலாச்சாரத்தை மாற்றாமல் வருவது மட்டுமல்ல ஏற்கனவே ஆரம்பித்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு நிகழ்வு மண்டபத்தில் நுழையும் போது சத்தம் போட்டுக் கூட்டத்திற்கு இடைஞ்சல் செய்யாமல் மெதுவாக ஒரு இருக்கையில் போய் அமரவேண்டும் என நினைப்பதுமில்லை.

அவரது காலம் தாழ்த்திய வருகையின் சத்தம் கேட்டு கூட்டம் தடைப்பட்டு அவருக்காக சில நிமிடங்கள் பேச்சாளர் தனது பேச்சை நிறுத்திக் காத்திருப்பதைக் கூட காலம் தாழ்த்தி வரும் அவரால் புரிந்து கொள்ள இயலாமல் இருப்பதே இங்கு கசப்பான உண்மையாகும்.

இதைவிடக் கேவலமான பழக்கமும் சிலரால் கடைப் பிடிக்கப்படுகிறது. நடந்து கொண்டிருக்கும் கூட்டத்திற்குள் நுழையும் நம்மவர் அங்கிருப்போரைப் பார்த்து வணக்கம் கூறுவார். இதனால் பேச்சாளர் மட்டுமல்ல கூட்டத்திலிருப் பவர்களும் அவரது நடத்தை மீது வெறுப்படைகிறார்கள் என்பதை அவரால் எப்படி உணரமுடியாமல் போகிறது என்பது புதிர்தான்.

ஏதாவது ஒரு முகவரியில் குறிப்பிட்ட நேரத்தில் நின்றால்தான் குறிப்பட்ட தனது காரியம் நடக்கும் என்றால் அந்த முகவரியில் நேரம் தவறாமல் இருக்கும் அதே நபர் ஒரு கூட்டம் நடக்கும் இடம் தேடி அலைந்ததால் காலம் தாழ்த்தி வரவேண்டி வந்ததாக காரணம் காட்டும் போது அதைக் கேட்பவர்கள் மனதுக்குள் சிரிக்க மாட்டார்களா?

(ஈழகேசரி, இலண்டன் – மே 1996)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. என் மனைவி என் தந்தையின் மனைவியாக அழைக்கப்பட்டாள்

பொதுவாக நம்மவர்கள், இந்துக்கள் மத்தியில் குடும்பப் பெயர் ஒன்று இல்லாத காரணத்தினால் ஐரோப்பா வில் நாம் படும் வேதனை சிரிப்புக்கிடமாகவும் அதேசமயம் கவலைக்கிடமானதாகவும் உள்ளது.

நம் நாட்டுப் பத்திரங்களில் தகப்பன் பெயர் சொந்தப் பெயர் ஆகிய இரண்டையும் பயன்படுத்தியபோதோ, முழுப் பெயர் எனக் கேட்கப்பட்ட இடத்தில் முதலில் தகப்பன் பெயரையும் பின்னர் தனது பெயரையும் பத்திரங்களில் குறிப்பிடும் போதோ எமக்கு எந்த விதமான மனச் சங்கடங் களும் ஏற்பட்டது கிடையாது.

மேலை நாடுகளில் தகப்பன் பெயர் என்ன? எனக் கேட்கும் வழக்கம் கிடையாது. மாறாகக் குடும்பப் பெயர் என்ன? என்ற கேள்விதான் சாதாரண வழக்கில் இருப்பதால், இங்குள்ள சகல பத்திரங்களிலும் குடும்பப் பெயர் என்ன என்றே கேட்கப்படுகின்றது.

எம்மைப் பொறுத்த வரை குடும்பப் பெயர் இல்லாத காரணத்தாலும் அந்தச் சந்தர்ப்பத்தில் எமது தேவை எப்படியாவது பூர்த்தி செய்யப்பட்டாக வேண்டும் என்பதாலும் எமக்குத் தெரிந்த முதல் பெயரான தகப்பன் பெயரையே குடும்பப் பெயராகக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டது.

இது மிகப் பாரதூரமான பின் விளைவைத் தோற்று வித்தது. எனது மனைவி திடீரென எனது அப்பாவின் மனைவி யாக அழைக்கப்பட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



005389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் குழந்தை எனது அப்பாவின் குழந்தையாகக் கணிக்கப்பட்டது.

என் சகோதரனுக்குச் செய்த திருமண ஏற்பாடு எனது அப்பாவுக்குச் செய்த திருமண ஏற்பாடாகியது.

ஐயோ இந்த வேதனையை யாரிடம் எப்படிச் சொல்லி அழுவது?

நாகேஸ் உருத்திரமூர்த்தி என்ற எனது முழுப் பெயரை இங்கு குடும்பப் பெயர், என் பெயர் என்ற இரண்டாகப் பிரித்துப் பாவிக்க முனையும் போது எனது பெயர் உருத்திர மூர்த்தி என்று நான் இங்கு கூறினால் எனது அப்பாவின் பெயர் குடும்பப் பெயராகப் பார்க்கப்படும். அப்போது எனது மனைவி திருமதி உருத்திரமூர்த்தி என்பதற்குப் பதிலாக திருமதி நாகேஸ் என்று அழைக்கப் படுவாள்.

தன் கணவனின் பெயருக்குப் பதிலாக மாமாவின் பெயரால் அழைக்கப்படும் மனைவியின் வேதனை ஒருபக்கம்.

அப்பாவின் பெயரையே மாற்றிச் சொல்ல வேண்டிய குழந்தையின் வேதனை மறுபக்கம்.

எனது குடும்பப் பெயர் உருத்திரமூர்த்தி என நான் குறிப்பிட்டால் எனது மனைவி பிள்ளைகளின் பெயரில் மாற்றம் வராது தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் எனது பெயர் நாகேஸ் என்றாகி விடும்.

"இவங்கள் இப்படித்தான் சொல்லுவாங்கள்" எனச் சமாதானப் படுத்துவோர் பலர்.

"இஞ்ச எங்கட அப்பப்பாவின்ர பெயரைத்தான் எங்கட அப்பாவுக்கு வைச்சிருக்கு" என்று ஒன்றும் அறியாத குழந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் கூறுவதையும் கேட்டு நெஞ்சு வெந்து கொண்டிருக்கிறது.

இந்த வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கும் தமிழர்கள், புதிதாக வரும் தமிழருக்கு ஆலோசனை கூறும் முகமாக உன் குடும்பப் பெயரைக் கேட்டால் உன் பெயரையும் சொந்தப் பெயருக்கு அப்பாவின் பெயரையும் சொன்னால் உனது மனைவி உன்னவளாகவே அழைக்கப்படுவாள். உனது பிள்ளையும் உன் பெயராலேயே அழைக்கப்படுவார்கள் என அறிவுரை கூறி அனுப்பிய போதும் அலுவலகத்தில் உள்ள மொழி பெயர்ப்பாளர் தனது திறமையைக் காட்ட விரும்பி அப்படிச் சொல்லக் கூடாது. அப்பாவின் பெயர்தான் குடும்பப் பெயராகும் எனக் கூறி அந்த முயற்சியையே கெடுத்து விட்ட சம்பவங்களும் உண்டு.

துணிவுடன் தன்பெயரையே தன் குடும்பப் பெயராகப் பதிந்தவர்களும் நம் மத்தியில் இருக்கின்றார்கள்.

இவர்களுக்கு இன்னும் ஒரு வகையில் சிக்கல் ஏற்படுகிறது. எமது நாட்டுக் கடவுச் சீட்டில் முதலில் அப்பாவின் பெயரும் பின்னர் சொந்தப் பெயரும் எழுதப்பட்டிருக்கின்றது. அடைக்கல நாட்டின் அனுமதிப் பத்திரங்களில் இந்தப் பெயர் தலைகீழாக இருக்கும்.

ஏனைய நாடுகளுக்குப் போகும் வாய்ப்பு உள்ளவர்கள் நாட்டு எல்லைகளில் சோதனையிடப்படும் போது ஐரோப்பியக் கணினியில் ஐரோப்பியப் பெயர் இருப்பதால் மேலதிக கேள்விகளும் பெயர் மாற்றத்திற்கான காரண விளக்கமும் தேவைப் படுகின்றது.

இங்கு மொழிப்பிரச்சனை தோன்றும் பட்சத்தில் மிகவும் பரிதாப நிலை ஏற்படுகின்றது.

(ஈழகேசரி, இலண்டன் – ஜனவரி 1995)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. பயம்

எனக்கு எப்போதும் பயம்
என்னை அவர் தாழ்த்திடுவாரோ என்று
எடுத்ததற்கெல்லாம் இரைந்து கத்துவேன்
எதுவும் சொல்லாமல் அடக்கிட விரும்பி

உண்மைகள் இருப்பினும் உணர மறுத்து
உடனே நாவால் ஒலியை எழுப்பி
உடைத்திட முனைவேன் உண்மையை
உருட்டிப் பிரட்டித் திசை திருப்பி உயர்ந்தவளாவேன்.

நாடு விட்டு நாடு வந்தாலும்
நாவுக்கு எலும்பு முளைக்காததனால்
நான் என்றும் எழும்பியே இருப்பேன்
நான் ஆளும் வீட்டாட்சியில்

எல்லை மீறி விடயம் போனால்
எடுத்தெறிவேன் என் இறுதி ஆயுதத்தை
என்ன இருந்தாலும் பெண்ணை அடிமைப் படுத்தும்
எளிய ஆண் வர்க்கம் தானே நீங்கள் என்று

பெரிதும் நொந்து புழுங்கிப் போவார் அவர்
பெருமையில் திளைத்து வெற்றிக் களிப்பில்
பெண் விடுதலை பெற்று நிமிர்ந்த
பெண்ணாய் வீழ்ந்து கிடப்பேன் கட்டிலின் மேலே.

(ஆக்கம் 1990.
பிரசுரம்: உணர்வுகளின் சங்கமம், சுவிஸ் – 2000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. சீட்டும் சீரழிவும்

நம்மவர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான "வங்கி" களில் ஒன்று சீட்டுவங்கி. ஆரம்ப காலத்தில் எமது நாட்டில் சேமிப்பு வசதிகள் குறைவாக இருந்த காரணத்தினால் எம்மவர் மத்தியில் அறிமுகப் படுத்தப்பட்ட ஒருவகை சேமிப்புத் திட்டமே இந்தச் சீட்டு. இது நாளடைவில் வியாபாரத் தந்திரமாகவும், பணம் சேர்க்கும் குறுக்கு வழியாகவும் நம்மவர்களால் கருதப்பட்டது.

ஐரோப்பாவில், இது நம்மவர் மத்தியில் அண்மைக் காலமாக பெரிய பிரச்சனைகளை உருவாக்கி விட்டுள்ளது. குடும்பத்தின் பணத் தேவைக்குச் சீட்டுப் பிடிக்க அல்லது கட்ட ஆரம்பித்த நம்மவர்கள் அதனையே தொழிலாக்கி மற்றவரின் கஷ்டத்தில் இலாபமடைய சீட்டுப் பழக்கத் தினைப் பயன் படுத்தத் தொடங்கினர். இது இன்று பலரது குடும்பங்களையே பிரித்து விட்டது.

தனது மாதாந்த வருமானத்தின் ஒரு பகுதியைச் சேமிக்க விரும்புவது நல்லது. இதனை அனைவரும் வரவேற்பார்கள். ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் மாத வருமானத்தைப் போல் இரண்டு அல்லது மூன்று மடங்கு தொகையில் சீட்டுக் கட்டி குறுகிய காலத்தில் பெரும் தொகையை அடைய முனைவது முட்டாள்தனமானது.

இரண்டு அல்லது அதற்கு மேல் சீட்டுகளைக் கட்டி அதில் ஒன்றை எடுத்து வட்டிக்கு விட்டு அந்த வட்டியாலும் மற்றைய சீட்டுகளின் கழிவாலும் எல்லாச் சீட்டுகளையும் கட்டி முடித்து விடலாம் என மனப்பால் குடித்தபடி தனது சக்திக்கு மீறிய தொகையில் சீட்டுக்கட்டி, அதனைத் தொடர முடியாமல் கடன் பட்டு, கடனை அடைக்க முடியாமல் நாடு மாறி, தான் மட்டுமல்லாது மற்றவரையும் சிக்கலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டி விட்டச் சம்பவங்களும் இங்கு ஏராளம்.

சீட்டால் ஏற்பட்ட கடன் தொல்லையால் இரவு பகல் பாராத தொலைபேசித் தொந்தரவுகளைத் தாங்க முடியாது கணவன் மனைவி தமக்குள் சண்டையிட்டுப் பிரிந்து விவாகரத்துச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு, அவர்களது பிள்ளைகள் பெற்றோரைப் பிரிந்து தவிக்கும் நிலை கூட இங்குண்டு.

சீட்டால் ஏற்பட்ட தொல்லை காரணமாக பல வருட காலமாக தொடர்ந்து செய்த வேலையையும் இழந்து, இருந்த வருமானத்திற்குக் கூட வழியின்றித் தவிப்போரும் உண்டு.

சீட்டால் ஏற்பட்ட கடன் தொல்லைப் பிரச்சனைகளில் இருந்து தப்ப அல்லது கவலையை மறக்க சர்வநிவாரணி என நினைத்து மதுப் பழக்கத்தை நாடி நண்பர்களைப் பகைவர் களாக்கிக் கொண்டவர்கள் நம்மத்தியில் பலர்.

இவை மட்டுமல்லாது சில மாதங்களுக்கு முன் திருமணம் செய்து கொண்ட தனது மனைவியைக் கண்டபடி தாக்கி அடித்து உதைப்பதன் மூலம் தனது பிரச்சனைகளில் இருந்து தப்பிக்க முயன்று, மனைவியைப் பிரிந்து வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட சம்பவமும் நடந்திருக் கிறது.

எத்தனையோ விடயங்களில் முன்னேறிவிட்ட நாங்கள், இன்னும் மற்றவரின் கஷ்டத்தில் இலாபமடையும் இந்தச் சீட்டுப் பழக்கத்தை சற்று மாற்றிக் கொண்டால் என்ன?

இங்கு பணத்தைப் பாதுகாக்க வங்கிகள் உண்டு. எங்கள் சேமிப்பினை அவை உத்தரவாதத்துடன் திருப்பித் தரும் என்பது தெரிந்திருந்தும் இன்னும் ஏன் இந்த வீண் சிக்கலில் மாட்டுகின்றோம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சீட்டால் இன்னும் சீரழிய இருக்கும் குடும்பங் களை நினைத்தாவது எங்கள் பழக்கத்தை எமது சக்திக்கு உட்பட்ட அளவில் அதாவது எமது நிரந்தர மாத வருமானத் தில் எமது சேமிப்பிற்குரிய தொகையளவில் மட்டுப் படுத்தி எம்மையும் மற்றவர்களையும் பாதுகாத்துக் கொள்ள முயற்சிப்போமா?

எமக்கு நாட்டுப் பிரச்சனை ஒன்று உண்டு. அது இந்தச் சீட்டுப் பிரச்சனையால் மறந்து போய்விடும் நிலை ஏற்பட்டா லும் ஆச்சரியமில்லை. "இங்கு எனது பணத்தை அவனை நம்பிக் கொடுத்தேன், அப்பிக் கொண்டு போய் விட்டான்" எனச் சிலரும். "கழித்து எடுத்தவர்கள் கட்டாமல் விட்டதால் தான் எனக்கு இந்த நிலை" எனச் சிலருமாக வீதி வீதியாகப் புலம்பித் திரிவதை நாம் இன்று இங்கு சர்வ சாதாரணமாகக் காணலாம்.

நேற்று நம்பிக்கைக்கு உரியவராக இருந்தவர் இன்று துரோகியாகிவிட்டார்.

நேற்று மரியாதைக்குரியவராக இருந்தவர் இன்று கீழ்த்தரமாகிவிட்டார்.

நேற்று பிரபலமானவர் இன்று கேலிக்குரியராகி விட்டார்.

நேற்று இனிய நண்பன் இன்று பகைவனாகிவிட்டான்.

நேற்று நல்லவனாக இருந்தவனை இன்று கெட்டவ னாக மட்டுமல்ல நிம்மதியற்றவனாகவும் மாற்றித் தனிமை யில் கதைப்பவனாகவும் மாற்றிக் கொண்டிருக்கும் இந்தச் சீட்டுப் பழக்கம் இன்னும் எமக்குத் தேவைதானா?

(ஈழநாடு, பாரீஸ் – 21.09.1995)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. தூரத்து விடி வெள்ளி
## ஒரு தந்தையின் பார்வை

நாட்டுப் பிரச்சனையால்
நான் பிரிந்த குடும்பத்தை மீண்டும்
வீட்டில் சந்திக்க விரும்பும் எனக்கது
தூரத்து விடிவெள்ளி.

அன்னிய நாடொன்றில் அகதியாய்
அடைக்கலம் கேட்ட மூத்தவன்
ஈழத்தில் தன் குழந்தைகட்கு இனிய தமிழை
ஈன்றிடும் அந்நாள் தூரத்து விடி வெள்ளி.

ஆர்மிக் காம்பில் அடைபட்ட இளையவனும்
அவனுடன் சேர்ந்து சிறைபட்ட மருமகனும்
இருண்ட வாழ்வில் ஒளியாய் விடுதலை
என்பது இருவர்க்கும் தூரத்து விடி வெள்ளி.

உள்ளத்தில் மனைவி மக்கள் உதிரமாய் வடியும் போது
இனியும் உயிருடன் நாம் வீடு சென்று
இனிய வாழ்வைக் காண்போம் என்பது
இருவர்க்கும் தூரத்து விடி வெள்ளி.

தாலியிட்டவர் உயிருடன் மீள்வரா
தாயுடன் தந்தையும் கிடைப்பாரா மழலைகட்கு
இழந்த எம் வாழ்வு மீண்டும் துலங்குமா என்பது
என்னிரு பெண் குழந்தைகட்கும் தூரத்து விடிவெள்ளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கங்களில் இயங்கும் என் இளைய மூவர்க்கும்
இலக்கை நாம் அடைந்திடுவோம்
இனிய வாழ்வு கண்டிடுவோம்
இழந்த உரிமை வென்றிடுவோம்
இறவாமல் வாழ்ந்திடுவோம்
இனிய தமிழ் காத்திடுவோம்
இயக்கங்களை இணைத்திடுவோம்
இதயத்தில் இவையெல்லாம்
தூரத்து விடிவெள்ளிதான்.

(ஐரோப்பிய எழுத்தாளர் ஒன்றியம் – 1988)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 8. மரம்

மனிதானாய்ப் பிறவாமல் மரமாய் நான்
மண்ணில் இருப்பது நான் செய்த பாக்கியமே
மரமாய் நான் இருப்பதால்தான் மற்றோரால்
மதம் மாற்றப் படவில்லை.

எனக்கு நாகரீகம் தேவையில்லை.....
எனினும் நான் தலைகீழாய் மாறவில்லை
என் பெற்றோர் என் தயவை நாடவில்லை
எனினும் நான், அவரை வெட்கித் தலைகுனிய
வைக்கவில்லை

தண்ணிதான் என் உணவு, புகைப்பதே என்முடிவு
தண்ணி போட்டு நான் ஆடவில்லை
கோடாரிக் காம்பாக என்னையவர் மாற்றிடினும்
கோழையாய் என் இனத்தை நானே அழிப்பதில்லை.

பெட்டகமாய் என்னை ஆக்கும் மனிதரைப்போல்
பொறாமைப் பெட்டகமாய் நான் ஆவதில்லை
மற்றவரைக் கண்டு நான் புகழாவிடினும்
புறங் கூறி என்றும் நான் திரிந்ததில்லை.

(மனிதம், சுவிஸ் – 20.03.1987)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ௯. பிஞ்சுகள் மீதான பாலியல் வன்முறைகளும் வடுக்களும்

இங்கு ஐரோப்பாவில் எமது தமிழ்ப் பிஞ்சுகள் தவிர்க்க முடியாத நிலையில் மிகப் பெரிய சிக்கல் நிறைந்த உலகில் தனித்து விடப்படுகிறார்கள்.

வளர்ந்தவர்கள் எனக் கூறிக் கொள்ளும் நாங்கள் எமது கண்களால் பார்க்கக் கூசும் அல்லது பார்க்க அஞ்சும் காட்சி களை எல்லாம் எமது பிஞ்சுகள் பார்க்க நேரிடும் போது, அது அவர்கள் மூளையில் ஏறாது என்றோ அல்லது அவர்களது மனதில் எதுவித தாக்கத்தினையோ சலனத்தினையோ ஏற்படுத்தாது என்றோ அல்லது அவர்களுக்கு விளங்காது என்றோ நினைத்துக் கொள்கிறோம்.

அல்லது அந்தச் சூழ்நிலை பற்றிச் சிந்தித்துப் பார்க்காம லேயே விட்டு விடுகிறோம்.

உண்மையில் நடப்பது என்ன? நான் இங்கு இரண்டு விதமான உண்மைச் சம்பவங்களை உங்கள் முன் தருகிறேன்.

எம்மவர்கள் தெரிந்தோ தெரியாமலோ இங்கு வந்து சேர்ந்த பின்னர் பலவகையான நிர்ப்பந்தங்களுக்கு ஆளாக வேண்டியுள்ளது. இவற்றில் சில செயற்கை அல்லது சூழ்நிலை நிர்ப்பந்தம், மற்றைய சில இயற்கை நிர்ப்பந்தம் ஆகும்.

இயற்கையால் மனிதனுக்கு அளிக்கப்பட்ட ஒரு தவிர்க்க இயலாத உணர்ச்சியாக பாலுணர்ச்சியும் அமைந்து விடுகிறது. இங்கு காணும் காட்சிகள், சூழல்கள் பாலியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிக்குத் தூபம் இடுவனவாகவே அமைகின்றன.

பண்பு, மரியாதை, பயம் எனப் பலவழிகளிலும் தம்மைக் கட்டுப்படுத்த முயன்றும் எல்லாச் சந்தர்ப்பத்திலும் எல்லோராலும் வெற்றியடைய முடிவதில்லை. சில சந்தர்ப் பங்கள், சூழ்நிலைகள் மனிதர்களைக் கெட்ட மிருகங்களாக மாற்றிவிடுகின்றன.

இது எப்படி? ஏன்? என்பதை ஆராய்வதல்ல இங்கு எனது நோக்கம். இதனால் ஒருவரை அறியாமல் மற்றவருக்கு ஏற்படும் பாதிப்பினை எடுத்துக் காட்டுவது மட்டுமே இங்கு எனது நோக்கமாகும்.

ஒன்பது வயதில் இங்கு அழைத்து வரப்பட்ட தமிழ்ப் பிஞ்சு ஒன்று, தனது குடுப்பத்திற்கு ஐரோப்பாவில் அறிமுக மான தமிழ் மாமாவுடன் தனித்திருக்க வேண்டிய சந்தர்ப்பங் கள் ஏற்பட்டதால் அந்த மாமாவின் அன்புத் தொல்லைக்கு பயன்பட வேண்டியதாயிற்று.

மாமாவின் உணர்ச்சி தணியும் போதெல்லாம் அந்தப் பிஞ்சும் பயன் அடைந்ததாக மாமா எண்ணிக் கொண்டான்.

காலம் ஓடியது. பிஞ்சு காயாகிக் கனியும் போதுதான் மாமாவின் அன்புத் தொல்லை காம வெறி என்பதைத் தெரிந்து கொள்ளும் அறிவு பெறுகிறது.

ஏதோ காரணத்திற்காகத் தனது குடும்பத்தவர் அவரிடம் கடமைப்பட்டுள்ளனர். அதனால் அவர்கள் அவர் மீது மதிப்பும் நம்பிக்கையும் வைத்திருப்பதால் உண்மையை உடைத்துச் சொல்லும் தைரியம் ஏற்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே சமயம் தான் அறியாப் பருவத்தில் அந்தக் கயவனால் கசக்கிப் பிழியப்பட்டதை மறக்கவும் முடிய வில்லை.

இங்கு பாடசாலையில் பல குழந்தைகளுடன் பழகும் போதும் அவர்களது உரிமை, பாதுகாப்பு என்பவற் றையும் ஐரோப்பியச் சட்ட திட்டங்களையும் அறிய வரும் போதுதான் தன் வாழ்க்கையுடன் விளையாடி தனது உள்ளத்தில் அழியாத ஒரு வடுவை ஏற்படுத்திய அந்தக் கயவனை எந்தச் சந்தர்ப்பத்திலும் மறக்க முடியவில்லை.

இன்று வளர்ந்து விட்டாலும் தமிழ்ச் சமுதாயம் என்ற சக்தியால் கட்டுப்பட்ட நிலையில் தனது வேதனையை வெளியிட முடியாமல் தவித்தது உள்ளம்.

பெற்றோரிடம் கூறி விளக்க முடியவில்லை. 'ஏன் உடனே கூறவில்லை, பல வருடங்கள் கழித்துச் சொல்லு கிறாய்' எனக் கேட்டால் பாலியல் கல்வி எதுவும் இன்றித் திருமணத்திற்குப் பின்னர் மட்டுமே பாலியலை அறிந்து வாழ்க்கை நடாத்தும் அப்பெற்றோருக்குத் தான் தரும் விளக்கம் புரியவே புரியாது.

அப்படிப் புரிந்தாலும், 'இனி என்ன செய்வது, வெளியில் சொன்னால் உனக்குத்தான் வெட்கம்' என்பார்களே தவிர வாழ்க்கை முழுவதும் அந்தச் சகிக்க முடியாத துன்ப நினைவுகள் தொடரப் போவதையோ அல்லது அறியாப் பருவத்தில் பலியானதை மறக்க முடியாது என்பதையோ நினைக்காமல் திருமணம் செய்து வைத்து அதன் மூலம் புதிய வாழ்வு அளித்து விட்டதாக அவர்கள் நினைத்து நிம்மதி அடைந்து விடுவார்கள் என எண்ணிய உள்ளத்தால் எதுவும் செய்ய முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்க வேண்டிய உரிமை கிடைக்காததால் தனிநாடு கோரிப் போரிடும் இனத்தைச் சேர்ந்தவளுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமையும் அதே இனத்தால் பறிக்கப் படுவது மறைக்கப்படுகிறது என்பதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

படிப்பில் நாட்டமின்மை ஏற்படுகிறது. இரவில் தூக்கமின்மை ஏற்பட்டுத் தவித்தது உள்ளம். இரவில் பயந்து கத்துவதும் நித்திரையில் பிதற்றும் நிலையும் ஏற்பட பெற்றோர் பிள்ளையை வைத்தியரிடம் எடுத்துச் செல்கின் றார்கள்.

அங்கு பரிசோதிக்கப்பட்டு மூளை நரம்பியல் நிபுணர் கள் தொடக்கம் மனோ தத்துவ நிபுணர்கள் வரையில் தமது பங்களிப்பினைச் செய்த போதிலும் தனது வாயால் சொன்னால்தான் அவர்களுக்குத் தெரியவரும் என்பது அந்த உள்ளத்திற்குத் தெரிந்திருந்தும் சொல்ல முடியாது தவித்தது.

தனது தவிப்புக்குத் தீர்வு கிட்டாது எனக்கண்டு தானாகவே ஒவ்வொருவரையும் தண்டிக்கத் தீர்மானித்தது.

முதலில் தன்னருகே இருந்தும் தனது இந்த இக்கட்டான நிலைமைக்குக் காரணமான பெற்றோரைத் தண்டிக்க அவர்களை வெறுக்கத் தொடங்கியது.

அவர்களது இனமான தமிழினத்தையே வெறுப்பதன் மூலம் தனது தண்டனையை அதிகரித்தது.

பின்னர் தன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய மாமாவின் மகளுக்கும் இதே நிலையை ஏற்படுத்தி, தன் வேதனையை அவனது மகள் மூலமே அவனையும் அடையச் செய்யத் திட்டமிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கயவன், அறியாப் பருவத்தில் தன்னைச் சீரழித்ததற்காக அறியாப் பருவத்தில் இருக்கும் அவனது மகளைப் பழிவாங்குவதில் எந்த நியாயமும் இல்லை எனத் தெரிந்து கொண்டு அந்த எண்ணத்தையே மாற்றிக் கொண்டது.

ஆனாலும் தன்னை மாற்ற முடியாது தவிக்கிறது பிஞ்சிலேயே கசக்கிப் பிழியப்பட்ட அந்த உள்ளம்.

தமது உடலின் பாகமான தமது பிள்ளையின் நிலையை இன்று அறிந்து கொண்ட போதிலும் எதுவும் செய்ய முடியாத திரிசங்கு நிலையில் தவிக்கும் அந்தப் பெற்றோரின் நிலை உங்களுக்கும் வேண்டுமா?

(ஈழநாடு, பாரீஸ் - 29.06.1995)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. கயவனால் காயப்படுத்தப்பட்ட எட்டு வயதுச் சிறுவன்

அவனுக்கு அன்று வயது எட்டு. அவனது மனோ நிலை........

வழமை போல் பாடசாலைக்குச் சென்றாலும் முன்னைய சுறுசுறுப்பு தமது பிள்ளையிடம் காணப்பட வில்லை எனப் பெற்றோரும், படிப்பில் அக்கறை ஏற்பட வில்லை எனப் பாடசாலை ஆசிரியர்களும் கவனிக்கத் தொடங்கினர். காரணம் என்ன?

கண்டறியப் பல வழிகள் நாடப்பட்டன. வைத்தியர்கள், மனோவியல் நிபுணர்கள் போன்றோரின் உதவிகளும் நாடப்பட்டது. காரணம் கண்டறியப்பட்டபோது அது அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

தமது மூத்த பிள்ளை இலங்கையில் இருக்கும் போது மட்டுமல்ல எட்டாவது வயதில் இங்கு வந்த பின்னரும் மிகவும் கெட்டித்தனமான விவேகமான பிள்ளையாகவே இருந்ததாகவும் இப்போது மட்டும் மிகவும் பின்தங்கி விட்டதாகவும் இது பாசைப்பிரச்சனை அல்லது புதிய சூழல் அல்லது புதிய கல்விமுறைதான் காரணம் எனவும், காலப் போக்கில் எல்லாம் சரிவந்து விடும் எனவும் எண்ணிக் காத்திருந்த பெற்றோருக்கும் பிள்ளையை வகுப்பில் தொடர்ந்து கவனித்து வந்த ஆசிரியர்களுக்கும் அந்தப் பாலகனின் போக்குப் புரியாத புதிராகவே இருந்தது.

படிப்பில் நாட்டமின்மை, சொல்வதைக் கிரகிக்கும் தன்மைக்குறைவு, எந்நேரமும் ஏதோ சிந்தனையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்தல், வகுப்பில் பின்தங்கிய நிலை என்பன தொடர்ந்து அதிகரித்துச் செல்லவே பாடசாலை மூலமாக நிபுணர்களின் உதவிக்கு விண்ணப்பிக்கப்பட்டது. அந்தப் பாலகனை பரீட்சிக்க நியமிக்கப்பட்ட நிபுணர், பெற்றோரை அழைத்து பிள்ளையின் பிறப்பு முதல் இன்றுவரை நடந்த சம்பவங் களை ஒவ்வொன்றாகக் கேட்டபோதுதான் அந்த அதிர்ச்சிச் சம்பவமும் வெளியே வந்தது.

வழமைபோல் பாடசாலையால் வந்து கொண்டிருந்த அந்த பாலகனை ஒரு ஐரோப்பியன் இடைமறித்து கதை கேட்டான். சம்பாசணை வளர்ந்து செல்ல தனக்கு ஒரு சிறு உதவி செய்ய முடியுமா எனக் கேட்டுள்ளான்.

அன்னியர்களைக் கண்டால் அவதானமாக இருக்க வேண்டும் என்பதை அறியாத அந்தப் பாலகன் அனைவருக் கும் உதவி செய்வதில் மகிழ்ச்சி அடையும் பண்புடைய வனாக இருந்ததால் அதற்குச் சம்மதித்தான்.

சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்ட அந்தக் கயவன் வானுயர வளர்ந்த ஒரு கட்டடத்தின் நில அறைக்குள் சிறுவனை இட்டுச் சென்றான். யாருமற்ற இருட்டான ஒரு இடத்தில் வைத்து அந்தப் பாலகனின் உடைகளைக் களைந்த அந்தக் கயவன் பச்சிளம் பாலகன் என்பதைக் கூட மறந்து அந்தப் பிஞ்சின் மர்ம உறுப்பைத் தடவிக் கசக்கத் தொடங்கவே வேதனை தாங்க முடியாத அந்தப் பிஞ்சு அலறி அடித்துக் கொண்டு ஓட முற்பட அவனும் துரத்த முற்பட பயம் என்றால் என்ன என அறியாத அந்தப் பிஞ்சின் மனதிலும் மரண பயம் ஏற்பட்டது.

அவனது பிடியில் இருந்து ஒருவாறு தன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவித்துக் கொண்டாலும் அந்தப் பாலகனால் மரண பயத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடிய வில்லை.

நடந்த விடயம் பெற்றோருக்குத் தெரிந்த போது, 'இனி யாரும் கேட்டால் அவர்களுடன் போகாதே' எனத் தமது பிள்ளையிடம் கூறுவதைத் தவிர என்ன செய்ய முடியும்? அவர்களும் தம்மால் இயன்றதைச் செய்து விட்டு, கெட்டக் கனவாக மறந்து விட்டார்கள்.

அந்தப் பிஞ்சு உள்ளத்திலிருந்தும் அந்தச் சம்பவம் மறைந்து விடும் என்று அவர்கள் நினைத்து விட்டார்கள். ஆனால் அது மறையா வடுவாகி இன்றும் அந்தப் பால கனைத் தாக்கிக் கொண்டிருப்பதை அறியும் போது அவர்கள் மனம் படும் வேதனையைச் சொல்ல வார்த்தை கிடைக் குமா?

(ஈழநாடு, பாரீஸ் – 07.07.1995)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. இவர்களையும் இனம் காணுவோம்

சீதனம்.........!

சீரில்லா ஒரு பழக்கம்
இதனை எம்மத்தியிலிருந்து
எடுத்தெறிந்திடல் வேண்டும்

முழங்குவோர் பலர்
முயற்சிப்போர் சிலர்

செயலில் காட்ட
பலபேர் விரும்பினர்
செயலில் காட்டிட
சிலரால்தான் முடிந்தது

சீதனம் என்பது
காளைக்கும் கன்னிக்கும்
கதையாலும் கவிதையாலும்
காரசாரமாக............
உணர்ச்சிப் பூர்வமாக..........
காளையாலும் கன்னியாலும்
காணக்கூடிய ஒரு
கருவாக இருக்கிறது.

"சகோதரிகளைக் கரை சேர்க்கத்தானே
வாங்க வேண்டியுள்ளது"

மற்றவரின் சகோதரியைக்
கரைக்கு இழுக்க
தான் பெற்றதை சமாளிக்கும்
அரை வேக்காட்டுத்தனம் இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவன் எதுவும் சொல்லட்டும்
"என் மகளுக்குக் கொடுத்துத்தான்
கட்டி வைப்பேன்"
"என் மகனை வளர்க்கப் பட்ட
கடன் கட்ட வேண்டாமா?"

இவை பெற்றோரின் வாக்கல்ல
அறிவு அற்றோரின் வாக்கேயாம்.

சீதனம் சில காலம் மட்டுமல்ல
சிந்தனை முடிவு வரை
தொலைந்து போகாது.

"தம்பி இது எங்கட கலாச்சாரம் (?)
தான்தோன்றித்தனமாய்க் கதையாதை
ஒரேயடியாய் மாற்ற இயலாது....
மற்றவையும் மாறேக்க பாப்பம்.....
இப்ப இவனுக்கு இருபதாயிரம்
பிராங்கு கொடு நான் ஒப்பேத்திறன்
குமர் கரை சேருதெண்டால் சும்மாவா"

தவறை
தெரியாமல் செய்வர் சிலர்
தெரிந்து செய்வர் சிலர்
இதை விடத்
தெளிந்தே செய்பவர்கள் இவர்கள்.

இவர்களை இனம் காணுவோம்.
வயதுக்கும் வழுக்கைக்கும் கொடுத்த
போலி மரியாதை போதும்.

(ஈழநாடு, பாரீஸ் - 1997)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. மொழிபெயர்ப்பாளரின் வேதனை

அது ஓர் அகதிகளுக்கான உதவி நிறுவனம்.

அலுவலகத்தில் சமூகசேவையாளரும் மொழிபெயர்ப் பாளரும் கடமையில் இருந்த போது தமிழ்க் குரல் இரு மொழிகளில் பேசியது.

"வணக்கம் Guten Tag...."

"வணக்கம்... வாங்கோ... இருங்கோ என்ன விசயம்?" என்று மொழிபெயர்ப்பாளரும்

"Guten Tag" என சுவிஸ் பிரசையான சமூக சேவை யாளரும் அவரை வரவேற்றனர்.

வந்தவர் "பிரச்சனை ஒண்டும் இல்லைங்கோ......" என இழுக்க அதன் மொழிபெயர்ப்பைக் கேட்ட அலுவலர்,

"நல்லது..... அப்ப அவர் போகலாம்.... தயவு செய்து அடுத்தவர் வாங்கோ" எனக் கூறவும் வந்தவர் அவசரப்பட்டு "இல்லைங்கோ இதைக் கொஞ்சம் கேளுங்கோ...." என்றார்.

"கொஞ்சம் பொறுங்கோ" என்று கூறி "சரி சொல் லுங்கோ" என்றார் மொழிபெயர்ப்பாளர்.

"நான் பாருங்கோ கொஞ்ச நாளைக்கு முதல் ஒருக்கா போஸ்ற்றுக்குப் போக வேண்டியிருந்தது என்ன.......? சும்மா தான்.... போனநான் என்ன? போகேக்க அப்படியே ஒருக்கா கொழும்புக்கும் போன் பண்ணிப் போட்டு வருவம் எண்டு நினைச்சநான். நான் இங்கு வந்து நாலு வருசமாச்சு.... என்ன? அம்மா வந்து கொழும்பில் நிண்டு என்னோட கதைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிறவ..... என்ன? எனக்குக் கலியாணப் பேச்சும் இதுக்குள்ள நடந்தது... என்ன? அப்ப நான் காலமை ஒரு பத்து மணி அப்பிடித்தான் எழும்பினநான்.... என்ன? முதல் நாள் எனக்கு வேலையில்லைத்தானே.... ஆ! அப்ப இந்தத் தமிழ்க் கடையில மரக்கறி வாங்கப் போனநான்..... என்ன? ஊரை விட்டு வந்திட்டம் ஊர்ச் சாப்பாடு சாப்பிட்டால் தானே ஒரு மாதிரி இருக்கும். உவங்கட சாப்பாடும் ஒரு சாப்பாடே? எங்கட நாய் கூடத் தின்னாது. என்ன நான் சொல்லுறது சரி தானே?"

"ஓம், ஓம், நீங்கள் சொல்லுங்கோ, விசயத்துக்கு வாங்கோ"

"கடைக்குப் போனாப் போல அங்க எங்கட இவள் குஸ்புவின்ர படம் ஒண்டு புதிசா வந்திருந்தது. அந்தப் படக் கொப்பியையும் எடுத்துக் கொண்டு வந்தநான். அதை இரவிரவாய்ப் போட்டுப் பார்த்து முடிச்சுப் போட்டுப் படுக்க நேரம் செல்லும் தானேங்கோ.... விடியக் கொஞ்சம் லேற்றாப் போச்சு...."

"ஆ...கா.." எரிச்சலுடன் இழுத்தார் மொழிபெயர்ப் பாளர்.

"பிறகு உடன வெளிக்கிட்டு போஸ்ருக்கு எண்டு போன நான். நானும் போகத் திறாம் (tram ) வரச் சரியா இருந்தது..... ரிக்கட் அடிப்பம் எண்டு மெசினடியில போய் பேர்சைப் பார்க்கேக்கதான் சில்லறை இல்லை எண்டு தெரிஞ்சுது.

முதல் நாள்த்தான் இவன் செவ்வன் (வேலைத்தள மேலாளர்) சம்பளம் தந்தவன். தரேக்க பெரிய தாளாய்த் தந்திட்டான் விசரன். நான் முந்தி வேலை செய்த இடத்தில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ட சம்பளத்தை நேர பாங்குக்கு (வங்கிக்கு) அனுப்பி விடுவாங்க என்ன? நான் தேவைக்கு அங்க போய் அளவா எடுக்கிறனான் என்ன?

முந்தின வேலை நல்லமுங்கோ ஆனா அந்த செவ்வன் (முதலாளி) ஒரு விசரன். அவன் சுடுதண்ணி குடிச்ச நாய் மாதிரி எந்த நேரமும் கத்திக் கொண்டு இருப்பான். அதுதான் உன்ர வேலையும் வேண்டாம் நீயும் வேண்டாம் எண்டு மாறினநான்.

இவன் இப்பத்தைச் செவ் (முதலாளி) பறவாயில்லை. எங்களுக்கென்ன மாதம் முடியச் சம்பளம் தந்தால்ச் சரிதானே...

இன்னும் கொஞ்ச நாள்ல லொஸ் (வேலை இல்லை என்று) அடிச்சிட்டு கொஞ்ச நாளைக்குச் சும்மா இருப்பம் எண்டு பார்க்கிறன். வேலை செய்யிறதைவிட லொஸ்சுக்கு (வேலையை இழந்தவர்க்கு) கனக்க எல்லே தருவாங்கள். ஏன் இவங்களுக்கு சும்மா விடுவான்....... ஆ?"

இது வரை அமைதியாய் இருந்த மொழிபெயர்ப்பாளர் சற்றுச் சலிப்புடன்,

"சரி.... அதை விட்டிட்டு விசயத்துக்கு வாங்கோவன்...." என்றார் மீண்டும்.

"ஓமண்ணை நான் கதையோட கதையா அதை மறந்திட்டன்..... ஹி ஹி. ரிக்கற்றுக்குச் சில்லறை இல்லை. மாத்தலாம் எண்டால் இவங்கள் சுவிஸ் காரங்கள் ஒரு கெட்ட சாதி என்ன? கடைசி வரையும் சில்லறை மாத்தித் தரமாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாங்கள். துவேசம் பிடிச்சவங்கள். நானும் இரண்டு கோல்ட் (தரிப்பிடம்) தானே எண்டு ரிக்கற் அடிக்காமலேயே ஏறிட்டன்.

இந்தச் சனியன் பிடிச்ச செக்கர்மார் (பரிசோதகர்கள்) எனக்குப் பின்னால ஏறிட்டாங்கள் போல கிடக்கு. அவன் அங்க வரேக்கையே கண்டிட்டன். உடன எழும்பி அடுத்த கோல்ட்டில (தரிப்பிடம்) இறங்குவம் எண்டு கதவுக்குக் கிட்ட போய் நிண்டன். அவன் மற்றவங்கள விட்டிட்டு நேரா என்னட்ட வந்திட்டான்.

இவங்கள் சரியான துவேசம் பிடிச்சவங்கள். நான் விடுவனே? 'திறாம் காட் (மாதாந்தச் சீட்டு) வீட்டில இருக்கு கொண்டு வர மறந்திட்டன் வேணுமெண்டா என்னோட வா காட்டுறன். இதில இறங்கி நான் இப்ப வேலைக்குப் போக வேணும்' எண்டன். திறாமும் (tram) நிக்க நான் இறங்கிப் போக அவன் விடமாட்டன் எண்டுட்டான். 'அப்ப நீயும் இறங்கு' எண்டு சொல்ல, அவனும் உடன இறங்கிட்டான். பிறகென்ன? விசாவைத் (அடையாள அட்டையைத்) தா எண்டான். என்ர கோட்டுக்குள்ள இருந்து எடுத்துக் கொடுத்தன். பார்த்து எழுதிப் போட்டு விட்டுட்டான். நானும் அதை அப்பவே மறந்திட்டன்."

பொறுமை இழந்த மொழிபெயர்ப்பாளர் "ஆ, பிறகு?" என்றார்.

"பிறகு என்னடா என்றால் கொஞ்சக் காலத்தால காசு கட்டச் சொல்லித் துண்டு வந்தது. நான் கட்டவில்லை."

"ஏன்..?" மனதுக்குள் எரிச்சலைக் கட்டுப்படுத்தியவாறு கேட்டார் மொழிபெயர்ப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LEBARA LIBRARY
Education Resource Center
(ERC)
87, Kanahambigaikulam,
Kilinochchi.



“ஏனோ? இவங்கட சம்பளத்தை எடுத்து இவங்கிட்டயே குடுத்தா நாங்க என்ன நாக்கு வழிச்சுக் கொண்டே போறது? ஒரு மாதம் எவ்வளவு காசு கட்ட வேணும் தெரியுமே? வாடகை, கிறாங்கன் (வைத்தியக் காப்புறுதி), வரி, அது, இது எண்டு எல்லாத்தையும் உவங்கள் தான் எடுக்கிறாங்கள்.

போதாததுக்கு சம்பளத்தில பத்து வீதம் வேற கழிக்கிறாங்கள் கொள்ளையில போவாங்கள். அண்ணை கேட்கிறன் என்டு கோவிக்காதேங்கோ அந்தக் காசைத் திருப்பித் தருவாங்களா அண்ணை?”

“ஓமோம், போகேக்க திருப்பித் தருவாங்கள். அது இருக்கட்டும் நீங்கள் வந்த விசயத்தைச் சொல்லுங்கோவன். இவ்வளவு நேரமும் அதைப் பற்றிக் கதைக்கவே இல்லையே” என்றார் மொழிபெயர்ப்பாளர்.

“அதுதானே சொன்னநான் காசு கட்டத் துண்டு வந்தது. நான் காசு கட்ட இல்லை என்று இப்ப எனக்கு றிஜக்ற் (மறுப்புக் கடிதம்) அனுப்பிப் போட்டான். நாட்டை விட்டுப் போகட்டாம். இப்ப நாட்டிற்குப் போகேலுமே? இவங்கள் அறிவு கெட்ட தனமாயெல்லே செய்யுறாங்கள்.”

“அந்தக் கடிதம் எங்க?” என்றார் மொழிபெயர்ப்பாளர்.

“அந்தச் சனியன் பிடிச்ச கடிதத்தைத்தானே காணேல்ல. பழைய பேப்பரோட கட்டிப் போட்டுட்டன் போல. ஆனா இப்ப போன கிழமை வேறு ஒரு கடிதம் வந்திருக்கு பிறம்டன் பொலிசுக்கு (வெளி நாட்டாருக்கான காவல் நிலையம்) வரச் சொல்லி. நாட்டிற்குப் போற வேலையைப் பாக்கிறதுக் காக்கும் எண்டு பெடியள் வாசிச்சுச் சொன்னவங்கள்.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LESARA LIBRARY
Education Resource Center
(ERC)
87, Kanahathiyakulam,
Kilinochchi.



"சரி பொலிசுக்குப் போனீங்களோ?"

"எனக்கென்ன விசரே அங்க போறத்துக்கு?"

"சரி எப்ப வரச் சொன்னவங்கள்?"

"அது போன திங்கள் கிழமை ஒன்பது மணிக்கு வரச் சொன்னவங்கள்."

"போகாட்டி வந்து பிடிச்சுக் கொண்டெல்லே போயிடுவாங்கள்."

"அது எனக்குத் தெரியும். அதுதான் நான் இப்ப வீட்டில படுக்கிறதில்லை. இரவில ஆரும் பெடியள் வீட்டில் படுத்துட்டு பகல்லதான் வீட்டை போறனான்."

"சரி... இவர் இப்ப உங்களுக்கு என்ன செய்ய வேணும் இவரிட்ட நான் என்ன சொல்ல வேணும்?"

"நீங்க டொல்மேச்சரெல்லே? (மொழி பெயர்ப்பாளர்) இது கூடத் தெரியாதே உங்களுக்கு?" என்றார் வந்தவர் முகத்தைக் கடுப்பாக்கிக் கொண்டு.

"மன்னிக்க வேணும் நீங்க சொன்ன எல்லாத்தையும் என்னால இவைக்குச் சொல்லேலாது..."

"உங்களுக்கு கடைசியாய் வந்த கடிதத்தையாவது தாங்கோ அதைக் கொடுத்தால் அவருக்கு ஏதும் விளங்கும். வாசித்துப் போட்டு ஏதாவது கேட்பார் அப்படிக் கேட்டால், அதை நான் உங்களுக்குத் தமிழ்ல சொல்லுறன்." என்றார் மொழிபெயர்ப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது எனக்கும் விளங்கும்தானே அவர் கேட்டா நான் அவருக்குப் பதில் சொல்லுவன்தானே. எனக்கென்ன டொச்சுத் தெரியாதெண்டே நினைச்சிட்டீங்கள்? நாங்க இங்க சுவிஸ்காரங்களோடதானே வேலை செய்யிறம். அவங்க கதைக்கிறது விளங்கிற படியாலதானே வேலை தந்தவங்கள்" என்றார் அவர்.

மொழிபெயர்ப்பாளருக்குத் தலையைச் சுற்றியது. இதுக்கு மேல இவரோட கதைச்சு நேரத்தை வீணடிக்க விரும்பாதவராய் "அப்ப சரி அண்ணை நான் ஒருக்கா வெளியாலை போக வேணும் நீங்க நேரடியா இவரோட கதைச்சுப் போட்டுப் போங்கோ" என்று கூறிக்கொண்டு இருக்கையில் இருந்து எழுந்து வரிசையில் காத்திருக்கும் மற்றவர்களை நோக்கி வேதனையோடு நகர்ந்தார் மொழிபெயர்ப்பாளர்.

(ஆக்கம் : 1997 தை மாதம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. வேதனை அவளுக்கும் தான்

காலை நேரம் கடைசி மகன் முகம் கழுவும் தொட்டியின் மீது நெளிந்து தொங்கியபடி பல்லைத் தீட்டிக் கொண்டு நின்றான்.

தனக்குள் சிரித்தபடி தான் வேலைக்குப் போகும் வேலையில் ஈடுபட்டவன் குளியலறையை மீண்டும் தற் செயலாகப் பார்த்தபோது வலதுகையை குழாய் நீரில் நனைத்து முகத்தில் பூசிவிட்டு கதவில் தொங்கிக் கொண் டிருந்த துவாயை எடுத்து முகத்தைத் துடைக்க முயன்ற மகனைப் பார்த்து,

"ஏய் இப்பிடியா முகம் கழுவுறது? சவுக்காரம் போட்டு நல்ல வடிவாக் கழுவு. முகம் அசிங்கமா இருக்கு" என்றான்.

அப்போது சமயலறையில் நின்ற மனைவி "நீ இண் டைக்குக் குளிக்க வேணும் குளிக்கேக்க முகத்தைக் கழுவு" என்றதும் அவன் சிணுங்கிக் கொண்டு குளிக்க ஆரம்பித்தான். சற்று நேரம் கழித்து குளியலறையில் இருந்து வந்தபடி,

"எந்த உடுப்பைப் போடுறது?"

என்று கேட்ட அவனது முகம் முதல் இருந்தது போல இருக்கவே,

"ஏண்டா முகத்தைக் கழுவாமலேயா குளிச்சனி?"

"அம்மா மேல்லதான் குளிக்கச் சொன்னவ" என இழுத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“முகம் கழுவியது சரியில்லை போய் வடிவாக் கழுவு” என்று சொல்லிக் கொண்டிருந்தபோதே மனைவி உடுப்பு எடுக்கக் கூட்டிச் செல்வதைக் கண்டு,

“அவன்ர முகத்தைப் பாரும் நல்லாக் கழுவி விடும்” என்றான்.

“அவன்ர முகம் அப்படித்தான் கிறீம் பூசினால் சரியாப் போகும்” என்றபடி மீண்டும் குளியலறைக்குள் அழைத்துச் சென்றாள்.

தன்னையே தான் நம்ப முடியாமல் இருந்தது அவனுக்கு. என்னர பிள்ளையின் முகம் எனக்குத் தெரியாதா? ...... அவன்ர முகம் அப்படித்தானாம்.

நேற்று மேல் வீட்டுப் பிள்ளையின் முகம் பார்ப்பதற்கு அசிங்கமாக இருந்ததாகவும், அப்படியே அந்தப் பிள்ளை பாடசாலைக்கு வந்திருந்ததாகவும் கூறிய அதே வாயால் தான் இன்று வித்தியாசமாகக் கதைக்கிறாள்.

என்ர பிள்ளையின் முகம் எப்படி இருக்கிறது என்று எனக்குத் தெரியாது எனக் கூறும் அவள் என்னை முட்டாள் என்கிறாளா? அல்லது அவளது அவசரப்படும் குணமும் ஆராய விரும்பாமல் தனது கதைதான் எப்போதும் இறுதியாக வும் சரியாகவும் இருக்க வேண்டும் என நினைக்கும் அவளது பழக்கமும் இது வரை மாறவில்லை என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபிக்கிறாளா? என்று நினைத்தான்.

எதையும் யோசிக்காமலேயே கதைக்கத் தொடங்கி விடும் அவளது பழக்கம் எத்தனை தடவை மற்றவர்களின் மனதைப் பாதித்து சில சமயம் வாழ்க்கையின் எல்லைக்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் வந்து விட்ட சம்பவங்களை எல்லாம் அவளால் எப்படி அவ்வளவு இலகுவாக மறந்துவிட முடிகிறது? என்பது அவனுக்கு விளங்காத புதிராகவே இருந்தது.

அவனால் ஆத்திரப்பட முடிகிறது ஆனால் அதனை விளக்க முடியவில்லை. இதுவரை காலமும் அதற்கு முயற் சித்த போதெல்லாம் அதன் முடிவால் அவன் வேதனையை மட்டுமே கண்டான்.

குறிப்பிட்ட ஒரு விடயம் பற்றி மட்டும் பேசாமல் அதனுடன் சம்பந்தமே இல்லாத வேறு விடயங்களுக்கு எல்லாம் சுற்றிச் சுற்றி வந்து தனது வாதம் தான் சரியாக இருக்க வேண்டும் என்பதற்காக மற்றவர்களின் மனம் புண் படக்கூடிய பழைய சம்பவங்களையும் சொற்களையும் தெரிந்து பொறுக்கி வந்து அந்த இடத்தில் திணித்து தான் எப்படியாவது வென்றுவிட வேண்டும் என நினைக்கும் அவளது பழக்கத்தை கதைப்பதன் மூலம் மாற்றவே முடியாது என்பதே அவனது அனுபவம்.

ஒரு பிரச்சனைக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டு மாயின் இரண்டு வழிகள் மட்டுமே இப்போது அவனுக்கு இருக்கிறது.

அவள் சொல்வதே சரி என்று கூறிவிட்டு, அவளது அறியாமையை மனதுக்குள் நொந்து புழுங்குவது ஒரு வழி. மற்றது அவளது வாயை அடக்குவதற்காகத் தன்னைத் தானே தண்டித்துக் கொள்வது.

ஆரம்ப காலங்களில் அவளைத் தண்டிப்பதன் மூலம் அவளது இந்தப் போக்கினை மாற்றி விட நினைத்தவன் அதன் மூலம் தனது பிள்ளைகளின் மத்தியில் கீழ்த்தரமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தந்தையாக மாற்றப்பட்டான்.

அதன் விளைவு இப்போது தன்னைத் தானே தண்டித்துக் கொள்வது என்றாகியது.

குளியலறையிலிருந்து வந்த மகனைப்பார்த்து,

"இனிமேல் சரியா முகம் கழுவ வேணும் என்ன?"

"சரியாத்தானே கழுவினநான்"

"உனக்குத் தெரியும் நீ எப்படிக் கழுவினநீ என்று"

இச்சம்பாசனைக்கிடையில் மீண்டும் புகுந்தாள் அவனது மனைவி.

"அவனுக்கு சோப் போடக்கூடாது என்டு டொக்டர் சொன்னவர்"

"நான் உம்மோடை கதைக்கயில்லை அவனோட கதைக்க விடும்"

"பிள்ளையை ஒரு ஆள்தான் வளர்க்க வேணும்"

"அப்ப அங்கயே இருந்து வளர்த்திருக்கலாமே என்னத் திற்கு இங்க வந்தநீர்?"

"டொக்டர் சொல்றார் சோப் போட்டுக் கழுவ வேண்டாம் என்று..... நீங்க போடச் சொல்றீங்க......"

"உமக்குத் தெரியாது என்ன நடந்தெண்டு. நீர் கதைக் காதையும்." எனக்குச் சொல்றா அவ. அவன்ற முகம் அப்பிடித் தானாம். ஆருக்கு ஆர் என்ன சொல்றதெண்டு தெரியாது கதைக்கிறா கதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் உள்ள மற்றப் பிள்ளைகள் தன்னைக் கேவல மானதாக நினைக்கப் போகிறார்கள். அவர்களுக்கு எப்படி விளங்க வைப்பது என்று மனம் ஒரு புறமும் இனி பொழுது இண்டைக்கு இப்படித்தான் போகப் போகுது; வேலையிலும் இந்தப் பாதிப்பு இருக்கப் போகுது; அங்கயும் நிம்மதியாய் வேலை செய்ய ஏலாது. இவள் கொஞ்சமும் யோசிக்காமல் கதைக்கிறாள் என்று மறுபுறமும் பரிதவித்தது.

பிள்ளையை ஒருத்தர்தான் வளர்க்கவேணும் எனக் கதைக்க வெளிக்கிடும் இவளோட இனி என்ன கதைக் கேலும்? என சில நிமிடங்கள் தவித்த அவனது வாயிலிருந்து சில மோசமான வார்த்தைகள் உதிர்ந்தன.

கதவை இழுத்திச் சாத்தி விட்டு வெளியில் போன வனுக்கு உலகம் வெளிச்சத்திலும் இருட்டாகவே இருந்தது.

என்ன வாழ்க்கையடா இது?

இப்படி எத்தனை நாட்களுக்குத் தான் வாழ முடியும்?

இன்று இங்கு யார் செய்தது பிழை?

அவனது மகன் சுத்தமாக மற்றவர் கண்களுக்கு அசிங்கம் இல்லாமல் தெரிய வேண்டும் என அவன் நினைத்தது பிழையா?

அல்லது அப்பா சொல்வதற்கு மதிப்புக் கொடுக்காமல் பிள்ளை வளர வாய்ப்பு ஏற்படுகிறதே எனவும் பாராமல் குறுக்கே புகுந்து பிள்ளைக்கு முன்னாலேயே பிள்ளையின் முகமே அப்படித்தான் என்றும் பிள்ளையை ஒருவர்தான் வளர்க்க வேண்டும் என்றும் அறிவே இல்லாதவள் போல பேசிய அவனது மனைவி மீது பிழையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் வேதனைப் பட்டுக் கொண்டே அலைய, வீட்டை விட்டு வேலைக்குப் போனான்.

அவனைப் போலவே திறாமில் பயணம் செய்யும் அத்தனை மனிதர்களுக்கும் அன்று விடிந்து விட்டது. அவனுக்கு மட்டும் அது இருட்டாகிய நாளாகத் தெரிந்தது.

விறகின் இரு புறத்திலும் நெருப்பு எரியும் போது அதன் நடுவே உள்ள ஓட்டையில் அகப்பட்ட எறும்பின் நிலையில் அவனது வாழ்க்கை இருப்பதான உணர்வு அவனுக்கு.

என் மனைவி மட்டும்தான் இப்படியா? மற்றவர்கள் வீட்டில் எப்படி இருக்கிறார்கள்? என் வாழ்க்கை அனுபவங் கள் யாருக்குப் படிப்பினையாக இருக்கும்? எனக்கு மட்டும் தானா? என்னைப் போன்று வேதனை அனுபவிக்கும் மற்ற வர்கள் என்ன செய்கிறார்கள்? என நினைத்தான்.

திருமண வாழ்க்கையின் ஆரம்பகாலங்கள் இனிமை யாக இருந்ததா? இன்று மட்டும் தான் பிரச்சனையா? பிரச் சனைக்குக் காரணம் என்ன? அறிவு வளர்ச்சி இன்மையா? யாருக்கு என்ன விளங்கவில்லை? என் மனைவியும் என்னைப்போல் படித்தவள் தானே? ஏன் கதைக்கும் போது மட்டும் சிந்திக்கத் தவறி விடுகிறாள்? பின்னர் அதனை யோசித்து நான் படும் வேதனையை விடப் பல மடங்கு வேதனையை அவளும் அனுபவித்துக் கொண்டுதானே இருக்கிறாள்?

நாம் இருவரும் வேதனைப் படுவது இருவருக்கும் புரிகிறது. நடந்த சம்பவங்களை நினைத்து மனதுக்குள் அழும் நாங்கள் அதை வெளிப்படையாக கதைக்க முடிவதில் லையே ஏன்? என்று தொடர்ந்து கொண்டே இருந்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது கேள்விகள். விடையற்ற கேள்விகள்.

அவன் சில சம்பவங்களை மீண்டும் கதைத்துத் தீர்க்க முயற்சித்த போதெல்லாம் அவள் குற்றவாளி இல்லை, அவன் தான் தேவையில்லாமல் கோவப்படுகிறான், அவனுக்கு எதுவும் விளங்குவதில்லை என்று கூற அவள் முற்படும் போது உண்மையிலேயே அவனுக்கு ஆத்திரம் வரத்தொடங்கும்.

பிரச்சனைத் தீர்வுக்காகத் தொடங்கிய சம்பாசனை பிரச்சனையிலேயே போய் முடிந்துவிடும். இதனால் அந்த முயற்சியையும் அவன் கைவிட்டு விட்டான்.

அவனுக்கு இப்போது அடிக்கடி கோவம் வருகிறது என்றும், முன்பிருந்ததை விடத் தன் மீது இப்போது அன் பில்லை என்றும் அவர்களது நண்பர்களிடமும் கூறத் தொடங்கி விட்டாள் அவள்.

மற்றவர்களுடன் கதைக்கும் போது அவதானமாக இருக்காவிட்டால் அவர்கள் உம்முடன் கதைக்கும் போது நீர் பயன் படுத்தும் வார்த்தைகள், வாதிடும் விதம் ஆகியவற்றை வைத்து உமது தரத்தைக் குறைத்து மதிப்பிடுவார்கள் எனப் பல தடவைகள் எடுத்துக் கூறினான்.

அவன் சொல்லும் போது அதனை விளங்கிக் கொள்ளும் அவள் கதைக்கத் தொடங்கும் போது மட்டும் தனது வாயி லிருந்து வெளிவரும் சொற்களைக் கவனிக்கத் தவறிவிடு கிறாள்.

தெரிந்தவர் மத்தியில் கதைக்கும் போது சாடை மூலம் அவளது கருத்துப் பிழையை அவன் எடுத்துக் காட்டினால் அதை அவள் சட்டை செய்வதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்கள் தனது மனைவியின் கதையில் தவறிருப் பதைக் கண்டுகொள்வதை உணரும் போது அவன் கூனிக் குறுகி வேதனைப்படுவான்.

அவளுக்குக் கிடைக்கும் அவமானம் தனக்கும் தான் என அவன் நினைப்பதை அவள் ஏற்க மாட்டாள். தான் நினைத் தது சரிதான் என வாதிடுவாள்.

பாவம் அவள்.

ஆனால் பாவம் மட்டுமே வாழ்க்கை இல்லை என்ப தால் பல பிரச்சனைகள் தோன்றி விடுகின்றன.

நெருங்கிய நண்பர்கள் மத்தியிலிருக்கும் போது அவளது வார்த்தைகள் தன்னைக் கேவலப்படுத்தும் என அவன் நினைத்துச் சாடை காட்டியும் விளங்காததால் நேரடி யாகவே ஏசிப் பார்த்தான்.

நண்பர்கள் மத்தியில் தனது மனைவியை ஏச வேண்டி ஏற்படுவதை நினைத்து அவன் வேதனைப்படுவதை அவள் நிச்சயம் உணருவதில்லை. அவளுக்கு இப்படி யான ஒரு இக்கட்டான நிலை இனிமேல் ஏற்படாமல் பாது காப்பதற்காகவே இப்படி அவன் நடந்து கொண்டான் என்பதையும் அவள் உணர்வதே இல்லை.

இந்த வழியும் சரிப்பட்டு வராது என்பது மட்டும் அவனுக்கு விளங்கியது.

இருந்துமென்ன வாழ்க்கைப் பயணம் தொடர்ந்து தானேயாக வேண்டும்.

வேதனை அவனுக்கு மட்டுமல்ல அவளுக்கும்தான்.

(ஈழநாடு, பாரீஸ் - 31.05.1996)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. முதுமையின் நட்பு

அவருக்கு சுமார் 89 வயதிருக்கும். அவரது சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தவாறு விக்கி விக்கி அழுது கொண்டு இருந்தார்.

இரண்டு கண்களிலும் இருந்து வடிந்து கொண்டிருந்த கண்ணீரைத் துடைப்பதற்காக இரண்டு கைகளிலும் ரிசூப் பேப்பர்கள் திணிக்கப்பட்டிருந்தன. அவர் அழுவதை அங்கு கடமை புரியும் அத்தனை பேரும் பரிதாபமாகவும் அதே சமயம் வேறு வழி தெரியாமலும் பார்த்தார்கள்.

நான்கு நாட்களுக்கு முன்னர் அவர் இந்தக் கட்டடத் தையே அல்லோகோலப் படுத்தி விட்டார். அதனை அவ் வளவு சுலபமாக மறக்க முடியுமா என்ன?

கடந்த 4 வருடங்களாக இந்த வயோதிகர்கள் இல்லத் தில் வசிக்கும் இவருக்கு ஆண் பெண் என இரண்டு பிள்ளை கள் இருந்தாலும் இடைக்கிடை வந்து அவரைப் பார்த்துப் போவது அவரது மகன் மட்டுமே. தந்தையைப் பார்க்க வரும் போது மகன் வாங்கி வரும் மலர்க்கொத்தின் அழகைப் போல் அவரது முகமும் சில நாட்களுக்கு மலர்ந்த வண்ணமே இருக்கும்.

மகன் தன் தந்தைக்காற்றும் கைமாறு ஐரோப்பாவில் இது மட்டும் தானே.

தன் மகன் வந்தது பற்றியும் அவர் கொண்டு வந்த மலர்க் கொத்துப் பற்றியும் அவரது கண்ணில் படும் மற்றவர்களிட மும் பணிபுரியும் பராமரிப்பாளர்களிடமும் வாய்நீர் வடிய வடியக் கூறுவார். வாய்நீரைத் துடைப்பதற்கு அவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுத்தில் பிரத்தியேகமான ஒரு சீலைத் துண்டும் எப்போதும் தொங்கிக் கொண்டிருக்கும்.

இந்த இல்லத்தில் அனுமதிக்கப்பட்ட ஆரம்ப காலத்தில் தனது வேலைகளை தானாகவே செய்யக் கூடிய நிலையில் இருந்த அவர் காலப் போக்கில் முதுமை காரணமாக மற்றவர்களின் உதவியில் தங்கியிருக்க வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டார்.

ஆரம்பத்தில் தனி அறையில் வசித்த அவர் உதவி நிமித்தமும் அவரது விருப்பத்தின் பேரிலும் இரண்டு பேர் தங்கும் வசதியுள்ள வேறு ஓர் அறைக்கு மாற்றம் செய்யப்பட்டார். அந்த அறையில் வசித்த தனது புதிய சகாவுடன் மிக மகிழ்ச்சியாகக் காலம் கழித்து வந்தார்.

ஆரம்பக் காலங்களில் வெளியே போய் வருவதற்கு அவர்களுக்குக் கட்டுப்பாடுகள் இருக்கவில்லை. எனவே பொழுதைக் கழிப்பதற்காக நகரப் பகுதிக்குள் சென்று வருவது அவரது பொழுதுபோக்காக இருந்தது.

கடைகளின் காட்சி அறைகளைப் பார்ப்பது, போவோர் வருவோரைப் பார்ப்பது என ஆரம்பித்த அவரது பொழுது போக்கு இரவு விடுதிகளுக்குச் சென்று வருவது வரை வளர்ந்தது.

தனது முதுமைக் காலத்தை மிவும் சந்தோசமாகத் தன் தந்தை கழிப்பதை இட்டு அவரது மகனுக்கும் மகிழ்ச்சிதான்.

புதிய அறைச் சகாவின் நட்பு தொடர்ந்து வளர்ந்த போதும் அவர்களது முதுமையும் சேர்ந்து வளர்வதை யாராலும் தடுக்க முடியாதல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது சகாவுடன் அடிக்கடி கருத்து வேற்றுமை ஏற்படத் தொடங்கியது அவருக்கு. அது அவரது மனதுக்கு மிகவும் நெருடலாக இருந்திருக்க வேண்டும். அடிக்கடி சண்டை போட்டுக் கொள்வார்கள். பின்னர் சமாதானம் ஆகிவிடுவார்கள்.

இவர்கள் இருவரும் பெரிதாகச் சத்தம் போட்டு வாக்குவாதம் செய்வது கொஞ்சம் கொஞ்சமாக அங்கு பணியாற்றும் பராமரிப்பாளர்களுக்குப் பழகி விட்டது. அதற்காக யாரும் அலட்டிக் கொள்வதில்லை.

சில சமயங்களில் சாப்பாடு பரிமாறும் நேரத்தில் தனக்குச் சாப்பாடு இப்போது வேண்டாம் என்று அடம் பிடிப்பார். இது சாப்பாட்டு நேரம் இல்லை என்பது அவரது அசைக்க முடியாத நினைப்பாக இருக்கும்.

சில சமயங்களில் தனது கட்டிலில் படுத்திருப்பார். அப்போது அங்கு வரும் பராமரிப்பாளர்களிடம் தான் படுக்க வேண்டும் தன்னைக் கட்டிலில் போட யாருக்கும் இதுவரை நேரம் கிடைக்கவில்லை என்று குற்றம் சாட்டுவார்.

இத்தகைய மாறாட்ட நிலைகளை நன்கு அறிந்து அதற்கேற்ப நடக்க வேண்டியது வயோதிகர் இல்லங்களில் பணிபுரியும் பராமரிப்பாளர்களது கடமையாகும்.

இருந்தாலும் பாரமரிப்பாளர்களும் மனிதர்கள் தானே! சில சமயங்களில் தாங்க முடியாத அளவுக்கு கஸ்ரங்கள் ஏற்பட்டு விடும். இப்படிப்பட்ட சமயங்களில் அங்கு பணி புரியும் ஏனைய பராமரிப்பாளர்களின் உதவியை நாட வேண்டியும் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு நாட்களுக்கு முன்பும் இப்படித்தான் ஆயிற்று. இரண்டு பெரியவர்களது சண்டையும் உச்சக் கட்டத்தை அடைந்து விட்டது. தங்களால் இனிச் சேர்ந்து வாழ முடியாது. தங்களைப் பிரித்துவிட வேண்டும் என்று பராமரிப்பாளர்களைப் படாத பாடு படுத்தி விட்டார்கள்.

கடந்த காலங்களில் சகாக்களாக இருந்தவர்கள் இப்போது பரம விரோதிகளாக மாறி விட்டார்கள். ஒருவரை ஒருவர் பார்பதற்குக் கூட அவர்கள் விருப்பப் படவில்லை. இருவரும் இரு வேறு திசைகளில் பார்த்துக் கொண்டிருந் தார்கள்.

வயோதிகத்தால் அவர்களுக்கு இயலாமை ஏற்பட்டிருக் காவிட்டால் ஒருவரை ஒருவர் கைகளால் தாக்கிக் கொண் டிருப்பார்கள் எனக் கொள்ளக் கூடிய அளவிற்கு அவர்களது கோபம், வெறி, ஆத்திரம் கொப்பளித்துக் கொண்டிருந்தது.

மீண்டும் இவருக்குத் தனியறை கொடுப்பதற்கு விரும் பினாலும், இரண்டு பேர் தங்கும் அறையை விட தனி அறைக்கு அதிக பணம் தேவைப்படும். இந்தப் பணத்தை அவரது ஓய்வூதியத்திலிருந்தும் வயோதிக காலக் கொடுப் பனவிலிருந்தும் தான் பெற்றாக வேண்டும் என்பதால் அந்தத் துறைசார்ந்தவர்களது முன் அனுமதியும் பெறவேண்டி இருந்தது.

அவரது மகனுக்கும் சம்பவம் பற்றி அறிவித்து அவரது அனுமதியும் பெறப்பட்டது.

இருவரையும் தனித்தனியாக வேறிடத்திற்கு மாற்றி யாகி விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



005339

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நாள் புதிய இடம் என்பதாலோ என்னவோ இரண்டு பேருக்கும் அவ்வளவாக நல்ல மன நிலை இருக்க வில்லை.

இரவு அவர்களுக்கு நித்திரை கொள்ள முடியாத நிலை. இரவுப் பராமரிப்பாளர்களின் குறிப்புகளின் படி அவர்கள் இருவரும் வெகு நேரம் வரை விழித்திருந்ததை அறிய முடிந்தது.

இரண்டாம் மூன்றாம் நாட்களும் சற்று சோர்வாகவே இருந்தார்கள்.

நான்காம் நாள் அதாவது இன்று யாரும் எதிர்பாராத சம்பவம் நடந்து விட்டது.

இவரது பழைய சகாவான முதியவர் தனிமையில் இருந்து நான்கு நாட்களில் இவ்வுலகை விட்டு இயற்கை எய்தி விட்டார்.

வயோதிகர் இல்லங்களில் முதியவர்கள் இயற்கை எய்துவது ஒன்றும் புதிய விடயமில்லை. தங்கள் வாழ்க்கை யின் இறுதிக் கட்டமாகவே வயோதிக இல்லங்களைக் கருதுவதும் வழமைதான்.

ஒருவர் இயற்கை எய்தி விட்டால் அங்குள்ள மற்றய வயோதிகர்களுக்கு அது சாதாரணமாகத் தெரியப் படுத்தப் படுவதில்லை. அவர்களாகவே தெரிந்து கொண்டால்தான் உண்டு.

இந்தச் சம்பவமும் அப்படித்தான் கையாளப்பட்டது. ஆனால் இவருக்கு யார் மூலமோ செய்தி கிடைத்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு நாட்களுக்கு முன்னர் பரம விரோதியாகத் தெரிந்தவர் இன்று உற்ற நண்பனாக அவருக்குத் தெரிந் திருக்க வேண்டும்.

தனது நண்பனை இழந்து விட்டதாக அல்லது இனிமேல் பார்க்கவே முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டதாக நினைத்தாரோ என்னவோ தெரியவில்லை.

அவரால் துக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. துக்கம் மீறி அழுகையாக வெளிப்பட்டுக் கொண்டிருக் கின்றது.

விம்மி விம்மி குழந்தை போல் அழுது கொண்டிருக்கும் அவரைப் பார்த்துப் பரிதாபப் படுவதை விட வேறு எதையும் செய்ய முடியாத நிலையிலேயே பராமரிப்பாளர்கள் இருந்தார்கள்.

(ஈழநாடு, பாரீஸ் - 2008)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. உயரப் பறந்த எங்கள் வீடு

அநியாயக்காரனின் அட்டூழியத்தால் அதிர்ந்த குடும்பத்தின் அவல அனுபவம்; உண்மைச் சம்பவம்.

அது 1986 யூலை 26ஆம் திகதி. அன்றும் வழமை போல அவர்களின் வாகனப் போக்குவரத்து அதிகரித்துக் காணப் பட்டது. வீட்டை விட்டு வெளியே சென்றவர்கள் அரக்கப் பறக்க திரும்பி வந்து கொண்டிருந்தார்கள்.

அந்தக் குளக்கட்டின் மீது சனக்கூட்டம் என்ன நடக்கிறது என்பதை அறிவதற்காகக் கூடிக்கூடி நின்றது.

விடுப்புக் கதைப்பதற்காக மற்றவர்களை நிறுத்திக் கதை கேட்கவில்லை அவர்கள்.

தங்கள் கிராமம் பிரதான கடைத்தெருச் சந்தியிலிருந்து சில கிலோ மீற்றர்கள் உள்ளே இருந்தாலும் அவர்கள் வந்தால் அவர்கள் இங்கு வந்து சேரமுன்னர் காடுகளுக்குள் ஓடி ஒளிந்து பாதுகாப்புத் தேடிக் கொள்ள வேண்டுமே என்ற கவலை தோய்ந்த முகத்துடன் தான் அவர்கள் குளக்கட்டில் கூடிக் கூடிக் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

இன்று நாங்கள் புலம் பெயர் நாட்டு அகதி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தாலும் எமது உள்ளத்தில் பசுமையான நினைவுகளாக நிலைத்து நிற்பது எமது அன்றைய கிராம வாழ்க்கைதான்.

பச்சைப் பசேல் என்று கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தெரியும் வயல் வெளிகள். அதன் ஆரம்பமாகவும் அரனாக வும் இருக்கும் பெரிய குளம். நீரைத் தேக்கி வைக்க ஏதுவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரமாகக் கட்டப்பட்ட அகலமான குளக்கட்டு. அந்தக் குளக்கட்டையே வீதியாகப் பயன்படுத்தும் எமது கிராமத்தின் போக்குவரத்துச் சாதனங்களான உழவியந்திரங்கள், மாட்டு வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், மிதி வண்டிகள். அவை அங்குமிங்கும் விரையும் அழகும் ரீங்காரமும் அமைதியான அந்தக் கிராமத்தில் நவீனத்தின் உயிர்த் துடிப்பை காட்டி நிற்கும்.

குளக்கட்டின் அருகே வரிசையாக உள்ள துண்டுக் காணிகள். அவற்றின் உள்ளே இருக்கும் தென்னை, வாழை, மா, தோடை, தேசி எனப் பல பயன் தரு மரங்களின் செழிப்பு. அழகுக்கு அழகூட்டும் பலவர்ண மலர்க் கூட்டங்களைக் கொண்ட சிறிய பூந்தோட்டங்கள். நேர்த்தியாக அடைக்கப்பட்ட வேலிகளின் மேலால் எட்டிப்பார்த்துக் கண்சிமிட்டும் செவ்வரத்தம்பூ. இவற்றின் நடுவே கம்பீரமாகக் காட்சி அளிக்கும் வீடுகள். குளக்கட்டின் மீது நின்று பார்த்தால் அனைத்து வீடுகளின் கூரைகளும் அட்டகாசமாகச் சிரிக்கும்.

கிடுகால் மேய்ந்த வீடுகள் மற்றும் சிறிய குடிசைகள் தரும் அழகு ஒரு வகை. ஓடுகள் போட்ட வீடுகளின் சிவப்பு வர்ணம் தரும் அழகு இன்னொரு வகை.

எல்லா வீடுகளின் முகட்டையும் கூரையையும் பிரித்துக் கொண்டு பீறிட்டு வரும் இலங்கை வானொலியின் இனிய கீதங்களான சினிமாப் பாடல்கள். அதனை மிஞ்சும் அளவுக்குக் கொஞ்சும் குரலில் பாடும் பறவைகளின் சுதந்திர சுந்தரகானம்.

தட்டுப்பாடும் கட்டுப்பாடும் இன்றி இருந்ததாலோ என்னவோ இந்தச் சிங்கார ஊரின் சிறப்பை அன்று எனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று போல் ரசிக்கத் தெரிந்திருக்கவில்லை.

வெய்யில் வரும் போதுதானே நிழலின் அருமை தெரியும். இந்தப் புலம் பெயர் நாட்டில் இல்லை என்று நினைக்கும் போது தான் எனது கிராமத்தின் அழகு மேலும் மெருகு கொள்கின்றது.

உயர்ந்த அந்தோனியார் ஆலயம்; அதை ஒட்டிப் போகும் பிரதான வீதி. முன்பக்கம் அந்த நெடுங்குளம். மறுபக்க வயல் வெளியின் கரை முடிவில் ஒரு முனியப்பர் கோயில். வலது பக்க வயல் வெளிகளின் இடையிடையே கம்பீரமாகக் காட்சி தரும் தேக்கு மரங்கள். இடதுபக்கம் வயலையொட்டிய பெரிய வேப்ப மரம். இந்தக் கலை நயம் கொண்ட இயற்கைச் சூழலில் அமைந்திருந்தது எங்கள் வீடு. சற்றுப் பெரிதாகவும் சகல வசதிகள் கொண்டதாகவும் அது கட்டப்பட்டிருந்தது.

இந்த வீட்டைக் கட்டுவதற்காக ஏற்கனவே அங்கு பல ஆண்டு காலமாக இருந்த சிறிய வீடு சிறிது சிறிதாக அகற்றப் பட்டது.

இந்த நாடுகளில் புதிய கட்டடம் கட்ட ஆரம்பிக்கு முன்னர் பழைய கட்டடம் இருந்த இடமே தெரியாதவாறு இடித்துத் தள்ளி விட்டுத்தான் ஆரம்பிப்பார்கள். அப்போது தான் அங்கு இடம் கிடைக்கும்.

எமது ஊரில்தான் இடவசதிக்குப் பஞ்சம் இருக்க வில்லையே.

என் பிள்ளைகள் எல்லோரும் எதிர்காலத்தில் சேர்ந்து வாழக் கூடியதாக கட்டப்பட்டது அந்த வீடு.

ஒவ்வொரு துண்டு துண்டாக கணக்கு எடுத்துக் கட்டப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. கலியாணத்தைக் கட்டிப்பார் வீட்டைக் கட்டிப்பார் என்ற பழைய வார்த்தை எனக்கு அடிக்கடி பயன் பட்டது. பரம்பரைக்காக கட்டும் வீடாக இது இருக்க வேண்டும் என்பது என் மனதில் எப்போதும் தெளிவாகத் தோன்றிக் கொண்டே இருந்தது. ஒவ்வொரு விடயத்திலும் தெரிவு செய்வதை நான் விடவில்லை.

கல் அரிவதற்கு மண் எடுப்பதில் இருந்து கதவு செய் வதற்கு மரம் வெட்டுவது வரை எனது நேரடிப் பார்வைக்கு நான் இடம் அளித்திருந்தேன்.

பாலியாற்றில் மண் எடுத்துவர ரக்டரில் போவோரிடம் எனது தேவையையும் தெரிவையும் கண்டிப்பாகச் சொல்லியனுப்பினேன். எனக்காக மரம் வெட்டக் காட்டிற்குச் சென்றவர்களிடம் என் தேவையை, விருப் பத்தை அப்படியே கடைப்பிடிக்க வேண்டும் எனக் கட்டளை போட்டது போலக் கூறி அனுப்பினேன்.

வீடு கட்டும் மேசன்மார், தச்சுவேலையாட்கள், உதவித் தொழிலாளர்கள் என அனைவரும் என்னால் விசேடமாகத் தேடித் தெரிவு செய்யப்பட்டவர்களாகவே இருந்தார்கள்.

என்னைப் பொறுத்த வரையில் அல்லது எனது கற்பனை யில் நான் ஓர் அரண்மனையைத்தான் கட்டிக் கொண்டிருந் தேன். மற்றவர்களுக்கு வேண்டுமானால் அது ஒரு வீடாகத் தெரிந்திருக்கலாம்.

எங்கட பெடியள் தமது பொருட்களை வைத்து எடுப்பதற்காகவும் தங்கிப்போதற்காகவும் எமது வீட்டைப் பயன் படுத்துவது ஒரு சாதாரண நிகழ்வாகவும் இருந்தது.

எமது வீட்டில் அவர்களுக்கான சாப்பாட்டுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவுக்கு தேவையான அளவு உணவுப் பொருட்கள் மூட்டை மூட்டையாக அவர் களின் வருகைக்காக காத்திருக்கும். இது ஊரறிந்த இரகசியம்.

அன்று அட்டூழியக்காரன் வந்து கொண்டிருக்கின்றான் என்பது வழமை போல எமக்கு முன்னர் பெடியளுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

ஊரவர்கள் தமது உயிரைப் பாதுகாக்கும் நோக்குடன் அவர்கள் வரும் செய்தியை அவர்கள் வந்து சேர முன்னரே ஊர் மக்களுக்குத் தெரியப் படுத்தி விட்டார்கள். அவர்கள் நெருங்கி வருவது அறியக் கூடியதாக இருந்ததால் அனைவரும் சிறு சிறு குழுக்களாக கால் போன போக்கில் ஓடிக் கொண்டிருந்தார்கள். நானும் எனது மனைவி பிள்ளை களுடன் பாதுகாப்புத் தேடி அருகிலிருந்த ஊரை நோக்கிப் போய் விட்டேன்.

அந்த ஊரில் இருந்த ஒரு குளக்கட்டில் நின்று எமது ஊரை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

பூமி அதிர்வது போன்ற உணர்வு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து மிகப் பெரிய பயங்கர வெடிச் சத்தத்துடன் கூடிய புகை மண்டலம் மேலே கிளம்பியது.

புகை மண்டலத்தூடே சிவப்பு நிறத்தில் ஏதோ ஒன்று மேலே பறந்து மீண்டும் கீழே போயிற்று. எங்களுடன் அங்கு பலரும் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அது என்னவாக இருக்கலாம் என்று யாரும் சொல்லத் துணியவில்லை.

அந்தப் பயங்கர வெடிச் சத்தத்தைத் தொடர்ந்து மயான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி அங்கிருந்த மக்கள் மத்தியில் நிலவியது. யாரும் எதுவும் சொல்லவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கக் கூட துணிவற்றவர்களாக ஆகாயத்தைப் பார்த்தவர்கள் அதனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

என்னருகில் நின்றிருந்த எனது மகள் என்னுடலில் தன்னைச் சாய்த்துக் கொண்டாள். என்மனைவி குளக்கட்டில் அப்படியே குந்தி இருந்து விட்டாள்.

எவ்வளவு நேரம் நாங்கள் அப்படி அங்கே நின்றோம் என்பது எனக்கு இப்பேது நினைவில்லை.

சில மணித்தியாலங்களுக்குப் பின்னர் மீண்டும் எமது ஊரை நோக்கிப் போகத் தீர்மானித்து விட்டோம். மெதுவாக அங்கிருந்த ஏனையவர்களும் தத்தமது வீடு நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

எனது உள்ளத்தில் மேலே சென்ற சிவப்பு நிறத் துகள்கள் எனது வீட்டின் கூரையாகத்தான் இருக்க வேண்டும் என்று ஒரு எண்ணம் தோன்றி மறைந்தது.

மனத்தில் விரைவு துரத்த எமது ஊரை அண்மித்துக் கொண்டிருந்தோம். தூரத்தில் இருந்து பார்த்தால் தெரியுமள வுக்கு இருந்தது எமது வீட்டின் கூரை. அன்று என் கண் களுக்குத் தெரியவில்லை.

மிகவும் அண்மித்தும் கூட எனது வீட்டின் கூரையைக் காணவில்லை. கூரையை மட்டுமா காணவில்லை என் வீட்டையே காணவில்லையே.

வீடு இருந்த இடமே தெரியவில்லை. வீட்டுச் சுவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட இல்லை. அனைத்து அறைச் சுவர்களும் கதவு யன்னல்களும் கூட சுக்கு நூறாகி சிறு சிறு கற்களின் கூட்டமாகச் சிதறிக் கிடந்த அந்தக் காட்சி என் கண்களை மட்டுமல்ல உள்ளத்தையும் உறைய வைத்து விட்டது.

எம்முடன் சேர்ந்து அங்கு ஒரு கூட்டமே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. எனது மனைவியும் மகளும் அருகே இருந்த கல்லின் மேல் கற்களைப் போல அமர்ந்திருந்தார்கள்.

வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்திலிருந்து சிலர் எமது வீட்டைச் சுற்றிச் சிதறிக் கிடந்த பொருட்களில் எதையோ தேடித் தேடி எடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எதனைப் பொறுக்கிக் கொண்டிருக்கின்றார்கள் எனக் கவனித்துப் பார்த்தேன்.

நம்மவர்களின் அவசர உணவுத் தேவைக்காக என்னால் சேமித்து வைக்கப்பட்டிருந்த மீன் ரின்கள் மட்டும் உடையாமல் வீட்டைச் சுற்றிச் சிதறிக்கிடந்தன. அவற்றைத் தான் அவர்கள் அங்கு பொறுக்கிக் கொண்டிருந்தார்கள்.

நானும் மௌனியாக அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்தேன். வேறு என்னதான் செய்வது?

(ஈழநாடு, பாரீஸ் – 06.06.2008)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. பிணக் குவியலிலிருந்து உயிர் பிழைத்தவன் நான்

எனது ஊரவனின் பயங்கர உண்மைச் சம்பவம்.

அடம்பனூரரான்.

காத்தான்குளம், ஆண்டான்குளம், வட்டக்கண்டல் போன்ற இடங்களில் சகட்டுமேனிக்குச் சுட்டுத்தள்ளிய களைப்பில் எங்கள் வீட்டிற்குள் நுழைந்தார்கள் அந்த ராட்சதர்கள். எனக்கு அன்று மறக்க முடியாத நாள். அன்று தான் எனது பிறந்தநாள்.

ஆம் 1985ஆம் ஆண்டு தை மாதம் 30ஆம் திகதி எனது 6 மாதக் கைக்குழந்தையான மகனைக் கையில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்த எனக்கு இந்த ராட்சதர்களின் வருகையால் உடல் நடுங்கியது. உள்ளம் பதைபதைத்தது.

எனது மனைவியும் மற்றவர்களும் மரண பயத்தில் உறைந்தே போனார்கள்.

அன்று விடிந்ததில் இருந்து எனது ஊரைச் சுற்றித் துப்பாக்கி வேட்டுகள் கேட்ட வண்ணமே இருந்தன. வெளியே போனவர்கள் யாருமே திரும்பி வரவில்லை. திரும்பி வந்தால் தானே என்ன நடக்கிறது என்றாவது அறிய முடியும். வீட்டிலிருந்தவர்கள் வீட்டுக் கேற் வரைக்கும் கூடப் போய் எட்டிப் பார்க்கவில்லை.

பயம். மரண பயம் என்பார்களே அதுதான். அதை எழுதினால் தெரிந்து கொள்ள முடியாது. உணர்ந்தால் மட்டுமே அதன் அர்த்தம் புரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன நடக்கின்றது? யாருக்கு என்ன ஆச்சு? யார் சுடுறது? சண்டை தொடங்கிட்டுதா? என விடை தெரியாத பல கேள்விகள் எங்கள் இதயங்களை வாட்டிப் பிழிந்து கொண்டிருந்தன.

எங்கள் ஊர் தற்போது பிரபலமாகப் பேசப்படும் சண்டைப் பிரதேசமான அடம்பன் என்னும் கிராமத்தை அண்மித்து உள்ளது.

மன்னார் பிரதேசத்தில் தற்போது பிரபலமாக அடிபடும் மடுமாதா தேவாலயம் கூட எனது கிராமத்தில் இருந்து வெகு தூரத்தில் இல்லை.

நாங்கள் சாதாரண விவசாயிகள். பூமியை நம்பிப் பிழைப்பவர்கள். விரல் விட்டு எண்ணிச் சொல்லக்கூடிய அளவில் உள்ள அரச அலுவலர்களைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் வயல் விதைக்கும் விவசாயிகள்.

எம்மவர்களின் ஆதார உணவான நெல்லை விவசாயம் செய்பவர்கள். காலபோகம், சிறுபோகம், என வருடத்தில் இரண்டு தடவைகள் நெல்லை விதைத்து, நாற்று நட்டுக் களை பிடுங்கி, உரமிட்டு, அறுவடை செய்து சூடடித்துத் தூற்றி சாக்குகளில் கட்டி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங் களுக்கோ தனி வியாபாரிகளுக்கோ நெல்லை விற்று விடுவோம்.

அதில் வரும் பணத்தை வைத்து அடகு வைத்த நகை களை மீண்டும் மீட்டு குறுகிய காலத்திற்கு மட்டும் புதிய பணக்காரர்களாகக் காட்சி தரும் சாதாரண விவசாயிகள் நாங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது அரசியல் என்றால் கிலோ என்ன விலை எனக் கேட்கும் அளவுக்கு மட்டுமே எங்கள் வாழ்க்கை வட்டம் வலம் வந்து கொண்டிருந்தது.

எங்கள் வீட்டிற்குள் வந்தவர்கள் யார் என்பதை மட்டும் தெரிந்து கொண்டோம். உடல் இருக்கிறது ஆனால் உயிர் உடலில் இருந்ததா என்று தெரியாத அளவுக்கு விறைத்து நின்றோம்.

மயக்காமல் விறைக்க வைத்து அறுவைச் சிகிச்சை செய்யும் வித்தை புலம் பெயர்ந்த நாட்டில் உள்ளவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஆனால் அந்த நிலையில் அன்று நான் இருந்தேன் என்று அன்று யாரிடம் சொன்னாலும் நம்பியிருக்க மாட்டார்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

கேற்றைத் திறந்து உள்ளே துப்பாக்கிகளுடன் வந்தவர் கள் என்னை மட்டும் கையைக் காட்டி அழைத்தார்கள்.

தூக்கி வைத்திருந்த எனது மூத்த மகனை எனது மனைவியிடம் எப்படிக் கொடுத்தேன் எப்போது கொடுத் தேன் என்பதுகூட எனக்கு நினைவில்லை.

மகன் அழுதானா இல்லையா என்பது கூட எனக்குத் தெரிந்திருக்கவில்லை. அவன் நிச்சயம் அழுதிருப்பான் என்றுதான் நான் நினைக்கிறேன். ஆனால் அவனது அழுகைச் சத்தம் எனக்குக் கேட்கவில்லை என்பது மட்டுமே உண்மை.

விசையில் இயங்கும் இயந்திரம் போல எந்தவிதமான சலனமும் இன்றி அவர்களை நோக்கி நடைப்பிணமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்த எனக்கு அவர்கள் பிணக் குவியல்களைத்தான் காட்டப் போகின்றார்கள் என்பது அப்போது தெரிந்திருக்கவில்லை.

நான் அவர்களை நோக்கி நடக்கவில்லை. எனது கால்கள் அவர்களது கட்டளைக்குக் கீழ்படிந்து என்னைச் சுமந்து சென்று கொண்டிருந்தன.

இதே நிலைமை அதாவது எனது மூளைக்கும் கால்களுக்கும் தொடர்பற்ற நிலைமை இன்றும் எனக்கு இந்தப் புலம் பெயர் நாட்டிலும் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றது.

நான் இந்த நாட்டிற்கு வந்து சுமார் 10 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. வந்த காலத்தில் இருந்து ஒரே இடத்தில் தான் வசித்துக் கொண்டிருக்கின்றேன். அப்படியிருந்தும் சில சமயங்களில் எனது வீடு எங்கு இருக்கிறது என்பது எனக்கு நினைவுக்கு வருவதில்லை.

உங்களுக்கு இதை நம்பக் கஸ்ரமாக இருக்கும் என்பதும் எனக்குத் தெரியும். நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும். உண்மை இல்லாதவற்றை உங்களுக்கு நான் சொல்வதால் யாருக்கு என்ன பயன்?

எனது வேலைத் தளத்தில் இருந்து தொடரூந்து மூலம் குறிப்பிட்ட நிலையத்தை வந்தடைந்த பின்னர் எல்லோருடனும் சேர்ந்து வெளியே வந்துவிடுவேன். ஆனால் எந்த வீதியால் நடந்து எந்தச் சந்தியால் திரும்பி என் வீட்டிற்குப் போக வேண்டும் என்பது எனக்குத் தெரியாமல் போய்விடும்.

வீதியின் பெயர்ப் பலகையை முதலில் வாசித்துத் தெரிந்து கொள்வேன். பின்னர் ஒவ்வொன்றாக மெல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மெல்ல நினைவுக்கு வரத் தொடங்கியதும், அடுத்த சந்தி வரை நடந்து, அடுத்த வீதியின் பெயர்ப் பலகையைத் தேடுவேன். இது எனது நாளாந்த நிலைமையாகி விடுவதும் உண்டு.

ஒரு நாள் எனது உறவினர் ஒருவரை அவரது வீட்டில் இருந்து எனது வீட்டிற்கு அழைத்து வரவேண்டி ஏற்பட்ட போது, தொடரூந்து நிலையத்தின் வெளிப் பக்கத்தில் இருந்து எனது வீட்டிற்குப் போக முடியாமல் திண்டாடி விட்டேன்.

எனது நிலையைப் புரிந்து கொள்ள முடியாத அந்த உறவினர் அன்று என்னைத் திட்டித் தீர்த்து விட்டார்.

மனைவி பிள்ளைகளிடம் நடந்ததைக் கூறி வாய் விட்டு அழுதேன். அவர்களது ஆறுதல் வார்த்தையும் அன்பான அரவணைப்பும் தான் இன்றும் என்னை உயிருடன் வாழ வைத்துக் கொண்டிருக்கின்றது என்பதை நான் எந்த இடத்திலும் அடித்துச் சொல்லத் தயங்க மாட்டேன்.

இந்தப் புலம் பெயர் நாட்டில் நான் பல வைத்திய உதவிகளைப் பெற்றுக் கொண்டேன்.

பல மனோதத்துவயியலாளர்களை நாடி அவர்களது உதவியையும் பெற்றுக் கெண்டேன். இன்றும் அவர்களது உதவி எனக்குத் தேவைப் பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது.

அவர்களின் அறிவுரையோ அதிர்ச்சி தருவதாகவே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பழைய நினைவுகளை நான் மறக்க வேண்டும், அவை பற்றி நான் நினைத்துப் பார்க்கக் கூடாது என அவர்கள் எனக்கு மீண்டும் மீண்டும் அறிவுரை சொல்லிக் கொண்டே இருக்கின்றார்கள்.

என்னால் எதை மறக்க முடியும்? எப்படி மறக்க முடியும்?

நான் பிறந்த என் நாட்டை மறக்க முடியுமா? நான் வளர்ந்த எங்கள் வீட்டை மறக்க முடியுமா?

எனது பாடசாலையை மறக்க முடியுமா? எனக்குக் கற்பித்த ஆசிரியர்களை மறக்க முடியுமா?

என்னுடன் படித்த சக மாணவர்களை அல்லது என்னுடன் திரிந்த என் இனிய நண்பர்களை மறக்க முடியுமா?

என்னால் எதனை மறக்க முடியும்? எப்படி நினைக்கா மல் இருக்க முடியும்?

இவற்றில் ஏதாவது ஒன்று எப்படியாவது என் நினை வுக்கு மீண்டும் மீண்டும் வந்து சேர்ந்து விடும்.

இந்த அனுபவம் நிச்சயம் உங்களுக்கும் இருக்கும்.

நினைவலைகளின் வேகம் உங்கள் எல்லாருக்கும் தெரிந்த ஒன்றுதான். கணக்கிட முடியாத வேகத்தில் நாம் பல்லாயிரம் மைல்களைக் கடந்து விடுவோம்.

அது மட்டுமல்ல பல ஆண்டு காலத்தை மிக மிகச் சொற்ப நேரத்தில் தாண்டி பின்னோக்கிச் சென்று விடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது இயல்பானது. சாதாரணமானது.

ஆனால் எனக்கு இதுதான் மிகப் பெரிய சித்திரவதைக் கூடமாக மாறிவிடும்.

சொர்க்கம் நரகம் என்றெல்லாம் சமயங்களில் சொல்லப் படுவதுண்டு.

நரகத்தில் தண்டனைகள் சித்திரவதைகளாக அதுவும் எம்மால் கற்பனை செய்ய முடியாத விதத்தில் நடப்பதாகவும் சொல்லப்படுவதுண்டு.

அந்த நரகத்தில் இருப்பதாகக் கூறப்படும் சித்திர வதைகளை நான் இன்றும் இந்தப் புலம் பெயர் நாட்டில் அனுபவித்துக் கொண்டிருக்கின்றேன்.

ஏன் அப்படி? எதற்காக இப்படி?

எல்லாம் அந்த நாய்களின் அட்டூழியச் செயல்களினால் தான்.

அன்று அதிகாலை வயல்களில் வேலை செய்து கொண்டு இருந்த விவசாயிகளை மட்டுமல்ல வீதியால் போனவர் வந்தவர் என அகப்பட்ட அத்தனை பேரையும் அவர்கள் வேட்டை ஆடிக் களைத்துப் போய்தான் எனது வீட்டிற்கு வந்திருந்தார்கள்.

வட்டக்கண்டல் தமிழ்க் கலவன் பாடசாலையில் வைத்து மட்டும் 18 பேர் கதறக் கதறக் கொல்லப்பட்டார்கள்.

மனிதர்களாகவா இருந்தார்கள் அவர்கள்? இரக்கமற்ற பாவிகள் அவர்கள். மனிதர்களாக இருந்திருந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பார்க்காமல் சுட்டுத் தள்ளியிருப்பார்களா? இரக்கமின்றிக் கொன்றிருப்பார்களா?

அவர்கள் கேவலங் கெட்ட மிருகங்களாகத்தான் அன்று இருந்தார்கள். அதனால்தான் அந்தச் செயலைச் செய்திருந் தார்கள்.

அவர்களது அட்டகாசம் அடங்கியதும், இல்லை இல்லை அவர்கள் களைத்துப் போய் விட்டபடியால் என்று தான் நான் நினைக்கின்றேன், வந்தார்கள்.

அன்று பின்னேரம் சுமார் 2 மணி இருக்கும். செத்த பிரேதங்களை அள்ளிப் போட்டுக் கொண்டு போவதற் கென்றே வாகனங்கள் கொண்டு வந்திருந்தார்கள்.

பிணங்களை அள்ளி வாகனத்தில் போட அவர்களிடம் அன்று தெம்பில்லை என்று நினைக்கின்றேன்.

பிணங்களை அள்ளிப் போடத்தான் என்னைக் கண்ட இடத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லாமல் கூட்டிக்கொண்டு போனார்கள் என்பது பிறகுதான் எனக்குத் தெரிய வந்தது.

என்னை சற்றுத் தூரம் முன்னால் போகவிட்டு அவர்கள் நீட்டிய துப்பாக்கியுடன் எனக்குப் பின்னால் வந்தார்கள். அங்கு நிறுத்தப்பட்டிருந்த அவர்களது வாகனம் ஒன்றிற்குள் என்னை ஏறுமாறு கட்டளையிட்டார்கள். அவர்களது கட்டளைக்கு அடிபணிந்தேன் நான்.

சற்றுத் தூரம் சென்றதும் வாகனம் நிறுத்தப்பட்டது. சைகை காட்டி என்னை இறக்கினார்கள். ஒரு உடல் இரத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளத்தில் கிடந்தது. அதனைத் தூக்கி வாகனத்தில் ஏற்றுமாறு கட்டளையிட்டார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. எப்படித் தூக்குவது? எங்கே பிடிப்பது? எப்படி உயர்த்துவது? நிலை தடுமாறி நின்ற என்னை ஒருவன் தலையில் அடித்து சுயநினைவுக்குக் கொண்டு வந்தான்.

எனக்கு முன்னால் ஒருவன் கீழே குனிந்து அந்த உடலின் காலைப் பிடித்தான். அப்போது எனக்குப் புரிந்து விட்டது எனது பங்கு எதுவென்று.

அவனுடன் சேர்ந்து நானும் குனிந்து அந்த உடலைத் தொட்டுத் தூக்கினேன். எனது கைகள் வேர்த்துக் குளிர்ந்திருந் தன ஆனால் நான் பிடித்த உடலில் சூடு இருந்தது.

எத்தனையோ மரண வீடுகளுக்குப் போயிருந்தாலும் இது வித்தியாசமாகவும் பயங்கரமாகவும் இருந்தது. ஆரம்பத் தில் அதிகம் நினைக்கத் தோன்றினாலும் எதுவும் நினைவுக்கு வரவில்லை. ஒன்று... இரண்டு... மூன்று... என உடல் களாகத் தெரிந்தவை நேரம் செல்லச் செல்ல அல்லது அவற்றின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க அவை பிரேதங்களாகத் தெரியத் தொடங்கி விட்டன.

நெல்லு மூட்டையை லாவகமாகத் தூக்கி, பாரவண்டிக் குள் போட்ட எனது அனுபவம் அன்று அங்கு பயன் பட்டுக் கொண்டிருந்தது.

அங்கிருந்த வாகனம் ஒன்றில் வழமைக்கு மாறான உடை தரித்தவர்களும் இருந்தார்கள். அவர்கள்தான் இவர் களைச் சுட்டுத் தள்ளுவதற்காக விசேடமாக வரவழைக்கப் பட்டவர்கள் என்பதும் எனக்குப் பின்னர்தான் விளங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு இடத்திற்கும் செத்த பிணங்களின் குவியலுடன் சாகாத பிணமான என்னையும் சேர்த்து வாகனத்தைச் செலுத்திச் சென்றார்கள்.

ஒவ்வொரு இடத்திலும் வாகனம் நின்றபோதெல்லாம் நான் மட்டும் இறங்கி அங்கிருந்த பிணத்தைத் தூக்கிப் போட வேண்டும்.

வேர்த்துச் சோர்ந்து களைத்த நிலையில் இருந்த என்னை ஒருவன் பார்த்தான். அருகில் வந்தான். பசிக்குதா எனக் கேட்டான். நான் மேலும் கீழும் தலையை ஆட்டினேன்.

அதைச் சாப்பிடு எனக் கையைக் காட்டினான். அவனது கையின் சுட்டுவிரல் காட்டிய திசையில் திரும்பிப் பார்த்தேன்.

அங்கே குவிந்து கிடந்த பிரேதங்களில் ஒன்றின் தலை பிளந்து மூளை வெளியே வழிந்து தொங்கிக் கொண்டிருந்தது. அதனை எடுத்துத் தின்னுமாறு கூறினான் அந்த அரக்கன்.

ஏற்கனவே அழுது அழுது பதறிக் கொண்டிருந்த எனக்கு இப்போது பெரிய கதறலுடன் கூடிய அழுகை பீறிட்டது. பயம் எல்லாவற்றையும் அடக்கி விடுமா என்ன?

என்னால் தனியே எத்தனை பிணத்தைத்தான் தூக்கிப் போட முடியும்? “பிணக்கனம் கனக்குது” என்பார்களே, அந்தக் கனத்தை அன்று நான் நன்றாக உணர்ந்துகொண்டேன்.

நான் களைத்து விட்டேன். என்னால் இனி முடியாத நிலைக்கு வந்து விட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நிலையை அந்தப் பாவிகளில் சிலர் கண்டிருக்க வேண்டும். எங்கேயோ போய் எப்படியோ இன்னும் இரண்டு பேரைக் கூட்டி வந்தார்கள். இப்போது நாங்கள் மொத்தம் மூன்று பேர்.

புதிதாக வந்த அந்த இருவரும் எனக்குத் தெரிந்தவர்கள் தான். அதில் ஒருவனிடம் நான் என்னை அறியாமலேயே சொன்னேன் "எத்தனை பிரேதம் இருக்கு எண்டு எண்ணடா" என்று.

அவனும் எண்ண முயற்சித்தான் ஆனால் முடியாமல் எண்ணுவதை இடையில் விட்டுவிட்டான்.

எனது கணிப்பின்படி கிட்டத்தட்ட 70 பிரேதங்களைத் தாண்டியிருக்கும். ஆனால் பின்னர் வெளிவந்த தகவல்களின் படி குறைந்த அளவே குறிப்பிடப் பட்டிருந்தது.

ஓரிடத்தில் வாகனத்தை நிறுத்தி விட்டு என்னையும் மற்றவர்களையும் இறங்கி நிலத்தில் குப்பறப் படுக்குமாறு கூறினார்கள். எங்களையும் சுடப்போறாங்கள் என்று நான் நினைத்தேன்.

எனக்குத் தெரிந்த மனிதர்கள் தொடக்கம் தெரியாத கடவுகள் வரை எல்லாம் ஒவ்வொன்றாக மனதில் தோன்றி மறைந்தது.

எல்லாக் கடவுள்களிடமும் என்னால் முடிந்தளவு மன்றாடிக் கொண்டிருந்தேன்.

குப்பறப் படுத்திருந்த எனது இடுப்பில் ஒரு சப்பாத்துக் கால் தட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையைத் தூக்கிப் பார்த்தேன். சைகையால் என்னை வாகனத்தின் சில்லின் அருகில் போயிருக்குமாறு கூறினான் அவன். மற்றவர்கள் சற்றுத் தூரத்தில் நின்று கொண்டிருந்தார் கள். அவர்களுடன் அங்கு இன்னும் புதிதாக இரண்டு பேர் காணப்பட்டார்கள். இப்போது, அவர்களை விட நாங்கள் மொத்தம் 5 பேர்.

தலையை முழங்காலில் முட்டுக் கொடுத்தவாறு உட்கார்ந்திருந்தேன். சற்று நேர அமைதிக்குப் பின்னர் அவன் என்னை அணுகி ஒரு சிகரட்டை நீட்டினான்.

அவனது கை எனக்கு அப்போது பரலோகத்தில் இருக்கும் இறைவனின் கைபோலத் தெரிந்தது.

சிகரட்டை வாங்கி வாயில் வைத்து மூச்சை அடக்கி உள்ளே புகையை இழுத்து சில நிமிடங்கள் கண்களை மூடிக் கொண்டிருந்தேன். பின்னர் புகையை மெது மெதுவாக வெளியே விட்டேன்.

துன்பத்திலும் இன்பம் என்பார்களே அதை அந்தக் கணப்பொழுதில் நான் அனுபவித்தேன். இப்போது வாகனம் நிறுத்தப்பட்டிருந்த இடத்தில் வித்தியாசமான சீருடை தரித்தவர்களைக் காணவில்லை.

ஒருவன் சற்றுத் தள்ளி நின்றிருந்த அந்த நாலுபேரையும் ஓடுமாறு கூறினான். ஓடச் செல்லிவிட்டுத் தான் சுடப்போறாங்கள் என்று நான் மட்டுமல்ல அங்கு நின்றவர்களும் நினைத்திருக்க வேண்டும். அதனால் அவர்கள் ஓட முயற்சிக்கவில்லை.

தூக்கிப் போடுவதற்காக நான் தனியாக வைக்கப்பட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கின்றேன் என நினைத்தேன். அவர்களையும் நான் தூக்கிப் போட்ட பின்னர் என்னையும் சுட்டுவிடுவார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரிந்தது.

“நாங்கள் உங்களைச் சுடமாட்டோம். மற்ற யூனிபோம் போட்டவங்கள் தான் சுடுவாங்கள். அவங்கள் வரமுன் ஓடுங்கோ” என மீண்டும் கூறினான் அவன்.

இதைக் கேட்டதும் அங்கு நின்ற நால்வரில் இரண்டு பேர் ஓடத் தொடங்கி விட்டார்கள். அவர்கள் ஓடிய திசையில் வெடிச் சத்தங்கள் கேட்டன. ஆனால் அவர்கள் தப்பிவிட்ட தாகப் பின்னர் அறிந்தேன்.

ஓடப்பயந்து நின்ற மற்றவர்கள் இருவரையும் பற்றி நான் இன்று வரை எதுவம் அறியவில்லை. அவர்களும் அந்தக் குவியல்களில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என நான் நினைக்கின்றேன்.

நான் இப்போதும் அந்த வாகனத்தின் சில்லின் அருகில் தான் குந்திக் கொண்டிருந்தேன். எனக்கு சிகரட் தந்தவன் என்னருகில் வந்தான். வீதியின் அருகில் இருந்த சிறிய குளத்தை ஒட்டி உயரமாக வளர்ந்திருந்த புற்களைக் காட்டி அதனுள் போய் படுத்துவிடு என எனக்கு மெதுவாகச் சொன்னான்.

அவன் என்னைக் காப்பாற்றுவதற்காகச் சொன்னானா அல்லது அங்கு வைத்தே என்னையும் சுடப் போகின்றானா என்பது எனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை. அவனது கட்டளைக்குக் கீழ்படிந்து அக்குளக்கரையில் தண்ணீருக்கு மேலே வளர்ந்து இருந்த புற்களின் புதருக்குள் இறந்து கிடக்கும் பிரேதம் போலக் குப்பறப் படுத்துக் கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று நேரத்தில் அங்கிருந்த வாகனம் உறுமியவாறு அங்கிருந்து கிளம்பிச் சென்றது. வாகனம் மட்டும் சென்றிருக் கலாம் ஆனால் அவர்கள் இன்னும் அங்கு சுற்றிக் கொண்டிருக்கலாம் என்ற எண்ணம் எனக்குத் தோன்றியதால் நான் அசையாமல் கிடந்தேன்.

நேரம் செல்லச் செல்ல இருட்டத் தொடங்கியது. ஆள் அரவம் இல்லாதமாதிரி எனக்குத் தோன்றியது. ஆனால் எழும்பிப் பார்க்கத் துணிவு வரவில்லை. மெதுவாக ஊர்ந்து குளத்திற்குள் இறங்கிவிட்டேன். கண்ணும் மூக்கும் மட்டும் தண்ணீருக்கு மேல் இருக்குமாறு பார்த்துக் கொண்டேன்.

இருட்டாகி விட்டதால் எனக்கு மட்டுமல்ல யாருக்கும் நான் அங்கிருப்பது தெரிய வாய்ப்பில்லை. மெதுவாக நீருக்குள் நடந்தும் நீந்தியும் குளத்தின் அடுத்த கரையை அடைந்து விட்டேன். அங்கிருந்து வெளியேவந்து வயல் வரப்புகளின் ஊடாக இருட்டின் உதவியுடன் தட்டுத் தடுமாறி எனது வீடு வந்து சேர்ந்ததும் முற்றத்தில் மயங்கி விழுந்து விட்டேன்.

ஆனால் நான் உயிர் பிழைத்துவிட்டேன்.

பிணங்களின் குவியலில் இருந்து உயிர் பிழைத்து விட்டேன்.

இன்று உயிருள்ள நடைப்பிணமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்.

(ஈழநாடு, பாரீஸ் – தொடர் – 22.05.2008)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. மருத்துவத்தின் மறுபக்கம்

எமக்குத் தலையிடி காய்ச்சல் போன்ற சாதாரண வருத்தம் வந்தால் எமக்குத் தெரிந்த மருந்து வகைகளைப் பாவிக்கின்றோம்.

சற்றுக் கூடிய வருத்தமாய் இருந்தால் வைத்தியரிடம் சென்று அவர் தரும் மருந்துகளைப் பாவிக்கின்றோம்.

இதனால் எமது வருத்தம் மாறி விடுகிறது. அன்றாட வாழ்வில் மூழ்கி விடுகின்றோம்.

உண்மையில் வருத்தம் என்றால் என்ன? மருந்துகள் அதனை எப்படி மாற்றி விடுகின்றன என நாங்கள் சிந்திப்பதே இல்லை.

மருத்துவர்களும் ஆராய்ச்சியாளர்களும் இதைப்பற்றி சிந்திக்கின்றார்கள் என்பதையும் நாம் கண்டு கொள்வதில்லை.

எமது உடம்பில் உள்ள பல வகையான உறுப்புகள் தமது இயக்கத்தின் மூலம் எம்மைச் சுகதேகிகளாக வைத்துக் கொள்கின்றன.

ஏதாவது ஒரு உறுப்பின் செயல்பாட்டில் ஏதாவது ஒரு காரணத்தால் மாற்றமோ அல்லது தடையோ ஏற்பட்டால் அது உடம்பில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. இதனையே நாம் வருத்தம் அல்லது சுகயீனம் என்கின்றோம்.

ஒரு குறிப்பிட்ட வருத்தத்திற்கு எந்தெந்த உறுப்புகள் காரணியாக அமைகின்றன என்பதை முதலில் கண்டறிந்து, அந்த உறுப்புகள் ஏன் மாற்றம் அடைந்தன, அவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவர்த்தி செய்வதற்கான மருந்து வகைகள் யாவை எனத் தெரிந்து அம்மருந்துகளை எந்தக் காலத்தில் எந்த அளவில் பயன் படுத்தினால் குறிப்பிட்ட அந்த உறுப்பு சாதாரண நிலைக்குத் திரும்பி தனது செயல்பாட்டை ஆரம்பிக்கும் எனக் கண்ட பின்னரே மருந்து கொடுக்கப்படுகிறது.

இவ்வாறு கொடுக்கப்படும் மருந்து உடலினுள் சென்று எந்தப் பாகத்தில் என்னென்ன தொழில்பாட்டைச் செய்கின்றது என்பதைப் பற்றிய ஆய்வு பார்மக்கோடினாமிக் என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது.

இங்கு நாம் தலையிடி காய்ச்சல் வயிற்றோட்டம் ஆகிய மூன்று விதமான வருத்தங்களை உதாரணமாக எடுத்துக் கொள்வோம்.

தலையிடி உடலின் மேற்பாகத்துடன் சம்பந்தப்பட்ட வருத்தமாக எமக்குத் தெரிகிறது. காய்ச்சல் உடல் முழுவதும் உணரக் கூடியதாகவும், வயிற்றோட்டம் வயிற்றுடன் சம்பந்தப்பட்டதாகவும் எமக்குத் தெரிகிறது.

ஆனால் நாம் மூன்று விதமான வருத்தங்களுக்கும் மருந்தை உட்கொள்ளும் வழி ஒன்றாகத்தான் இருக்கிறது.

உட்கொள்ளும் மருந்து உடலில் உள்ள உறுப்புகளில் எந்த உறுப்பைப் போய் அடைய வேண்டும் என்பதும் அந்த உறுப்புகளை அடைந்ததும் எந்த விதத்தில் செயல்பட்டால் எமது நோக்கம் பூர்த்தியாகி வருத்தம் மாறிச் சுகம் பெறலாம் என்பதும் உட்கொள்ளப்படும் மருந்தில் உள்ள இரசாயனக் கலவையைப் பொறுத்தே அமைகிறது.

இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயம் ஒன்று உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்துகள் அனைத்தும் இரசாயனக் கலவையி னாலேயே தயாரிக்கப்படுகின்றன.

இரசாயனம் என்றவுடன் நச்சுத்தன்மை உடையன என்ற நினைப்பு எமக்கு ஏற்படுவதில் தவறில்லை.

நச்சுத்தன்மை நிச்சயம் இரசாயனத்தில் கலந்திருக்கும்.

ஆனால் தயாரிக்கப்படும் மருந்தில் உள்ள நச்சுத்தன்மை யின் அளவும் அதனால் ஏற்படக் கூடிய பக்க விளைவுகளைப் பற்றியும் வருடக்கணக்கில் ஆராய்ந்தறிந்த பின்னரே மருந்து கள் தயாராகிச் சந்தைப்படுத்தப்படுகின்றன.

மருந்துகள் குளிசைகளாகவோ, கூடுகளாகவோ, திரவ மாகவோ, தூளாகவோ, மலவாசல் வழியாக உட்செலுத்தப் படும் ரொக்கட்டுகளாகவோ, அல்லது வெளிப் பாவனை யாகப் பூசுவதற்காகவோ அல்லது மணப்பதற்கு மட்டு மாகவோ இருப்பதை நாம் அறிவோம்.

இவ்வாறு பல்வேறு வகையான அமைப்புகள், வடிவங் கள், அளவுகள், சுவைகள் என்பன மாறுபட்டு இருப்பதற்கும் பல வகையான காரணங்கள் உண்டு.

மருந்துகளை பாவிக்கும் அளவிலும் காலத்திலும் மட்டுமல்ல உண்ணும் உணவிலும் கூட மருந்தின் செயல் பாட்டுத் தன்மையில் மாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு.

சில மருந்துகள் நீரில் கரையும் தன்மை உடையன. சில மருந்துகள் கொழுப்பில் கரையும் தன்மை கொண்டன. சில மருந்துகள் நேரடியாக இரத்த ஓட்டத்தில் ஊசி மூலம் கலக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போன்று சில மருந்துகளைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்த வேண்டியுள்ளது. சில, தேவைப்படும் போது மட்டும் பயன் படுத்த வேண்டியவையாகவும் உள்ளன.

பாவிக்கப்படும் மருந்து உடலின் உறுப்புகளால் முழுமையாக உள்வாங்கப் படுகிறதா? அதாவது மருந்தின் தன்மை முழுவதும் எமது உறுப்புகளால் பயன்படுத்தப் படுகிறதா? என்பது முக்கிய கேள்வியாகும்.

குறிப்பிட்ட வருத்தத்திற்கு குறிப்பிட்ட அளவு மருந்து உட்கொள்ளப்படல் வேண்டும் எனத் தீர்மானிக்கப் பட்டாலும் அந்த மருந்தின் தன்மை எந்த அளவு தனது இலக்கை அடைகிறது என்பதில் வேறுபாடுகள் உள்ளன.

எமது உறுப்புக்குத் தேவையான அளவில் மருந்து சென்றடையாவிடின் வருத்தம் மாறாமல் இருக்கும். அதே சமயம் தேவைக்கு மேலதிகமாகச் சென்றடைந்து விட்டாலோ வேறு வருத்தங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. மருத்துவ உலகில் இன்றும் கூட இது ஒரு புதிராகவே காணப்படுகிறது.

இங்கு எமக்குப் பெரிய சமப்படுத்தல் தேவைப்படுகிறது. இது, இரு வேறுபட்ட நோக்கத்தினை அடையும் இரு வேறுபட்ட செயல்பாட்டினால் தீர்க்கப்படவேண்டியுள்ளது.

எமது உடல் உறுப்புகளின் தன்மை, செயல்பாடு அனைத்தும் கழிவை வெளியேற்றி உடலைக் காத்தல் என்ற இயற்கையின் விதிப்படியே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே வரும் நச்சுத்தன்மை கொண்டவற்றை வெளியேற்றிவிட வேண்டும் என்பதில் எமது உள்ளுறுப்புகளில் பல கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படுகின்றன. எமது உள்ளுறுப்புகள் மிகக் கவனமாகச் செயல்படுகின்றன.

மருந்துகளும் நச்சுத் தன்மை கொண்டவைதானே.

அவற்றை வெளியேற்றிவிட வேண்டும் என்பதே எமது உறுப்புகளின் தொழிற்பாடாக இருக்கும் என்பது எமது மருத்துவ ஆய்வாளர்களுக்கு நன்கு தெரியும் என்பதால் அதற்கேற்ப திட்டமிட்டே மருந்துத் தயாரிப்பில் ஈடுபடுகிறார்கள்.

உள்ளே செல்லும் மருந்தை எந்தெந்த வழியில் எவ்வளவு விரைவில் எமது உடல் உறுப்புகள் வெளியேற்றும் என்பதை அறிந்து அதனைச்சமநிலைப் படுத்த எந்த அளவில் எந்த நேரக் கணக்கில் மருந்தை தொடர்ச்சியாக உட்கொள்ள வேண்டும் என்பதைக் கண்டறிய வேண்டிய தேவை இருக்கின்றது.

மருந்து உடலுக்கு என்ன செய்யும் என்பதை பார்மகோடினாமிக் ஆய்வு செய்வது போல உடல் மருந்துக்கு எதிராக என்ன செய்கிறது என்பதை ஆய்வு செய்வதை பார்மகோகினற்றிக் என்பார்கள்.

இதுவே மருத்துவத்தின் மறுபக்கம் ஆகும்.

உட்செல்லும் மருந்தின் தன்மையை உள்ளுறுப்புகள் எந்த அளவில் நுகர்கின்றன; அவற்றை வெளியேற்றும் உறுப்புகள் எந்த அளவில் வெளியேற்றுகின்றன என்பதைக் கண்டறிய பல ஆய்வுகள் பல ஆண்டுகாலமாகத் தொடர்ந்து நடந்த வண்ணமே இருக்கின்றன.

(ஈழநாடு, பாரீஸ் - 1998)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. புகழைத்தேடி

செற்றியில் இருந்தபடியே அந்த அறையை திரும்பத் திரும்பப் பார்த்தேன். இங்கு பார்ப்பதற்கு என்ன இருக்கிறது? இங்குதானே இத்தனை வருடங்களாக தன்னந்தனியனாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இருந்தாலும் இன்று இந்த அறை வித்தியாசமாகத்தான் எனக்குத் தெரிகிறது. எனக்கு மட்டுமல்ல நாளை விடிந்தால் இந்த உலகம் முழுவதும் இந்த அறையைப் பார்க்கப் போட்டி போடும். ரேடியோ, ரிவி, பத்திரிகைகள் எல்லாம் நான் முந்தி நீ முந்தி என வருவார்கள். எனது பெயர் உலகம் முழுவதும் தெரிய வரும். நான் யார் என்று இதுவரை தெரியாமல் இருந்தவர்கள் எல்லாம் என்னைப் பற்றி நாட் கணக்காகக் கதைக்கப் போகிறார்கள்.

ஆ..... இதுதான் எனது லட்சியம். அதை நான் அடைய இன்னும் சில மணித்தியாலங்கள் மட்டும் தான் பாக்கியுண்டு.

முன்னால் இருந்த மேசை மீது அழகாக அடுக்கி வைத்திருக்கும் ஓடியோ கசட்டுகள், அதனருகே வீடியோ கசட்டுகள், அடுத்து சில புத்தகங்கள். அந்தப் புத்தகங்கள் கூறுவதெல்லாம் உலகப் புகழ் பெற்றவர்களின் பெயர்களும் வாழ்க்கை வரலாறும்தான். புகழ் அடைந்தவர்களைப் பற்றி நான் அறிந்து கொள்ள எனக்கு வழிகாட்டியவன் சற்குணம். அவனது பெயருக்கு ஏற்றமாதிரித்தான் குணமும். அதிகம் படிக்காவிட்டாலும் உலகம் அறிந்தவன். அதனால்தான் எனக்குப் புகழ் பெற்றவர்களைப் பற்றி அடிக்கடி எடுத்துக் கூறிக்கொண்டிருப்பான். இன்னும் சில மணித்தியாலங்களில் அந்தப் பட்டியலில் எனது பெயரையும் சேர்த்துக்கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வான். என்னை தனியாக விட்டு விட்டுப் போய்விட்டதற் காகக் கவலைப்படப் போகிறான், பாவம். என்னுடன் இருந் திருந்தால் இந்தப் புகழில் அவனுக்கும் கொஞ்சம் வந்திருக்கு மல்லவா?

இந்த அறையில் இதுவரை தன்னந்தனியனாக அடை பட்டுக் கிடந்த என்னைப் பற்றி அனைவரும் கதைக்கப் போகிறார்கள். நினைக்கவே சந்தோசமாக இருக்கிறது.

நண்பர்கள்..... அப்படிச் சொல்ல எனக்கு யார் இருக்கிறார்கள்?

வெளிநாட்டிற்கு வந்து பல வருடமாகியும் இங்கு எனக்கு யாருமில்லை. வேலை செய்யுமிடத்தில் பிரஞ்சுக் காரன். மெற்றோவில் யார் யாரோ. சில சமயங்களில் தமிழரையும் காண்பதுண்டு ஆனால் அவர்களுக்கு நானும் யாரோ தான். காட்ஸ் விளையாட்டில் புகுந்தால் நண்பர்கள் கிடைப்பார்கள் எனச் சற்குணம் சொன்னதால் அங்கு போய்ப் பார்த்தேன். என்னைத்தவிர மற்ற எல்லாரும் விளையாடி னார்கள். என்னுடன் விளையாட ஆட்கள் இல்லை. குடித்து கும்மாளம் அடிக்கும் பேர்வழிகளுடன் சேர்ந்து விட்டால் என்னையும் சேர்த்துக் கொள்வார்கள் எனத்தீர்மானித்து முதலில் தனியக்குடிக்கப் பழகினேன். குடித்து விட்டு வெளியே போனேன். என்னை விலக்கிவிட்டுத்தான் மற்ற வேலையைப் பார்தார்கள்.

என்னை மற்றவர்கள் மதிக்காமல் விட்டதற்கு என்ன காரணம் என யோசிக்க ஆரம்பித்தேன். நான் யார் என்று மற்றவர்களுக்குத் தெரியாததுதான் காரணம் எனக் கண்டு கொண்டேன்.

மற்றவர்களுக்கு என்னைத் தெரியப்படுத்த வேண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயின் எனக்குப் புகழ் கிடைக்க வேண்டும். அதாவது நான் பிரபல்யமாக வேண்டும். சற்குணம் சொன்னது சரிதான். பிரபல்யமடைய என்ன செய்யலாம்? பிரபல்யம் அடைந்த வர்களின் பட்டியலைப் பார்த்தேன். என்னால் செய்யக்கூடி யதை எல்லாம் ஏற்கனவே செய்து விட்டார்கள். அவர்கள் கூட எனக்கு எதிராகத்தான் அன்று இருந்திருக்கிறார்கள்.

இந்தப் பெரிய பாரிசில் நான் யார் என்று எல்லோருக் கும் காட்டவேண்டும். எதையாவது செய்யவேண்டும் என்ற படியே பாரிசைச் சுற்றிச் சுற்றி வந்தேன். எனது கார் போகும் இடம் எல்லாம் காட்சிகள் தெரிந்தன ஆனால் நான் செய்யக் கூடியதாக எதுவும் அகப்படவில்லை.

நான் யார்? இது வரை என்ன செய்தேன்? என் கேள்விக்கு விடை தேடினேன். ஆனால் அதைத்தான் காண வில்லை.

இத்தனை வயதாகியும் என்னை யாருக்கும் தெரிய வில்லையே....

பதுங்கு குழிக்குள் பாவிகளின் குண்டுக்குப் பறிகொடுத் தேன் பெற்றவரை. பரிதவித்தேன், தனித்திருந்தேன், அங்கும் அதைக்கேட்க யாருமில்லை... அகதியாய் அயல்நாட்டில் அலைகிறேன், அரவணைக்க யாருமில்லை...

எழுதுவேன், வாசிப்பேன், ஆனால் கதையாக்க, கவிதையாக்க முடிவதில்லை...

005369

வளர்ந்து விட்டேன் உருவத்தால். மணமேடையில் அமர்ந்து மதிப்பாக இருக்கலாம் என எப்படியெல்லாமோ முயன்று பார்த்தேன்; எனக்கொரு பெண்தர யாருமே முன் வரவில்லை....

LEBARA LIBRARY
Education Resource Center
(ERC)
87, Kanahambigaikulam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதிக்காட்டும் அதற்கடுத்துக் காசும் கண்சிமிட்டும் காருங்கூட என்னிடமுண்டு ஆனால் கண்டுகொள்ள யாருமில்லை.... காரணம் என்ன?

நான் பிரபல்யமாக இல்லாததுதான் காரணம்.

இருந்திருந்தால் தமிழ்ப் பத்திரிகையில் என் பெயர் வந்திருக்குமே..

தமிழ்ப் பத்திரிகை.........

மின்னல் தட்டியது.... மூளையில் மின்சாரம் புகுந்தது....

ஆ.............. கா.............. எனக்குப் பிரபல்யம் கிடைக்க வழிகிடைத்துவிட்டது.

நான் யார் என்பதைக் காட்ட தமிழ்ப் பத்திரிகை உதவப் போகிறது.......

ஊர் அடங்குவதற்காக இதுவரை காத்திருந்த நான் செற்றியில் இருந்தபடியே திரும்பி மணிக்கூட்டைப் பார்த்தேன். இரவு 11 மணியாகிவிட்டதைக் காட்டியது அது.

மிக அமைதியாக அதேசமயம் நிதானமாக எழுந்தேன். ஏற்கனவே தயாராய் வைத்திருந்த பழைய பியர்ப் போத்தலை எடுத்து கடதாசி பேக்கில் பத்திரமாக வைத்துக் கொண்டேன். என்னிடம் இருந்த யக்கற்றுகளுக்குள் மிகவும் நல்லதாக, பிரபல்யமான மனிதர்கள் போடக்கூடியதாக ஒன்றை தேர்ந்தெடுத்துக் கொண்டேன்.

அறையைப் பூட்டி, திறப்பை எடுத்துக்கொண்டு கீழே போய் காரை ஸ்ராட் செய்தேன். அது ஒருமுறை உறுமி விட்டு "பொபிக்னி" நோக்கி ஓடத்தொடங்கியது.

LEBARA LIBRARY Education Resource Center

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் 11.30 மணியளவில் லூயிஸ் அரகோன் வீதியை அடைந்து விட்டேன். ஏற்கனவே பல தடவை இந்த வீதியால் போயிருப்பதால் தமிழ்ப் பத்திரிகை காரியாலயம் அமைந் திருந்த இடம் எனக்கும் என் காருக்கும் நன்கு தெரியும். இதோ 42ஆம் இலக்கம் இருக்கும் இடத்தை அடைந்து விட்டேன். ஆனால் வீதியின் அடுத்த திசையில் அது இருப்பதால் தொடர்ந்து போய் அடுத்த சந்தியில் காரைத் திருப்பிக்கொண்டு வருவதற்காக தொடர்ந்து போய்க் கொண்டிருந்தேன்.

எனது லட்சியத்தை அடையும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.....

உள்ளம் படபடத்தது....

சந்தோசம் தாங்க முடியாத நிலையில் நான் இருப்பது நன்கு புரிந்தது.

மணிக்கூட்டைப் பார்த்தேன், 11.55க் காட்டியது.

இதோ சந்தி வந்து விட்டது....

காரை வேகமாகத் திருப்பினேன்....

ஒவ்வொரு கட்டிடமாக என்னைக் கடந்து போய்க் கொண்டிருந்தது.....

அதோ என் எதிர்காலம் தெரிகிறது..

அருகே இருக்கும் போத்தலை இறுக்கிப்பிடித்துக் கொண்டேன்...

இன்னும் 100 மீற்றர் தூரம் தான் இருந்தது....

என் பிரபல்யத்தை எதிர்பார்த்தபடி தமிழ்ப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியாலயக் கட்டிடத்தைப் பார்த்தேன்.

அய்யோ..........

என்னால் என் கண்களை நம்ப முடியவில்லை .........

அது எரிகிறது.........

என்கையில் போத்தல் அப்படியே இருக்கிறது. ஆனால் கட்டிடம் எரிகிறது.

இது எப்படி சாத்தியமாகும் என்று யோசித்தபடி மிக வேகமாக காரை ஓட்டினேன்.

என் உடல் நடுங்கியது.... கார் மெதுவாகியது.... வீதியை நோட்டமிட்டேன்.

அங்கிருந்த ரெலிபோன் பூத்தில் இரண்டு பேர் நின்று யாருடனோ கதைப்பதைக் கண்டேன்.

என் லட்சியம் பாழாகிவிட்ட அந்த வேதனையை என்னால் தாங்க முடியவில்லை. எவனோ தரம் கெட்டவன் தனிப்பட்ட கோபத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக தனது கையாலாகாத்தனத்தை இப்படிக் காட்டிவிட்டான் எனத் துடித்தேன்.

அவனைக் கண்டால் கண்டதுண்டமாக வெட்டிப் போட நினைத்தேன்.

இப்படிச் செய்தால் எனக்குப் புகழ் கிடைப்பதுடன் தமிழினத்திற்கு மீட்சியும் கிடைக்கும்..

அவனை எனக்குக் காட்டிவிடு இறைவா..........

(ஆக்கம் : 27.03.2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. அன்னியனே வெளியேறு

இது ஒரு (தெரியாத, மறந்துவிட்ட மூலத்தின் ) மொழி பெயர்ப்பு. உரியவருக்கு உளமார்ந்த நன்றிகள்.

அன்றைய இரவு நத்தார்ப் பண்டிகைக்கு இன்னும் மூன்று நாட்கள் தான் எஞ்சியிருந்தது. அந்தச் சிறிய நகரத்தின் சந்தைப் பகுதிக்கு ஒரு சிலர் வந்தார்கள். அருகிலிருந்த தேவாலயத்தின் அருகில் நின்று இரகசியமாகத் தமக்குள் கதைத்துக் கொண்டனர். பின்னர் அந்தப் பெரிய கட்டடச் சுவரில்,

"அன்னியனே வெளியேறு"

"சுவிசவர்க்கே சுவிஸ் சொந்தம்" என எழுதினார்கள்.

அதனைத் தொடர்ந்து எதிரே இருந்த துருக்கியரின் கடைக் கண்ணாடிகளைப் பறந்து வந்த கற்கள் பதம் பார்த்தன.

அதன் பின்னர் அவர்கள் அங்கிருந்து அகன்றுவிட்டனர். மயான அமைதி நிலவியது அங்கே. நகரசபைக் கட்டடக் காவலர்கள் வேலை முடிந்து அங்கிருந்து வெளியேறினர். யாரும் எதையுமே கவனிக்கவில்லை.

"இனி ஏலாது, வெளிக்கிடு, போவோம்"

"எங்க போறது? தெற்கால போவமா?"

"இல்லை கீழ போவம். அதுதான் எங்கட நாடு. இங்க இனிக் கஸ்ரம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்தச் சுவரில இருக்கிற மாதிரி நாங்கள் செய்வம்."

"அன்னியனே வெளியேறு"

இரவோடு இரவாக அந்தச் சிறிய நகரம் மெதுவாக அசையத் தொடங்கியது.

கடைகளின் கதவுகள் உடைத்துத் திறக்கப்பட்டன.

முதலில் வெளியே வந்தது கொக்கோ பைக்கற்றுகள், அதைத் தொடர்ந்து சொக்குலேற்றுகள். அவற்றைப் பின் தொடர்ந்தது நத்தார்ப் பெருநாள் அலங்கரிப்புப் பொருட்கள்.

அவைகள் தமது தாயகமான காணாவுக்கும் மேற்கு ஆபிரிக்காவுக்கும் புறப்பட்டு விட்டன.

அதனைத் தொடர்ந்து சுவிஸ் மக்களின் அபிமான பானமான கோப்பிப் பொதிகள் அடுக்கடுக்காக உகண்டா, கென்யா, லத்தீன் அமெரிக்காவை நோக்கிப் புறப்பட்டு விட்டன.

வாழைப்பழமும் அன்னாசியும் தமது பெட்டிகளுக்குள்ளிருந்து வெளியேறின. அவர்களுடன் திராட்சையும் செறிப்பழமும் தெற்கு ஆபிரிக்காவை நோக்கிப் புறப் பட்டன.

நத்தார்ப் பண்டிகைக்கான விசேட உணவுப் பண்டங்கள் வெடித்துச் சிதறின. அதனுள் இருந்த வாசனைத் திரவியங் களான கறுவா, ஏலம், இஞ்சி போன்றஅனைத்தும் தமது தாயகமான இந்தியாவை நோக்கிப் புறப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளுடனும் ருசியூட்டிகளும் இன்றித் தனித்துவிடப் பட்ட சுவிசின் அனைத்து பண்டிகைப் பண்டங்களும் விம்மி விம்மி அழத்தொடங்கின.

தரம் இனி முக்கியமில்லை. இனமும் தாய் நாடுமே முக்கியமாகியது.

இருள் விலகி மெதுவாக விடியத் தொடங்கியது.

வெட்டிவைத்த பூக்கள் கொலம்பியாவை நோக்கிப் புறப்பட, தோலாடைகள், தங்கம், வைரம் போன்ற விலை யுயர் ஆடம்பரப் பொருட்களும் தத்தமது தாயகம் நோக்கிப் புறப்பட்டன.

அன்றைய தினம் போக்குவரத்துகள் அல்லோகோலப் பட்டு நெரிசல் ஏற்பட்டது.

நீண்ட வரிசையில் யப்பான் மகிழுந்துகள் காத்திருந்தன. கிழக்கை நோக்கி மின்னணுப் பொருட்கள் முண்டியடித்தன.

நத்தாருக்காகக் காத்திருந்த தாராக்கள் போலாந்தை நோக்கி ஆகாயத்தில் பறந்தன.

அவற்றுடன் சேர்ந்து பட்டுப் புடவைகளும் கம்பளங் களும் ஆசியாவை நோக்கிப் பறந்தன.

பாரிய சத்தத்துடன் யன்னல் கதவுகளும் நிலைகளும் மட்டுமல்ல மரத் தளபாடங்களும் உடைத்துக் கொண்டு அமசோனா காடுகளை நோக்கிப் புறப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுக்கி விழுந்துவிடாமல் கவனமாக ஒவ்வொருவரும் தம்மைப் பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்பட்டது, எண்ணெ யும் பெற்றோலும் தங்கள் தாய்நாடு நோக்கிப் பாய்ந்தோடிய போது.

இருந்தாலும் முன்னேற்பாடு செய்யப்பட்டிருந்ததால், சுவிஸ் தயாரிப்பான கரியில் ஓடக்கூடிய யேர்மனிய வாகனங் களுக்கான பத்திரங்களை வெளியே எடுத்தார்கள்.

எமக்கு எதற்கு அன்னிய எண்ணெயும் எரிபொருளும்?

அய்யோ பரிதாபம் யேர்மன் வாகனங்களான பிஎம் டபில்யூ, பொல்க்ஸ்வாகன் போன்ற நிறுவனங்களின் வாகனங்களின் உதிரிப்பாகங்கள் உருகத் தொடங்கின.

அலுமேனியம் யமேக்கா நோக்கியும் செம்பு சோமா லியா நோக்கியும் புறப்பட்டன.

உதிரிப் பாகங்களின் மூன்றில் ஒரு பகுதி பிறசீலியா நோக்கியும், சைரியா நோக்கி இயற்கை இரும்பும் புறப் பட்டன.

வீதிகளை மெழுகி வழுவழுப்பாக்கிக் கொண்டிருந்த தார் உருகித் தன்பாட்டில் புறப்பட ஆயத்தம் செய்தது.

மூன்று நாட்கள் கழிந்து விட்டன. அனைத்தும் நத்தார் தினத்திற்கு முன்னர் முடிந்து விட்டது.

அன்னியப் பொருட்கள் அனைத்தும் கடைகளில் இருந்து காணாமல் போய்விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஊசி இலை மரம் அதாவது நத்தார் மரம் மட்டும் இன்னும் இருந்தது. அப்பில் பழமும் கொட்டைப் பருப்பும் கூடப் பாக்கியிருந்தது.

இரவு அமைதியாக இருந்தது. இனி நத்தார்ப் பாடலைப் பாடலாம் என எண்ணிய போது, அந்த நத்தார்ப் பாடல் கூட அவுஸ்திரிய நாட்டிலிருந்தல்லவா வந்திருந்தது?

அங்கே மிஞ்சியிருந்தவர்கள் அன்னை மரியாவும் யோசேப்பும் அவர்களின் குழந்தை யேசுவும்தான்.

அச்சச்சோ அவர்களும் யூதர்கள் அல்லவா?..........

ஆனாலும் மரியா கூறினாள்,

"நாங்களும் போய்விட்டால் இவர்களுக்கு மனிதத்தைத் தெரியப்படுத்துவது யார்?"

"நாங்கள் இங்கிருப்போம்".

(ஈழநாடு, பாரீஸ் - 18.12.2007)

LEBARA LIBRARY
Education Resource Center
(ERC)
87, Kanahambigaikulam,
Kilinochchi.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. அகதி

வழமை போல அன்று மதியமும் உருளைக்கிழங்கைச் சீவித் தோலைக் குவித்துக் கொண்டிருந்தார் முத்தண்ணர். அவர் அருகே இறைச்சியை வெட்டிக் கொண்டு இடையிடையே சிகரட்டை நுனிவிரலால் பிடித்து இழுத்த புகையை வெளியில் ஊதி விட்டுத் தன்னுள் இரசித்துக் கொண்டிருந்த சிவாவை ஓரக்கண்ணால் பார்த்தார். இந்த உலகை மறந்தவன் போல் அவன் தொடர்ந்தும் இறைச்சியை வெட்டிக்கொண்டே இருந்தான். முகாமில் உள்ள பன்னிரண்டு பேருக்கும் சேர்த்துச் சமைக்கும் முறை இன்று சிவாவுக்கும், சுதாவுக்கும்தான்.

சுதா எங்கோ வேலை தேடிப் போவதால் முத்தண்ணரிடம் வந்து "அண்ணை இண்டைக்கு சிவாவோட சேர்ந்து எனக்காகச் சமைக்கறீங்களே?" எனக் கேட்டான்.

சுவிஸ் வந்து பதினொரு மாதமாகியும் முகாமும் புகையிரத நிலையமும்தான் வாழ்க்கை என ஆகிவிட்ட முத்தண்ணருக்கு சமையலறையில் சமையலுக்கு உதவுவதும் ஒரு வகையில் அமைதியைத் தரும் விசயமாக இருந்ததால் எல்லா நாட்களிலும் சமையலில் ஒத்தாசை புரிவார். இதனால் சமைக்கத் தெரியாதவர்களும், பஞ்சிப்படுபவர்களும் முத்தண்ணையின் பரோபகாரத்தைப் பயன்படுத்தத் தவறுவதேயில்லை.

முத்தண்ணர் பற்றி மற்றவர் நினைப்பதை அவர் சற்றும் சட்டை செய்யவில்லை. தோல் சீவிய கிழங்கை அள்ளிக் கழுவி பெரிய சட்டியில் போட்டவர் அந்தக் கிழங்குகளைப் பார்த்தார்.

குழந்தைகள் கள்ளங்கபடமற்றுச் சிரிப்பை உதிர்ப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலப் பட்டது அவருக்கு.

அவ்வளவுதான்..... அவர் முகம் இறுகத் தொடங்கியது. உள்ளம் வேதனைப்பட்டது. பெருமூச்சு உஸ்ணமாக வெளிப் பட்டது. துக்கம் தொண்டையை அடைக்க நாவரண்டு போயிற்று. அருகே இருந்த கதிரை மீது தொப்பென்று அமர்ந்து விட்டார்.

குழந்தைகள்.................... பிள்ளைகள்............ இதற்காகத்தானே அவர் வாழ்ந்தார்.

அவரது உழைப்பு, நோக்கம், உத்வேகம் எல்லாம் அவரது பிள்ளைகளுக்காகத்தானே இருந்தது......

நாட்டில் பிரச்சனை.... இளைஞர்கள் மட்டுமல்ல குடும்பத் தலைவர்கள் கூட நாட்டை விட்டு நான் முந்தி நீ முந்தி என்று போட்டி போட்டுக் கொண்டு வெளியேறிய போதும் தன் வீட்டை விட்டு குறிப்பாக பிள்ளைகளைவிட்டு எங்குமே போகமாட்டேன் எனப் பிடிவாதம் பிடித்துக் கொண்டு வாழ்ந்தவர் அவர்.....

பள்ளிப்பிராயத்தில் துள்ளித் திரிந்த போதும், பருவக்காளையாக உலாவந்த போதும், குடும்பப் பந்தத்தில் பிரவேசித்த போதும் அலுப்போ சலிப்போ ஏற்படவில்லை.

அவருக்குப் பொருளாதாரப் பிரச்சனை இல்லை என்று துல்லியமாய்ச் சொல்லக்கூடிய நிலையிலேயே அவர் வாழ்ந்தார்.

குடும்பம் பெருகி குழந்தைகள் வளரக் குதூகலமாய் வாழ்ந்தவர். அவர் உண்டு அவர்பாடு உண்டு என்ற வர்க்கத்தில் ஆணி வேராக இருப்பவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக அரசியல் தொட்டு உள்வீட்டு விசயம் வரை அலசி ஆராய்வதில் அலாதி ஆனந்தம் கண்டபோதும் எதிலுமே பங்கேற்க மாட்டார்.

உலகைக் காக்க உலகத் தலைவர்கள், அரசியலைப் பார்க்க அரசியல்வாதிகள். அவர் வீட்டைப் பார்க்க, குடும்பத் தின் வருமானத்திற்கு வழி சமைப்பது மட்டுமே அவரது வேலை. ஆனால் பிள்ளைகள் மீது உயிரையே வைத் திருந்தார்.

நாட்டு நிலை மோசமாக மோசமாக அவரது மனைவி யும் அவரை வெளியில் அனுப்பி விட தன்னால் இயன்ற மட்டும் பாடுபட்டார்.

"பிள்ளைகளை விட்டு நான் எங்கும் போகமாட்டேன். எது வந்தாலும் பரவாயில்லை" எனக் கூறி மனைவியை அடக்கி விடுவார்.

மனைவியும் விட்டபாடில்லை.

"சரி உங்களுக்குப் பிள்ளைகள்தானே முக்கியம். ஆனால் எனக்கு நீங்கள்தான் முக்கியம். உங்களுக் கொண்டெண்டால் நான் பிள்ளைகளைப் பாதுகாப்பது எப்படி? இப்ப எல்லா ரும் இந்தியாவுக்குப் போகினம். நாங்களும் போவம். நீங்கள் விரும்பியபடி பிள்ளைகளுடன் இருக்கலாம், அதைவிட உயிருடன் இருக்கலாம்" என விடாப்பிடியாக வாதிடத் தொடங்கி விட்டாள்.

முத்தண்ணருக்கும் மனைவியின் யோசனை சரியாகவே பட்டது.

மூத்தவனுக்கும் 14 வயதாகிவிட்டது. குடும்பத்தை இறுக்கமாக வைத்திருந்த படியால் பாடசாலை, வீடு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை என அவன் மீது எப்போதும் ஒரு கண் வைத்திருந் ததால் கட்டுப்பாட்டை மீறி அவனால் எங்கும் போகமுடிய வில்லை.

இதுவே அவருக்கு ஒரு பெரும் ஆறுதல். இனியும் எத்தனை நாட்களுக்கு அவனைக் கட்டிப் போடமுடியும்? வருவது வரட்டும் என நாட்டைவிட்டுக் குடும்பத்துடன் இந்தியாவுக்குப் புறப்படத் தயாரானார்.

ஊர் விடயத்தில் ஈடுபாடு இருந்ததால் யாருடைய வண்டில் எந்தக் கரையில் இருந்து எப்போது புறப்படுகிறது என்ற விடயம் எல்லாம் அவருக்கு அத்துப்படி.

அவரை இவரைப் பிடித்துத் தன்குடும்பத்திற்கு வண்டிலில் அதாவது வள்ளத்தில் இடமும் ஒழுங்கு படுத்தி விட்டார்.

மின்சார வாடையே இல்லாமல் பழகிவிட்ட யாழ் வீதிகளில் இரவில், வீதியின் குண்டு குழியில் இறங்கி ஏறிக் கொழும்புத்துறையை ஒருவாறு அடைந்து விட்டார்கள். அதிகாலை புறப்படும் படகினைப் பிடிப்பதற்காக முதல் நாளே போய் அருகிலிருந்த கொட்டிலில் தங்கினார்கள். அவர்கள் போகும் போதே கொட்டில் நிரம்பி வழிந்திருந் ததைப் பார்த்து மக்களின் துயரைத் தானும் அனுபவித்தார்.

ஆகாயத்தில் இரைந்து சத்தம் கேட்கும் போதெல்லாம் அனைவரது நாடித் துடிப்பும் அடங்கிப் போகும்.

இருட்டே துணையாகி, இதயமே தஞ்சமாகி மூச்சை இழுத்துப் பிடித்தவண்ணம் அனைவரும் இருந்தார்கள்.

நேர அரக்கனும் மிகவும் மெதுவாக நகர்ந்து கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுடைய வேதனையை இரசித்துக் கொண்டே சென்றதைப் போலிருந்தது முத்தண்ணருக்கு.

எப்படியோ இருட்டு விலகி கீழ் வானம் வெளுக்கத் தொடங்கியது. அனைவர் முகத்திலும் பய இருள் விலகி புதிய நம்பிக்கை தோன்றியது. இன்னும் சற்று நேரத்தில் எமக்கும் விடிவு கிடைத்து விடும் என எல்லாரும் சொன்ன வள்ளத்திற்காகக் காத்திருந்தனர்.

ஞானத்தின் வள்ளம், எமது வண்டில், கொடுக்க வேண்டியதைக் கொடுத்து, பெற வேண்டிய அனுமதியுடன் கடல் அலைகளில் அசைந்து அசைந்து வந்தது கண்டு உலகமே வள்ளமாகி, உயிராகி, வாழ்வாகி கண்கள் இரண்டும் கண்ணீர் வடிக்க இதயம் இளைத்துப் போகக் காத்திருந்தார் முத்தண்ணர்.

மற்றவர்களுடன் சேர்ந்து ஏதோ ஓர் ஆரவாரம், எப்படியோ சுறுசுறுப்பு. தத்தம் மூட்டை முடிச்சுகளுடன் தமக்கு வேண்டியவர்களை மட்டும் கண்ணால் சாடைகாட்டி வள்ளத்தை நோக்கி நடந்தனர். பெரு மனம் கொண்ட ஞானம் தனது வள்ளத்தில் வந்தவர்கள் அனைவரையும் ஏற்றினான். ஆண்டவருக்கு அடுத்ததாக அவர்கள் நம்பியது அப்போது அந்த ஞானத்தைத்தான்.

அந்த நேரம் வந்தது.

பிறந்து வளர்ந்த பொன்னாட்டைப் பிரிந்து போகும் நேரம்.

பிரிய எவருக்கும் மனமில்லை.

இந்த உணர்ச்சியை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்தால்தான் புரிந்து கொள்ளலாம்.

முத்தண்ணர் கரையையே வெறித்துப் பார்த்தபடி இருந்தார். அவர் மனம், தான் திரிந்த வீதிகள், பழகிய நண்பர்கள், பாடசாலை வாழ்க்கை, குடும்பம், தொழில் செய்த கட்டிடம் என ஒவ்வொன்றாக அசை போட்டது.

எதை விட, எதை நினைக்க என்று கூட அவரால் தீர்மானிக்க முடியவில்லை.

மனோவேகம் காற்றை விட வேகம் கூடியது என்பதால் அவர் நினைவில் எல்லாம் வந்தது. எதையும் இழக்க அவர் விரும்பவில்லை என்பதால் இதயம் பாரமாகிக் கொண்டே வந்தது.

ஐயோ! எனக் கதறி அழவேண்டும் போலிருந்தது அவருக்கு.

அவரால் எதுவுமே செய்ய முடியவில்லை.

எதுவோ தொண்டையை அடைத்து வாயை மூடி விட்டது.

அவர் உடல் குலுங்கியது.

கண்ணீர் தாரை தாரையாக வழிய, மனைவியின் வருடல் சுய நினைவை ஏற்படுத்தியது.

வள்ளம் புறப்பட்டு பல யார் தூரம் கடந்து விட்டது.

வெய்யில் சுள்ளெனப் பட்டதால் தாகம் எடுக்கத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் ஒரு மணித்தியாலம் வள்ளம் ஊர்ந்திருக்கும், திடீர் எனக் கேட்டது அந்தச்சத்தம். எமன் வரும் சத்தம். இதயம் வேகமாக அடித்தது.

ஐயோ ஹெலி!

ஐயோ கடவுளே!

ஆண்டவனே....

ஒரே சத்தம் ஒப்பாரி.... எதையும் புரிந்து கொள்ளவோ அல்லது என்ன நடக்கப் போகிறது என்பதையோ அவரால் தீர்மானிக்க முடியவில்லை.

அவரை அறியாமலேயே இரு கைகளும் தலைக்கு மேல் போயிற்று...... கடவுளே.....

இது என்ன கொடுமை......

பாழாய்ப்போன ஹெலி நெருங்கி வருகுதே......

ஐயோ என்று கதறி அழுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இருக்கவில்லை.

வந்தவன் என்ன நினைத்தானோ!

வட்டம் அடித்து விட்டுத் திரும்பிப் போனான்.

அழுகையும், வெப்பாதாரமும், ஆத்திரமும் மாறி மாறித் தோன்றியது.

மனைவியை நோவதா? பிள்ளைகளை நோவதா? தன்னையே நோவதா? தெரியாமல் தவித்தார் முத்தண்ணர்.

நேரமும் வள்ளமும் சேர்ந்தே ஓடின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் ஒரு சலசலப்பு, கூக்குரல், அதட்டல் கூச்சல், ஒரே இரைச்சல், மேலே எதுவும் இல்லை என்பதை நிச்சயித்த பின்னர் வள்ளத்தில் சுற்றுமுற்றும் நோட்ட மிட்டார்.

இப்போதுதான் முதன் முதலில் மற்றவர்களின் முகத்தையே பார்த்தார். இதுவரை உருவங்களை மட்டுமே பார்த்த அவருக்கு அனைவரது முகங்களும் பேய் அறைந்தது போல் கலங்கி இருப்பது தெரிந்தது.

வள்ளத்துக்குள்ள தண்ணி வந்திட்டு!

குரல்கள் துல்லியமாகக் கேட்டன.

"பாரம் கூடிப் போச்சு, மூட்டைகளைக் கடலில் போட வேண்டும்", உத்தரவிட்டான் ஞானம்.

அனைவருக்கும் திக்கென்றது.

உயிரும் உடமையும் இதுதான்........... இரண்டில் எதையும் விட எவரும் தயாரில்லை.

மீண்டும் கூச்சல் குழப்பம், வாக்குவாதம்.........

இறுதியில் இந்தியா நோக்கிப் புறப்பட்ட வள்ளம் திரும்பி கொழும்புத்துறைக்கே போயிற்று.

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாது போனது போல அனைவரும் வேதனையுடன் மீண்டும் இறங்கினார்கள்.

"இனி விடியத்தான்". ஞானத்தின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்ட அனைவரும் கடற்கரை மணலில் அமர்ந்தனர்.

உணவோ நீரோ இல்லாததால் குழந்தைகள் வெம்பிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தார்கள்.

ஏனையோர் வேதனையால் வெந்து கொண்டிருந் தார்கள்.

வேதனை, கவலை, பசி, களைப்பு, பயம், ஏக்கம், எதிர்பார்ப்பு.......... பெருமூச்சு......... அவ்வளவுதான்.

பொழுது படப் பட குளிர் வேறு கோரத்தாண்டவம் ஆடிற்று.

கடற்கரை மணலில் சிப்பிகள், ஊரிகள் உடலில் பட்ட இடமெல்லாம் வேதனை மேல் வேதனையைத் தந்தது.

எதற்கும் ஓர் எல்லை உண்டு என்பது போல் எல்லா உடல்களும் தூக்கத்திற்குக் கட்டுப் பட்டுவிட்டன.

பொழுது புலர மீண்டும் ஞானம் வந்தான்.

வேதனையிலும் ஒரு மகிழ்ச்சி .......... அவசரம்......... எதிர்பார்ப்பு......... எல்லாம் ஒன்றை ஒன்று முந்த முயற்சித்தன.......

'குடும்பங்கள் மட்டும் ஏறலாம்' என ஞானம் அனுமதித்தான்.

நாட்டின் எதிர்கால வாரிசுகள் என வர்ணிக்கப்பட்ட இளைஞர்களும் தனியாட்களும் தனித்து கரையில் ஏங்கித் தவிக்கப் புறப்பட்டது வள்ளம்.

சுமார் இரண்டு மணிக்கு இரணைத்தீவுக் கடற்கரையை அடைந்தது.

கண்கண்ட தெய்வமாகக் காட்சி தந்தார் பாதிரியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ண உணவும், குடிக்கத் தண்ணீரும் தந்தார். இந்துக்கள், கிறித்தவர்கள் இருவருமே தேவன் ஒருவனே என்பதை அப்போது பாதிரியாரின் வடிவில் கண்டார்கள்.

மாலை ஆறு மணிக்கு இந்தியாவை நோக்கி மீண்டும் பயணம்.

இல்லை இல்லை, எதிர்காலத்தை நோக்கி வள்ளம் புறப்பட்டது.

கடல் அலைகள் கொந்தளிக்கும் போதெல்லாம் வள்ளம் உயரே போய் கீழே விழுந்தது.

'எமக்கு இந்தியாவும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம், எம்மை உயிரோடு விட்டு விடு' என ஞானத்தை நோக்கிக் கதறினார்கள் சிலர்.

இந்தியக் கரை கண்ணுக்குத் தெரியவில்லை.

பார்க்கும் இடமெல்லாம் கும்மிருட்டும் கடல் அலையின் இரைச்சலும்தான் அவர்களுக்குக் கேட்டது.

ஞானம் மட்டும் தனது வேலையில் கண்ணும் கருத்து மாக இருந்தான்.

இன்னும் அரைமணித்தியாலத்தில் இந்தியா வந்து விடும் என்று ஆறு மணித்தியாலமாகச் சொல்லிக் கொண்டே வந்தான்.

அவனது கெட்டித்தனத்தை அந்த நேரத்தில் கூட முத்தண்ணர் கவனித்துக் கொண்டார்.

அதோ இந்தியா என்றான் ஞானம். அனைவரும் ஆவலுடன் கடலையே பார்த்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தில் தெரியும் நட்சத்திரம் போல கடலில் ஓர் வெளிச்சக் கீற்று கண்ணுக்குப் பட்டது.

அனைவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர்.

அந்த வெளிச்சத்தின் அழகைக் கண் வெட்டாமல் பல மணிநேரம் பார்த்தபடி இருந்தார்கள்.

அவர்கள் ஒவ்வொருவர் மனதிலும் ஒவ்வொரு எண்ணம்.

எண்ணம் எல்லாம் எதுவும் புரியாத எதிர்காலம் பற்றியே இருந்தது.

முத்தண்ணர் அடிக்கடி பிள்ளைகளை அணைத்த வண்ணமே இருந்தார். கடற்குளிரில் அந்த அணைப்பு அவர்களுக்கு இதமாகவே இருந்தது.

சுமார் ஒரு மணியளவில் வள்ளம் இராமேஸ்வரம் வந்து சேர்ந்தது.

கரையில் திருவிழாக் கோலமாய்ச் சனக் கூட்டம்.

ஞானத்தின் வள்ளத்தைப் போல பல வள்ளங்கள் இங்கு வந்து சேர்ந்திருந்தன. இன்னமும் வந்து கொண்டும் இருந்தன.

இதுவரை கடவுளாகத் தெரிந்த ஞானம் பெறுமதியற்ற வனாகத் திடீர் என்று மாறிவிட்டான்.

அனைவரும் கரையை நோக்கி தத்தம் மூட்டை முடிச்சுகளுடன் முழங்கால் தண்ணீரில் இறங்கி நடந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையில் பொலிசாரின் ஒழுங்கு நடவடிக்கைகள். அகதிகளைப் பகுதி பகுதியாகப் பிரித்து வேறு இடத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

முத்தண்ணரும் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு ஏதோ ஒரு இடத்திற்குப் போகும் பேருந்தில் தொற்றிக் கொண்டார்.

அவர்களுக்கான இடம் வந்தது. இடத்தைப் பார்த்ததும் ஒரு நிமிடம் கூடத் தங்கமுடியாது எனத் தீர்மானித்தார்.

இரண்டுநாட்கள் அங்கு எப்படியோ இருந்து விட்டு ஏற்கனவே வந்தவர்களின் உதவியுடன் வேறு இடத்தில் வீடு எடுத்துப் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப வழி செய்தார்.

கையிலிருந்த காசு கரைய புதிய கவலை தோன்றியது.

வருமானத்திற்கு வழி வேண்டுமே............

நினைத்துக் கலங்கிய மூளைக்கு வேலை கொடுப்பது போல அவர் பத்தினி அவளது நகைகளைக் கழற்றி அவரிடம் கொடுத்து விட்டாள்.

ஞானத்தைப் போல ஒரு ஞானி அவரை இங்கு சுவிசுக்குக் கூட்டிக் கொண்டு வந்து விட்டான்.

பிள்ளைகளுக்காக வாழ நினைத்தவர் பிள்ளைகளைப் பார்க்க முடியாமலே வாழ்ந்து கொண்டு இருக்கிறார்.

முத்தண்ணரைப் போல இன்னும் எத்தனை இதயங் கள்........ எத்தனை காலம்தான் காத்திருக்க வேண்டுமோ?

*(எழுத்தில் : 30.12.1991)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. சிறுவர் பாடசாலையில் தமிழ்ப் பிஞ்சுகளின் வேதனை

குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களிலும், சிறுவர்கள் பாடசாலைகளிலும் எமது மழலைகள் படும் துயரம் தமிழ் மக்கள் அனைவரது கவனத்தையும் இப்போது மெல்ல மெல்ல ஈர்க்கத் தொடங்கியுள்ளது.

அண்மைக்காலத்தில் அதிக தமிழ்க் குழந்தைகள் சுவிஸ் குழந்தைகளுடன் சேர்ந்து படிக்க விடப்பட்டிருப்பதை அனைவரும் அறிவோம்.

தொழில் புரிய வேண்டி நாம் எமது குழந்தைகளைத் தவிர்க்க முடியாத நிலையில் குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களில் விட்டு விட்டு வேலைக்குச் செல்கின்றோம்.

பணத்திற்காகப் பெற்றோரைப் பிரிந்து சுவிஸ் ஆயா விடம் சுவிஸ் முறையில் வாழவேண்டிய நிர்ப்பந்தம் எம் மழலைச் செல்வங்களுக்கு ஏற்படுத்தப்படுகிறது.

ஓய்வு நேரங்களில் தாய்ப் பாசையையும் ஏனைய நேரங்களில் "ஆயாப் பாசையையும்" கள்ளமில்லா அன்பை, கன்னித் தமிழ்ப் பண்பைக் கலந்துணவாய் நாமதற்கு ஊட்டிட வேண்டும் என்பதற்கிணங்க ஊட்டுகிறோம்.

எம்மைப் பொறுத்தவரையில் எமது குழந்தைகள் இரண்டு மொழிகளிலும் சிறப்பாகத் தேர்ச்சி பெறுவார்கள், பெறுகிறார்கள், அல்லது பெற்று விட்டார்கள்.

இரண்டு வேறுபட்ட கலாச்சாரமும் அவர்களுக்குத் தண்ணீர்பட்ட பாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் உண்மை நிலை என்ன?

தமிழ்க் குழந்தைகள் மற்றைய குழந்தைகளால் ஏற்றுக் கொள்ளப் படுகிறார்களா?

இரண்டு மொழிகளில் ஒன்றையாவது ஒழுங்காகக் கதைக்கிறார்களா?

இரு வேறுபட்ட கலாச்சாரங்களை உண்மையில் பழகி விடுவார்களா?

இவற்றிற்கு விடை காண முற்படும் போதுதான் எமக்கு அதிர்ச்சி ஏற்படுகிறது!

ஏனைய குழந்தைகள் எமது குழந்தைகளை ஒதுக்கியே வைக்கிறார்கள்.

குழந்தைகள் இலகுவாகச் சேர்ந்து விடுவார்கள் என்பது எந்தளவிற்கு உண்மையோ அதேயளவு குழந்தைகள் இலகு வாக விலகிவிடுவார்கள் என்பதும் உண்மை.

எமது வீட்டில் முற்றிலும் மாறுபட்ட சூழலையும் பழக்க வழக்கங்களையும் காணும் எமது குழந்தைகள், விடிந் ததும் வேற்று உலகில் தனிமையாக விடப்படுகின்றார்கள்.

வளர்ந்தவர்களால், வந்த புதிதில் உணரப்பட்ட அதே தனிமையும் வேற்றுமையும்!!

நாம் அதைச் சகித்துக் கொண்டோம். சமாளித்துக் கொண்டோம். ஆனால் எம் குழந்தைகள்?

ஆயாவைத் தன் பக்கம் இழுக்க தம் சக்திக்கு எட்டியபடி முயற்சிக்கிறார்கள். சம்பளம் பெறும் ஆயாவோ மற்றைய குழந்தைகளையும் கவனிக்க வேண்டிய நிலையில் உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் எமது குழந்தையின் விரக்தி ஏனைய குழந்தைகள் பக்கம் திரும்புகிறது....

இதனால் புத்தகக் கிழிப்பு...... பொம்மை பறிப்பு..... குழந்தைத்தனம்..............

ஆயாவின் முறைப்பாடு............ அது....... இது.........

பெற்றோராகிய நாம் குழந்தைகள் என்றால் அப்படித்தான் என்று கூறுகின்றோம்.

எமது குழந்தைகள் சேர்ந்து போகிறார்கள் இல்லை, விட்டுக் கொடுக்க மறுக்கிறார்கள், எனவே இக்குழந்தைகளுக்கு விசேட வகுப்புகள் மூலம் உதவி அளிக்க வேண்டும் என்று பராமரிப்பாளர்கள் கூறுகிறார்கள்.

அதாவது எமது குழந்தைகளின் உளவிருத்திக்கு, அமைதியற்ற தன்மையைப் போக்க, உதவி பெற விசேட சிறுவர் உளவியல் நிபுணர் நிறுவனத்தின் உதவி கோரப்படுகிறது.

வழமை போல பராமரிப்பு நிலையத்திற்கோ அல்லது சிறுவர் பாடசாலைக்கோ செல்லும் குழந்தைகள் கிழமையில் ஒன்று அல்லது இரண்டு மணித்தியாலங்கள் உளவியளாளரின் பயிற்சிக்கு உள்ளாக்கப்படுவார்கள்.

பெற்றோர் இதற்குச் செலவு செய்ய வேண்டியதில்லை. அரசாங்கமே பொறுப்பு என்பதால் கவலையும் இல்லை.

எமது வசதிக்கும் வாழ்வுக்குமாக ஒரு பாவமும் அறியாத எமது குழந்தைகளின் எதிர்காலத்தையே நாசமாக்குகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மைப் பொறுத்தவரையில் சூனியமான எதிர்காலம்.

எமக்கு எங்கே விடிவு அல்லது எமது நாடோடித் தனத்திற்கு எங்கே முடிவு எனத் தீர்மானிக்கத் தவறுகிறோம்.

எமது தாயகம் தான் எமக்குப் போக்கிடம் என்பதை ஏற்க ஏனோ தயங்குகிறோம்.

இதனால் எமது குழந்தைகளுக்கு தமிழைப் படிப்பிக்கா மலேயே விட்டுவிடுகிறோம்.

எமக்கு அல்லது எமது பிள்ளைக்கு சுவிஸ்தான் எதிர் காலம் என ஏனோ எம்மையறியாமலேயே எண்ணிக் கொண்டு, பிள்ளைகளின் எதிர்காலம் "டாச்" சில்தான் என்று குழந்தை பராமரிப்பு நிலையத்திற்கு அவர்களை அனுப்பி எமது கடமையைப் பூர்த்தி செய்ய முனைகின்றோம்.

அவர்கள் அரைகுறையாக அந்தப்பாசை கதைக்கும் போது "பிடிச்சிடுங்கள் எங்கடையள்" என்று பெருமைப்படு கின்றோம்.

இங்குள்ள பராமரிப்பு நிலையங்களோ, சிறுவர் பாட சாலைகளோ, பிள்ளைகளுக்கு மொழி படிப்பிப்பதில்லை என்ற விடயம் பல பெற்றோருக்குத் தெரிவதில்லை.

பராமரிப்பு நிலையத்தில் பெற்றோரைப் பிரிந்த பிள்ளைகளை பராமரிப்பதுடன் அடுத்த வருடம் சிறுவர் பாடசாலைக்குப் போகவிருக்கும் பிள்ளைகளை அதற்குத் தயார் செய்கிறார்கள்.

சிறுவர் பாடசாலையில் ஒழுக்கம், அமைதி பேணல், சேர்ந்து விளையாடல், அவதானித்தல், பார்த்துச் செய்தல், அபிநயம் பிடித்தல், நிறம் அறிதல், சூழல் அறிதல் போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய விடயங்களைச் சொல்லிக் கொடுப்பதில் முதல் வருடத்தையும் பாடசாலைச் சூழலைத் தெரிந்து கொள்ள இரண்டாம் வருடத்தையும் பயன்படுத்துவர். பிள்ளைகள் முதலாவது எழுத்தை பாடசாலையில் வைத்தே படிப்பார்கள்.

சிறுவர் உளவியல் நிலையத்தில் எமது மழலைகட்கு எவ்வாறு பயிற்சி அல்லது உதவி வழங்கப்படுகிறது என்பதைச் சற்று விரிவாகப் பார்த்தோமானால், எமக்கு அழுவதா அல்லது சிரிப்பதா எனப்புரியாத ஒரு நிலையே ஏற்படும். ஆசிய அறிவோ அல்லது தமிழ்க் கலாச்சார அறிவோ இல்லாத ஒருவரால் எமது குழந்தைக்குத் தனியாகவோ அல்லது வேறு சில குழந்தைகளுடன் சேர்த்தோ பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியின் முதல் கட்டமாக ஐரோப்பிய வீடொன்றில் உள்ள நாளாந்தப் பழக்க வழக்கங்களைப் பயிற்றுவிக்க முயல்கிறார்கள்.

அதாவது எமது குழந்தைகட்கு எவ்வாறு மேசையில் இருந்து சாப்பிட வேண்டும்; கரண்டி, கத்திகளை எப்படிப் பாவிக்க வேண்டும் எனச் சொல்லிக் கொடுக்க முனைகின்றார்கள். இவை தமிழர்கள் வீடுகளில் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்பதால் எமது பிள்ளைகளுக்கு அவற்றில் அக்கறை ஏற்படுவதில்லை. ஆனால் இது பயிற்றுவிப்பாளரைப் பொறுத்தவரையில் பிள்ளையில் உள்ள ஒரு பெரிய குறைபாடாகும்.

எமது வீடுகளில் குழந்தைகள் கத்தரிக் கோல், கத்தி போன்றவற்றை எடுத்து விளையாட நாம் அனுமதிப்பதேயில்லை. ஆனால் சிறுவர் நிலையங்களில் இவற்றைச் சாதாரண கருவிகளாகக் கருதி வெட்டி விளையாட அனுமதிக்கிறார்கள். ஏனைய குழந்தைகள் கத்தரிக்கோலை லாவகமாகப் பயன்படுத்தும் அதேசமயம் எமது பிள்ளைகள் தாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக வெட்டித் தள்ளுகிறார்கள். இதுவும் ஒரு குறை பாடாகக் கொள்ளப்படுகிறது.

பொருட்களை இனம் காணுதல் எனும் தலைப்பில் பலவகையான பொருட்களைக் கொடுத்து எவை எவை எங்கெங்கு இருக்க வேண்டும் என்ற பயிற்சியுமுண்டு. பல விடயங்களைக் காட்டிக் கொடுக்கிறார்கள். பின்னர் செய்து காட்டுமாறு கேட்கிறார்கள். ஒரு வீட்டின் படத்தைக் கொடுத்து விட்டு சில பொருட்களையும் கொடுத்து விட்டு வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் அல்லது தோட்டத்தில் இருக்க வேண்டிய பொருட்களை அந்தந்த இடத்தில் வைக்குமாறு கேட்கப்படுகிறது. எல்லாப் பிள்ளைகளும் சரியாகச் செய்து விட்டார்கள். ஆனால் பாவம் இனம் காணுவதில் அறிவு குறைந்த தமிழ்ப்பிள்ளை மாத்திரம் தவறு விட்டு விட்டது. எனவே அப்பிள்ளைக்கு விசேட உதவி தேவையெனத் தீர்மானிக்கப் படுகிறது. அது சரி அப்பிள்ளை விட்ட தவறு என்ன?

வீட்டிற்கு வெளியே நாயைத் தூக்கி வைத்ததுதான் தமிழ்ப் பிள்ளை செய்த தவறாகும்.

அப்பிள்ளை இங்கு பிறந்திருந்தாலும் கூட எமது வீட்டுச் சூழலில் நாய்க்கு வீட்டிற்குள் அனுமதியில்லை என்பதைத் தெரிந்து கொண்டதுதான் அப்பிள்ளை செய்த பாவம்.

தமிழ்ப் பெண்கள் சேலை கட்டும் போது அவர்களுக்கு ஏற்படும் பூரிப்பும் பெருமையும் அளவற்றது.

ஆனால் அதற்காக அவர்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப் பமோ மாதம் ஓரிருதடவைகள்தான்.

தமது ஆசையைத் தங்கள் பிள்ளைகளுக்கும் எமது கலாச்சார உடைகளை அதுவும் எமது நாடுகளில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவழைத்த உடைகளை அணிவித்துப் பாடசாலைக்கு அனுப்பி வைப்பதன் மூலம் பூர்த்தி செய்து கொள்ள முயற்சிக்கிறார்கள். இதுவும் ஒரு பெரிய சிக்கலை ஏற்படுத்தி விடுகிறது.

எம்மில் சிலர் பிள்ளைகளிடமே “சட்டை கவனம்” என்று சொல்லி விடுகின்றோம். இதைப் பிள்ளை பாடசாலையில் கூறுகிறதோ இல்லையோ ஆசிரியர்கள் கவனமாக இருக்க வேண்டிய நிலைக்குத் தாமாகவே தள்ளப்படுகிறார்கள். ஏற்கனவே இருக்கும் பிரச்சனைகளுக்குள் அவர்களுக்கு இதுவும் ஒரு புதுப் பிரச்சனை. ஏனைய பிள்ளைகள் தோட்டத்தில் விளையாடும் போது தமிழ்ப்பிள்ளை மாத்திரம் அது அணிந்திருக்கும் உடைக்காகத் தடுக்கப்பட வேண்டிய நிலையேற்படுகிறது. இது பிள்ளையின் மனத்தில் ஓர் ஏக்கத்தையும் எரிச்சலையும் ஏற்படுத்தி விடுகிறது.

நாங்கள் எமது குடும்பப் பிரச்சனைகளை பிள்ளைகளின் முன்னிலையிலேயே தீர்த்துக் கொள்கிறோம். இதனை அவதானித்துக் கொண்டிருக்கும் பிள்ளைகளின் பிஞ்சு உள்ளத்தில் ஆழமான தாக்கத்தினை அது ஏற்படுத்துவதை நாம் அறிவதில்லை. அல்லது அறிய விரும்புவதில்லை. அல்லது அது பற்றி எமக்கு அக்கறை இல்லை.

“விடியப் போய் முறி முறியெண்டு முறிஞ்சிட்டு நாங்கள் வாறம்” எதைப் பார்க்கிறது?

உண்மைதான், அப்பாவும் அம்மாவும் நாள் முழுக்க முறியினம். ஆனால் யாருக்காக முறியினமோ அவையைப் பற்றி அவைக்கு அக்கறையில்லை.

வீட்டில் நடந்த சம்பவங்களுடன் விடிந்ததும் பாடசாலைக்குப் போகும் பிள்ளை ஏதோ ஒருவித கவலையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்கின்றது. ஆனால் அதைச் சரிவர வெளிக்காட்டத் தெரியாமல் தனக்குத் தெரிந்த வருத்தங்களை எல்லாம் ஆசிரியரிடம் கூறி அன்று வைத்தியரிடம் போக வைக்கிறது.

மறுபுறத்தில் நாம் வேலையால் வீடு வந்த களைப்பையும் எமது வீட்டுக் கவலையையும் போக்கும் முகமாக வீடியோவைப் போடுகிறோம்.

படம் முடிய பத்து அல்லது பதினொரு மணியாகி விடும். எமது பிள்ளையும் எங்களுடன் சேர்ந்து படம் பார்ப்பதை நாம் தடுப்பதேயில்லை.

"அதுகள் நித்திரை வந்தால் போய்ப் படுக்குங்கள் தானே" என்று விட்டு விடுவோம்.

மறுநாள் காலையில் நாம் வேலைக்குப் போகமுன்னர் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பியாக வேண்டும் என்பதால் விரைவாக எழுப்பி "அன்பாக" அனுப்பி வைக்கிறோம்.

சோர்வாகப் பாடசாலைகுப் போகும் பிள்ளை, வகுப்பில் சுறுசுறுப்பின்றி தூங்கி விழுந்தபடியும் இருக்கும். அங்கு படுக்க அனுமதிக்கப்படும் அதே சமயம் குறிப்புப் புத்தகத்தில் பதிந்தும் வைக்கப்படும்.

கிழமையில் பெரும்பாலான நாட்கள் சோர்வாகவோ அல்லது (காலையில்) வருத்தமாகவோ பிள்ளை வருவதால் பிள்ளைக்கு நிச்சயமாக உடல் சம்பந்தமான அல்லது உளச்சம்பந்தமான வருத்தம் இருக்க வேண்டும் என அவர்கள் தீர்மானிப்பதில் யாரும் தவறு காணமுடியாது.

எம்மைப் பொறுத்தமட்டில் பாடசாலைக்கு எமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையை அனுப்பி வைத்தால் சரி. பிள்ளைக்கு படிப்பு சம்பந்தமான சகலமும் கிடைத்துவிடும். வீட்டில் உணவும் உடையும் கொடுக்கின்றோம். பாடசாலைக்குக் காசு கட்டுகிறோம். இதை விட வேறு என்ன வேண்டும்? நாம் காசு கட்டுவதால் பாடசாலையில் உள்ளவர்கள் எம்மிடம் சம்பளம் வாங்குபவர்களாகி விடுகிறார்கள். அதாவது அவர்கள் எங்கள் வேலைக்காரர்கள்; எங்கள் பிள்ளைகளைப் பராமரிப்பதே அவர்களின் வேலை. எனவே அவர்களை விடச் சற்று உயர்ந்த அந்தஸ்து எமக்குக் கிடைத்து விடுகிறது.

இதனால் தானோ அல்லது உண்மையிலேயே மொழிப் பிரச்சனை காரணத்தாலோ எமக்குக் கிடைக்கும் பெற்றோர் ஆசிரியர் கலந்துரையாடல் அழைப்பிதழுக்கு மதிப்பே கொடுப்பதில்லை. எல்லாப் பெற்றோரும் கலந்து கொள்ளும் அந்நிகழ்ச்சியில் நாங்கள் மட்டும் கலந்து கொள்வதில்லை. வேலைத்தள விடுப்பின்மை ஒரு காரணமாகக் காட்டப்படுகிறது.

பிள்ளையின் விபரங்களைக் கூறுவதற்குப் பெற்றோரைச் சந்திக்க முடியாத நிலையில் ஏனைய உதவி நிலையங்களை நாட வேண்டிய நிலைமைக்குப் பராமரிப்பாளர்கள் அல்லது ஆசிரியர்கள் தள்ளப்படுகிறார்கள்.

இந்த வேதனைகள் எல்லாம் சுவிஸில் உள்ள தமிழ்ப் பிஞ்சுகளுக்கு மாத்திரம்தானா? ஏனைய நாடுகளில் எப்படி?

எமது பிள்ளைக்குத் தமிழ் தெரியாது எனக் கூறுவதில் பெருமைப்படும் பெற்றோர் இலண்டனில் இருப்பதாகக் கேள்விப்பட்டோம். இந்த நிலைமைக்கு இன்னமும் சுவிஸ் வரவில்லை.

(மனிதம் : சுவிஸ், மார்ச்சு – ஏப்பிரல் – 1990)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22. உதவி

இரவு தொலைக்காட்சியில் மூழ்கி இருந்தவனைத் தொலைப்பேசி தொந்தரவு செய்தது.

"ஹலோ...."

"ஹலோ...... நான் சங்கர் கதைக்கிறன்..... எனக்கொரு உதவி நீங்கள் கட்டாயம் செய்ய வேணும்.... அதுதான்...."

"கன காலத்திற்குப் பிறகு டெலிபோன் எடுக்கிறீங்கள்... எடுத்த உடன உதவி எங்கிறீங்க.... என்ன விசயம்? ஏலுமென்டாச் செய்யிறன்."

"ஒண்டுமில்லை... என்ற மச்சாள் பெட்டை உங்க வந்து நிக்குது... அதுதான் அவவ போடரால இஞ்சால அனுப்பி விடவேணும்...... கனக்கப் பேரோட கதச்சுப் போட்டன்..... போடர் செய்யிறவங்கள் எல்லாம் பயப்பிடுறாங்கள்...... என்ன செய்யிறதொண்டு தெரியல்ல....."

"உங்கட இடத்திலதானே இந்த வேலை செய்யிர ஆக்கள் கனபேர் இருக்கினம். நீங்க என்னட்டக் கேக்கிறீங்க?"

"ஓம் ஓம் அது சரிதான் ஆனா ஒண்டும் சரிவருதில்லை. அதுதான் கடைசியா உங்கட்ட வந்தனான். உங்கட நம்பரும் மாறீட்டுது. என்னட்டப் பழைய நம்பர்தான் இருந்தது. அதில ரேப் தான் கதைக்குது. பிறகு பாலனிட்டத் தான் உங்கட புது நம்பர் எடுத்தநான்."

"........."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஹலோ..... கேக்கிறன் எண்டு குறை நினைக்காதேங்கோ...... உங்கட மகளின்ற காட்டில கூட்டி வரலாமே? நான் செலவெல்லாம் உடன தருவன். ஒரு பிரச்சனையும் இல்லை."

"என்ன விசர்க் கதை கதைக்கிறீங்க? இதென்ன சின்ன விசயமே? நாங்க கதைக்கிறதக் கேட்டாலே பிடிச்சுக் கொண்டு போடுவாங்கள் தெரியுமே? இதெல்லாம் சரிவராது..... வேற ஆளப் பாருங்கோ."

".........."

"ஹலோ என்ன சத்தத்தைக் காணேல்ல? ஹலோ?"

"இல்ல.... நீங்க சொல்லுறதும் சரிதான்...... பெடியனும் பாவம் முந்தி உங்க இருந்தவனாம்... திரும்பவும் வரேலாது.... பெட்டையும் வெளிநாட்டுக்குப் புதுசு. ஒரே அழுகையாம். எனக்குத் தெரிஞ்ச வேற புத்தகக்காரரும் இல்லை..... அதுதான் உங்கட்டக் கேட்டுப்பாப்பம் என்டு எடுத்தநான். வேற ஆரும் செய்யக்கூடிய ஆக்கள் இருந்தாச் சொல்லுறீங்களே?"

"அப்படி ஆரையும் கேள்விப்பட்டா விசாரிச்சுச் சொல்றன்."

"சரி அப்ப பிறகு எடுக்கிறன்"

"ஓம் ஓம்"

LEBARA LIBRARY Education ... Center 87, Kam... ...kulam, ...

தொலைபேசித் தொடர்பு அறுந்து விட்டது. ஆனாலும் தொலைபேசிச் செய்தி அவனது உள்ளத்தை விட்டுத் தொலைந்த பாடில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் அதிகாலை வழக்கம் போலப் புகையிரதத்தில் பயணம் செய்து கொண்டிருந்த போதும், மதியம் சாப்பிடும் போதும் அந்தச் சம்பாசனையே அவனை வட்டமிட்டது.

ஒருக்காச் செய்து பாப்பமே? சீச்சீ.... எவ்வளவு பிரச்சனை வரும்? என்ன பிரச்சனை? குடும்பத்தோட கார்ல போகேக்க மூத்தவளை இறக்கி விட்டுட்டு அந்தப் பிள்ளையை ஏத்திக் கொண்டு போவம்.... வழக்கமாப் போறநாங்கள்தனே. நெடுகச் செக் பண்ணமாட்டாங்கள். சில வேளை சும்மா மறிச்சுப் புத்தகத்தைப் பாத்திட்டுத் திருப்பித் தருவாங்கள். பிள்ளைகளைப் பாக்கிறதே இல்லைத்தானே. சரி....... எண்டாலும் இந்த முறை பாத்திட்டா?...... ஐயோ நினைக்கவே பயமாகக் கிடக்கு. இவ்வளவு நாளைக்குப் பிறகு இப்பதான் கொஞ்சம் சம்பளமும் கூட்டித்தாறன் எண்டு முதலாளியும் சொல்லி இருக்கிறான்.

பிடிபட்டுதோ வேலையும் போச்சு எல்லாம் போச்சு.

வேலை மட்டுமே? இவ்வளவு காலமும் இருந்த மதிப்பு நம்பிக்கை எல்லாம் துலைஞ்சுது. உடன வீட்டை அனுப்பிப் போடுவாங்கள் குடும்பத்தோட....

கடவுளே! வேண்டாம் நினைக்கவே பயமாக் கிடக்கு!

சங்கர் என்ன வேணுமென்டாலும் நினைக்கட்டும். அவனுக்கென்ன சரிவந்தால் சந்தோசப்படுவான். பிழைச்சுப் போனா? இவர் என்ன செய்வார்? அவ்வளவுதான். இந்த வேலையும் வேண்டாம் ஒண்டும் வேண்டாம் என்று தனது எண்ண அலைகளக்கு முற்றுப் புள்ளி வைக்க முனைந்தான்.

ஆனால் நன்கு வளர்ந்து படரத் தொடங்கிவிட்ட புற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் போல மீண்டும் மீண்டும் அது தனது அகலக் கரங் களால் ஆக்கிரமிக்கத் தொடங்கியது அவனை.

வேலை முடிந்து வீடு திரும்பும் போதும் அதே நினைவிலேயே இருந்தான் அவன்.

திட்டங்களை மாற்றி மாற்றித் தீட்டிப் பார்த்தான்.

மற்றவங்க செய்யிறாங்க தானே? எனக்கு மட்டும் என்ன பயம்? நான் என்ன மற்றவங்களப் போல தொழிலா செய்யப் போறன்? சங்கருக்கு உதவியாத் தானே செய்யப் போறன்? சங்கருக்கு நான் உதவி செய்ய வேண்டியவன் தானே? அந்த உரிமையில் தானே அவனும் துணிந்து கேட்டான் என எண்ணிக் கொண்டு இருக்கும் போதே புகையிரதம் ஏதோ ஒரு தரிப்பிடத்தில் நிற்பதற்கு மெதுவாகியது.

எண்ணக் கனவுகள் குலைய கண்ணாடி யன்னல் வழியே வெளியே பார்த்தான்.

ஐயோ....!!!! அங்கே அவன் கண்ட காட்சி... ....

உச்சி முதல் உள்ளங்கால்கள் வரை உறையச் செய்தது அவனை.

இதயம் பல மடங்கு வேகமாக அடிக்கத் தொடங்கி விட்டது.

தனது இதயம் துடிக்கும் சத்தம் அருகில் உள்ளவருக்குக் கேட்டுவிடுமோ எனப் பயந்தான் அவன்.

சுற்றும் முற்றும் ஒரு முறை பார்த்தான். மீண்டும் யன்னல் வழியே அந்தக் காட்சியை அவனால் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை.

பயம் எல்லை மீறித் தொண்டை வறண்டது.

எச்சில் விழுங்கக் கூட அவனால் முடியவில்லை.

என்ன நடக்கப் போகுதோ தெரியவில்லையே என நினைத்தவனது மூளையில் மின்னல் கீற்றாக ஒரு உணர்ச்சி உறுத்தியது.

அவனால் சிரிக்கவும் முடியவில்லை அழவும் முடியவில்லை.

தனது முட்டாள்தனத்தை எண்ணிக் கொண்டான்.

நான் என்ன ஆள் கடத்தும் வேலையா செய்தேன்?

செய்யலாமா என்றுதானே யோசித்தேன்?

நான் நினைத்தவைகளை எல்லாம் அப்படியே ஒலிப் பதிவு செய்து தொலை நகலெடுத்து யாரோ தகவல் கொடுத்து என்னைப் பிடிப்பதற்காகப் புகையிரத நிலையத்தில் இரு பொலீஸ்காரர்கள் காத்திருப்பதாக அல்லவா நினைத்து விட்டேன்? நான் உண்மையிலேயே முட்டாள்தான் என்று நினைத்தவன் மீண்டும் யன்னலூடக அந்த இரு பொலீஸ் காரர்களையும் பார்த்தான்.

LIBRARY Education Resource Center (ERC) Kilinochchi.

சற்று முன்னர் பயங்கரமாகத் தெரிந்த அதே பொலீஸ் காரர்கள் இப்போது சாதாரண போலீசாகவே அவனுக்குத் தெரிந்தனர்.

மீண்டும் ஒரு முறை எண்ணிப் பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கற்பனைக்கு பயப்படும் நான் உண்மையில் இதை எப்படிச் செய்து முடிப்பேன்?'

ஒவ்வொரு விசயத்தையும் செய்ய ஒவ்வொரு தகுதி தேவை. இதைச் செய்ய தனக்குத் தகுதி இல்லை என்று நினைத்தான்.

'உதவி செய்ய நினைத்தேன். உபத்திரவத்தில் மாட்ட மாட்டேன் என்று நினைத்தேன்.

ஆனால் கற்பனை உதவியே என்னை வாட்டி வதைத்து விட்டதே!

இந்த அனுபவமே எனக்குப் போதும்' என்று நினைத்த வன் பெரு மூச்சு ஒன்றுடன் தனது உதவி செய்யும் எண்ணத்தை ஒதுக்கி வைத்தான்.

(ஈழநாடு, பாரீஸ் – 23. 04. 1993)

LEBARA LIBRARY
Education Resource Center
(ERC)
87, Kanahambigaikulam,
Kilinochchi.

005339

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Lebara Library
# Kilinochchi

## இரவல் வழங்கும் பகுதி

இப்புத்தகம் கீழ் குறிக்கப்பட்டுள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். குறித்த தவணைக்குள் கொடுபடாத புத்தகம் ஒவ்வொன்றுக்கும் நாள் ஒன்றுக்கு குற்றப் பணமாக ரூபா 01/- அறவிடப்படும்.

| | | |
|---|---|---|
| 27.12.2014. | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நானும்
## என் நன்றிகளும்

திருக்கேதீஸ்வரத்தின் மாளிகைத் திடலில் இருந்த மனையில் 1951ஆம் ஆண்டு ஆனி 23இல் இவ்வுலகை நான் காண உயிரும் உணர்வும் தந்த என் பெற்றோருக்கும்,

அடம்பன் மத்திய மகாவித்தியாலயம், மட்டுவில் ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம், யாழ்ப் பல்கலைக்கழகம் என்பவற்றில் என் கல்விக்குப் பாதை காட்டிய ஆசிரிய மேதைகளுக்கும்,

எனக்குப் படிப்பித்த என்னுடன் படித்த நண்பர்களுக்கும்,

நான் உயரக் கை தந்த என் குடும்பத்தினர்க்கும், உடன் பிறப்புகளுக்கும்,

என் அனுபவ ஆக்கங்களை வெளியிட்ட பத்திரிகை, சஞ்சிகைகளுக்கும்,

நான் ஆசிரியனாய்ப் பணியாற்றிய வடமாகாண தனியார் கல்வி நிலையங்கள், யாழ் மத்தியக் கல்லூரி, சென் ஜோன்ஸ் கல்லூரி, நெல்லியடி மத்தியக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆகிய கல்லூரிகளுக்கும்,

நான் விரிவுரையாளனாய்ப் பணியாற்றிய கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கும்,

அடைக்கல நாட்டில் என்னிடம் மொழிப் பயிற்சி, கணினிப் பயிற்சி பெற வந்து பெருமைப் படுத்திய அனைவருக்கும்,

உலகில் முதல் முயற்சிகளாக 1987இல் இத்தாலி, பிரெஞ்சு, யேர்மன், தமிழ் ஆகிய 4 மொழிகளில் ஒரே புத்தகமாகச் சாரதிப் பயிற்சிப் புத்தகத்தையும், யேர்மன், தமிழ் என இரு மொழிப் புத்தகங்களாக 1990இல் திருக்குறளையும், 1993இல் நாலடியாரையும் வெளியிட ஆக்கமும் ஊக்கமும் தந்த அனைவருக்கும்,

சுவிஸ் பாசல் பல்கலைக்கழகம், கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் பல ஐரோப்பியப் பல்துறைக் கல்வி நிறுவனங்களிலும் தொழிற் பயிற்சிகளும் பட்டங்களும் பெற வாய்ப்பு வழங்கிய அனைவருக்கும்,

இத்தொகுப்பு உருவாகக் காரணமானவர்களுக்கும், கருத்தினைப் பார்த்தே புரியவைத்த ஓவியர் ராஜேவிற்கும், அழகுற அச்சில் வர உதவிய காந்தளகத்திற்கும், வாழ்த்துரைகள் வழங்கிய இனியவர்களுக்கும்,

வாசகராகிய உங்களுக்கும்....

என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காந்தளகம்
சென்னை 600002.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org